# கேசவ விழுது




உயர்திரு. ஐயம்பிள்ளை கேசவன்

அவர்களின்

## மணிவிழா சிறப்பு மலர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேசவ விழுது

உயர்திரு ஐயம்பிள்ளை கேசவன்

அவர்களது

## மணிவிழா சிறப்பு மலர்


வெளியீடு

மணிவிழாக் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அகவை அறுபதிலே அகமகிழ்ந்து
வாழ்த்துகின்றோம்.
அவனியிலே புகழோங்கி ஆனந்தமாய் வாழ்ந்திடுவீர்
அருமை மைந்தர்களும் அன்பு நிறை உறவுகளும்
பெருமை சிறந்தோங்க பெருவாழ்வு வாழ்ந்திடுவீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேசவ விழுது

பதவிநிலை பல கண்டு பணிகள் செய்தோன்
பண்பிலே மகுடமென உயர்ந்த செம்மல்
அறுபதிலும் தளராத உடற்கட்டும் உளநலமும்
உறுதியான செயற்பாடும்
உன்னதமாய்க் கொண்டோன்
பழுதிலாத பணி செய்து உயர்ந்தே இன்று
முழுமதியாய் நிறைவுடனே பொலிந்து நின்றான்
அகவை அறுபதிலே பணி நயந்தே நாம் இன்று
அகத்திருக்கும் சிந்தனைகள் சிறப்பாய்ப் பதித்து
கேசவ விழுது என்ற மணியான மலர் தன்னை
உங்கள் கரங்களிலே சமர்ப்பிக்கின்றோம்.

-மலர்க் குழு-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரின் உள்ளே...

- **ஆசிச்செய்திகள்**
    - சிவசிறி பிரதீபக் குருக்களின் ஆசியுரை
    - பங்குத்தந்தையின் ஆசிச்செய்தி
    - சுமுகலிங்கம் சிவாச்சாரியாரின் ஆசிச்செய்தி
- **வரலாற்றுப் பார்வை**

- **வாழ்த்துச் செய்திகள்**
    - கேசவ சேவை
    - கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி
    - வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி
    - உண்மையாக வாழ்ந்து காட்டியவர்
    - பணி ஓய்வு நிறைவைத் தரட்டும்
    - வாழ்த்துச் செய்தி – திரு.க.முருகவேல்
    - மணிவிழா வாழ்த்துச் செய்தி – திரு.மு.சந்திரகுமார்
    - வாழ்த்துச் செய்தி – திரு.த.அரியரத்தினம்
    - மணிவிழா நாயகனை மனதார வாழ்த்துகின்றேன்
    - அர்ப்பணிப்பு மிக்க சேவையாளன்
    - வாழ்த்துச் செய்தி – திரு.து.இளங்குமரன்
    - வாழ்த்துச் செய்தி – திரு.நா.கணேஸ்வரநாதன்
    - மணிவிழா வாழ்த்துக்கள் - திரு.ஆ.உதயணன்
    - கரைச்சிக் கோட்டக் கல்விப்பணிப்பாளரின் எண்ணத்திலிருந்து...
    - திரு.ஐ.கேசவன் அதிபர் அவர்களின் மணிவிழா வாழ்த்துச் செய்தி
    - மணிவிழா வாழ்த்துச் செய்தி-திரு.மு.எமிலியாம்பிள்ளை
    - வாழ்த்துரை – Dr.A.நிருபனா
    - வேரவில் மண்ணின் பெருமை அதிபர் திரு.ஐயம்பிள்ளை கேசவன்
    - ஆளுமை மிக்க அதிபர்
    - வாழ்த்துச் செய்தி –திரு.கு.கனகலிங்கம்
    - மணிவிழா வாழ்த்துச் செய்தி –திரு.அ.ஜெயக்குமார்
    - வாழ்த்துச் செய்தி – திரு.சி.ஸ்ரீரஞ்சன்
    - வாழ்த்துச் செய்தி-அருட்சகோதரி.சி.அனற்றாறோச்
    - பாராட்டி வாழ்த்துகின்றேன்
    - ஆற்றலும் அனுபவமுமுள்ள சிறந்த முகாமையாளர்
    - வாழ்த்துரை- செல்வி.பாக்கியராணி றிச்மண்ட்
    - வாழ்த்துச் செய்தி- திரு.ச.லதீஸ்குமார்
    - வாழ்த்துச் செய்தி- திரு.ம.மரியராசா
    - மணிவிழா காணும் எம் ஆசான் வாழிய வாழியவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளரின் வாழ்த்துச்செய்தி
- முன்னைய நாள் பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளரின் வாழ்த்துச் செய்தி – திரு.ச.அரிச்சந்திரன்
- முன்னைய நாள் பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளரின் வாழ்த்துச் செய்தி – திரு.க.காந்தரூபன்
- மணிவிழா நாயகனுக்கு வாழ்த்துப்பா
- மணிவிழா நாயகன்!
- வேரவில் மாதர் கிராம அபிவிருத்திச்சங்கத்தின் வாழ்த்துச் செய்தி
- மணிவிழா காணும் மண்ணின் மைந்தன்

## ➢ ஆசிரியர்களின் ஆக்கங்கள்

- பணி ஓய்வு பெறும் மணிவிழா நாயகனைப் பற்றி
- வாழ்த்தி வணங்குகின்றேன்
- மணிவிழா நாயகனை மாண்புடன் வாழ்த்துகின்றேன்
- முதல் விழுதாய் கேசவ விழுது…
- நிறைவான பணியால் நிறைந்தீர் எம் மனங்களில்
- கேசரம்
- சிறந்த முகாமையாளர்
- எளிமையின் இருப்பிடம் எங்கள் வித்தியாலய அதிபர் மணிவிழா நாயகன்!
- மணிவிழா நாயகன்!
- An Exemplary Teacher
- மணிவிழா வாழ்த்துக்கவி
- பிள்ளைகளின் கல்வியில் பெற்றோரின் பங்கு
- மணிவிழா காணும் தங்களை மாணவியாய் வாழ்த்துவதில் மனமகிழ்வு கொள்கின்றேன்
- பணிநிறைவுப் பாராட்டு கேசவன் ஆசிரியர்!

## ➢ பழைய மாணவர்களின் ஆக்கங்கள்

- சேவகராம் எம் கேசவன் அதிபர் அவர்கட்கு
- வாழ்த்துக்கவிதை
- மணிவிழா வாழ்த்துச் செய்தியுடன் நன்றி நவிலல
- மணிவிழா வாழ்த்துக்கவி
- ஆளுமைத் தடங்களை ஆழமாய்ப் பதித்தவரே
- மணிவிழா நாயகனுக்கு என் உள்ளத்திலிருந்து சில வரிகள்
- வாழும் போது வாழ்த்துவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ **பாடசாலை மாணவர்களின் ஆக்கங்கள்**

- கவிதை – பி.பிருந்தாஜினி
- அன்புத் தெய்வங்கள் நீங்கள்
- என் அதிபர்
- என் ஏக்கம்
- மணிவிழா வாழ்த்து
- கற்றார் பெருமை – ர.ஸாணுஜா
- எம் பள்ளியின் மகிமை
- நாடுகளின் தனிச்சிறப்புகள்
- வெற்றி மழை
- என் பாடசாலை
- என் மனதில் என் பள்ளி அதிபர்
- பறந்து போய் விடு! என் பட்டமே!
- அம்மாவின் அன்பு உள்ளம்
- மணிக்கணக்கின் மகத்துவம்
- ஓய்வு
- இணைய வழி இணைவோம்
- கற்றார் பெருமை- அ.நிர்மல அஸ்மிதா
- நவீன உலகமா? பழமை வாய்ந்த உலகமா?
- மணிவிழாவின் நாயகனே!
- அகரம் தொட்டு சஜகரம் ஏற்றுபவரே
- கற்றோர் சிறப்பு
- வாசிப்பின் மகிமை
- கவிதை – நீ.கிறிஸ்ரினா
- பணி ஓய்வு பெறும் அதிபருக்கு கவிதை சமர்ப்பணம்
- கல்விப் புலத்தில் மாணவர்களின் சாதனையைப் பாராட்டுதல் தவறாகுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழாக் குழு



இடமிருந்து வலம் இருப்பவர்கள்: வ.கணேசராஜு",யோ.அனுசுதாஸ்,ஐ.கேவசன்,த.பிரபாகரன்,சு.ஸ்ரீவதனன், இடமிருந்து வலம் நிற்பவர்கள் : செ.ஐஸ்வினி, க.ஹரிகரன், அ.விநோதன், பு.கயாளினி, பு.ஸ்ரீலிங்கம், றோ.ஒணாசிப்போர், ச.அன்ரனி பிரான்சிஸ்

## மலர்க் குழு



இடமிருந்து வலம் இருப்பவர்:கா.சந்திரபோஸ்,உ.ஜெயகாந்,ஐ.கேசவன்,த.பிரபாகரன்,செ.நிர்மலறொபின்சன்
இடமிருந்து வலம் நிற்பவர்கள்: கி.சறோஜினி, கா.கஜேந்தினி, த.வினோஜா, வ.கணேசராஜு",
அ.விநோதன், ச.கலைமதி,சு.நிதர்சனா.யூ.சயிந்தன்,க.ஹரிகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு



இடமிருந்து வலம் இருப்பவர்கள்: யோ.அனுசுதாஸ், ம.பிரணவன், ஐ.கேசவன், த.பிரபாகரன்,
உ.ஜெயகாந்,வி.கனகராசா
இடமிருந்து வலம் நிற்பவர்கள்: சி.பிரதாஸ்கரன், வ.செல்வகுமாரி,செ.நிர்மல றொபின்சன், கா.சந்திரபோஸ், இ.மதிவதனன், சு.அனுஷா

## ஆசிரியர் குழு



இடம் இருந்து வலம் இருப்பவர்கள் : கா.சந்திரபோஸ், பு.ஸ்ரீலிங்கம், ஜெ.ம.து.கலையழகன், செ.நிர்மல றொபின்சன், உ.ஜெயகாந், ஐ.கேசவன், த.பிரபாகரன், ம.பிரணவன், அ.அரிச்சந்திரன், அ.பகீரதன்,
இடம் இருந்து வலம் நிற்பவர்கள் : த.விதுராஜ், க.ஹரிகரன், செ.ஐஸ்வினி, வ.செல்வகுமாரி, ஆ.சாம்ஸ்ரீபன், த.நிசாந்தன், சு.ஸ்ரீவதனன், வ.கணேசராஜு, அ.மரியசிசிலியா, அ.விநோதன், பு.கயாளினி, சு.நிதர்சனா, ச.நிரோசன், தீ.யஸ்ரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மணிவிழா நாயகனின்

## சேவை நயப்பும் வாழ்த்துரைகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழாக் குழு

தலைவர் : திரு.த.பிரபாகரன்

செயலாளர் : திருமதி.க.ஹரிகரன்

பொருளாளர் :செல்வி.சு.நிதர்சனா

செயற்குழு உறுப்பினர்கள் : திருமதி.பு.ஸ்ரீலிங்கம்

திருமதி.அ.விநோதன்

திருமதி.வ.கணேசராஜு

திருமதிசு.ஸ்ரீவதனன்

செல்வி.செ.ஜஸ்வினி

செல்வி.பு.கயாளினி

திரு.யோ.அனுசுதாஸ்

திரு.ச.அன்ரனிபிரான்சிஸ்

திருமதி.றோ.ஒனாசிப்போர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவசிறி ஆ.பிரதீபக் குருக்கள் அவர்களின் ஆசிச்செய்தி



வேரவில் பிரதேசத்தில் கலங்கரை விளக்காக விளங்குவது வேரவில் இந்து மகா வித்தியாலயம். இப்பாடசாலையில் நீண்ட காலமாக ஆசிரியராக,அதிபராக கடமையாற்றிய திரு.ஐ.கேசவன் அவர்களின் சேவையை நயந்து வெளியிட இருக்கும் மணிவிழா மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். மிகவுயர்ந்த பக்தியும் ,அர்ப்பணிப்பும் ஆளுமையும் மிக்க இவரது எதிர்காலம் மேலும் சிறக்கப் பிராரத்திக்கின்றேன்.

'நீரும் நிலமும் நிலம் பொதியும் நெல் கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வும் - ஊரும்
வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமில்லார்க்கு என்றும்
தரும் சிவந்த தாமரையாற் தான்'

என்ற நல்வழி கூறும் கருத்துக்கு அமைய வஞ்சனையறியாதவர்க்கு கிடைக்கும் ஒப்பரிய நலன்கள் யாவும் இவருக்குக் கிடைத்தமையை யாவரும் அறிவர்.உத்தம பண்பாளர்.அவருடைய தன்னலமற்ற சேவையால் வேரவில் இந்து தலை நிமிர்ந்து நிற்கின்றதென்றால் மிகையாகாது. அவர் தம் பணி சிறந்து ஓங்கி வளர்ந்து நிற்பதால் மாணவ சமூகம் மகத்தானதாக விளங்குவது மறுக்க முடியாத உண்மை .ஆகவே அதிபர் அவர்களின் ஓய்வுக்காலம் நல்ல முறையில் அமைந்து சமூக சேவை உயர்ந்து சுகவாழ்வில் திளைக்க வேண்டுமென்று ஆசி நல்கி வாழ்த்துகின்றேன்.

சிவசிறி ஆ.பிரதீபன் குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருட்தந்தையின் ஆசிச்செய்தி



வேரவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.ஐயம்பிள்ளை கேசவன் கிளி/வேரவில் இந்து மகா வித்தியாலயத்தின் அதிபராக பணியாற்றி மணி விழா காண்கின்றார். அவரின் பணியை வலைப்பாடு புனித அன்னம்மாள் ஆலய பங்குத்தந்தையாக வாழ்த்துவதில் பெரும் மகிழ்வு கொள்கின்றேன்.

அந்தவகையில் 16.03.1990 இல் முதல் நியமனத்தில் கிளி/வேரவில் பாடசாலையில் ஆரம்பக்கல்வியில் பணியாற்றி 13.08.2002 கிளி/கிராஞ்சி அ.த.க.பாடசாலையில் பணியாற்றி 04.01.2006 மீண்டும் வேரவில் இந்து மகா வித்தியாலயத்தில் பணியாற்றி இன்று ஓய்வு பெறும் அதிபரை பாராட்டி வாழ்த்துகின்றேன்.

இவரது பணி இக்கிராமத்தின் முன்னேற்றத்திற்கு மிகவும் உதவியதுடன் சொந்த இடத்தில் பற்றும் பாசத்தோடும், கண்டிப்புடனும் மாணவச் செல்வங்களின் முன்னேற்றத்திற்கு உழைத்ததை பாராட்டி வாழ்த்துவதோடு, பல பொது நல சங்கங்களில்,அமைப்புக்களில் பொறுப்பேற்று மக்களின் நலனில் அக்கறை கொண்டு துணிவுடனும், நேர்மையுடனும் பணியாற்றி இன்று மணிவிழா காணும் அதிபரை மனமார வாழ்த்தி பாராட்டுகின்றேன். இவரது பணிக்காலத்தில் பாடசாலையில் புலமைப்பரிசில் சித்தி பெற்றோர், கா.பொ.த சா.தர, உயர் தரப் பாடப் பரீட்சையில் சித்தி பெற்றோர் மற்றும் விளையாட்டு,கலாச்சார நிகழ்வுகளின் சிறப்பான அடைவு மட்டங்கள் மூலம் இவரது கல்விப் பணியின் சிறப்பை காணக்கூடுமாக இருந்ததையிட்டு பாராட்டுகின்றேன்.

இவரது பணிக்காலத்தில் நானும் வலைப்பாடு புனித/அன்னம்மாள் ஆலயப் பங்குத்தந்தையாக இப் பாடசாலைக்கு பல முறை வருகை தந்திருப்பதுடன். இடம் பெறும் அனைத்து நிகழ்வுகளிலும் என்னை இவர் அழைத்து பாடசாலையின் வளர்ச்சிகளில் என்னையும் இணைத்து பணியாற்றியுள்ளார். இவர் மத வேறுபாடுகளைக் கடந்து எல்லோரையும் சமமாக மதித்து இணைத்து பணியாற்றியதை பாராட்டி வாழ்த்துகின்றேன்.

பாடசாலையின்,கிராமத்தின் எழுச்சிக்காக உழைத்தவர். இவரது பணி வாழ்வை வாழ்த்தி ஆசி கூறுவதில் மகிழ்ச்சியடைவதுடன் தொடர்ந்தும் இவரது பணியும் வாழ்வும் சிறக்க இறையருள் வேண்டுகின்றேன்.

அருட்பணி.அன்ரனிதாஸ் லியான்ஸ்
புனித/அன்னம்மாள் ஆலயம்
வலைப்பாடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அருள்மிகு வேரவில் வெள்ளிப்பள்ளத்து விரகத்திப்பிள்ளையார் தேவஸ்தானம்

[illegible]

Lion [illegible] MA [illegible] - JP

**Dipin Education Management, B.A, தமிழியல், அடியார்க்கு அடியவன்,**

[illegible]

[illegible]

Justice of the Peace - Regd.No: 03/09/NE/JA/P/171 -

Humanitarian Formulates Justice, Unity, Amity and Peace in this organization - Life member

Patron (Kilinochchi District) - FRAR/PA/DS/34

வேரவில், பூநகரி.

சிவன்கோவிலடி,
விநாயகர் வீதி,
சாவகச்சேரி.

[illegible] DHA/SGS/JA/135

தொ.பே 0764096121 [illegible] HA/JA/0361

திகதி ..................

## ஆசிச் செய்தி

அன்பே சிவம், அறிவே தெய்வம்

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

(திருமூலர்)

"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்......"

(திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார்)

"அவன் அருளாலே அவன்தாள் வணங்கி ........"

(மாணிக்க வாசகர் சுவாமிகள்)

ஒரு பொல்லாப்புமில்லை
முழுதும் உண்மை
எப்பவோ முடிந்த காரியம்
நாமறியோம். (செல்லப்பா சுவாமிகள் தொடர் சித்தர்)

பேரன்புடைய அன்பே சிவம்

எல்லாம் வல்ல வெள்ளிப்பள்ளத்து விரகத்தி பிள்ளையார், பூரணை, புஷ்கலை உடனுறை துத்திபில் ஐயனார் ஆகிய இறை மூர்த்தங்களை குல தெய்வமாகக் கொண்ட குடும்பம் திரு. திருபதி ஐயம்பிள்ளை நாகம்மா குடும்பத்தினர். சைவத்தமிழ் நீதிகளை தவறாது கடைப்பிடித்து வந்தவர்கள். நூற்றாண்டுகள் பாரம்பரியம் உடைய குடும்பத்தினர் விதானைத்தம்பி [illegible] குடும்பத்தினர். இவ்வாறு சிறப்புமிக்க குடும்பத்தில் செல்லப்பிள்ளையாக பிறந்தவர் ஐயம்பிள்ளை சேகரன் அவர்கள் ஆவார். ஆரம்பக் கல்வி தொடக்கம் இடைநிலைக்கல்வி வரை கிளி/வேரவில் இடத்தில் கற்று க.பொ.த சாதாரண தரத்தில் 1979ம் ஆண்டு சித்தியடைந்தார். யாழ்/[illegible] மத்திய கல்லூரியில் உயர்தரம் கற்று 1983ஆம் ஆண்டு சித்தியடைந்தார். 1990ஆம் ஆண்டு ஆசிரிய நியமனம் பெற்று கிளி/வேரவில் இந்து மகா வித்தியாலயத்தில் ஆசிரியர் ஆனார். இவரது கல்விகற்ற காலம் கிளி/வேரவில் இந்து மகா வித்தியாலயத்திற்கு பொற்காலமாக அமைந்தமை இங்கு குறிப்பிடப்படுகிறது. புதிய கல்விச் சீர்திருத்தம் அமுல்படுத்த வேண்டும் என்றால் கணிதம், விஞ்ஞானம் கற்பிக்கின்ற ஒருவர் பாடசாலையில் ஆசிரியராக இருக்க வேண்டும். இல்லையென்றால் க.பொ.த சாதாரணதர வகுப்பை புதிய கல்விச் சீர்திருத்தத்தின்படி கிளி/வேரவில் இந்து மகா வித்தியாலயத்தில் அமுல்படுத்த முடியாது. அப்போது கிளி/வேரவில் இந்து மகா வித்தியாலய அதிபராக திரு. இளையதம்பி அவர்கள் கடமையாற்றினார். அவர் நுணாவில் சாவகச்சேரியை வதிவிடமாகக் கொண்டவர். அவருடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றாகப் பழகுபவர் என் அறிமுகத்துடன் நண்பராகி விட்டார்)

அப்போது நான் 1974ம் ஆண்டு க.பொ.த (சா/த) கணித விஞ்ஞானத்துறையில் சித்தியடைந்தேன். [illegible] இந்துக் கல்லூரியில் க.பொ.த உ/த கணித பிரிவில் [illegible] இருந்தபோது அதிபர் இளையதம்பி அவர்கள், தான் இருக்கும் காலத்தில் கிளி/ கோணாவில் இ.ம வித்தியாலயத்தில் சாதனைகளை உருவாக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். அவர் என்னுடைய [illegible] தயவை [illegible] உயர்தர [illegible] கணித விஞ்ஞானத்துறையில் க.பொ.த [illegible] சிறப்புத்தேர்ச்சி பெற்று இப்போது [illegible] க.பொ.த உ/த பாடசாலைகளில் [illegible] கல்வி கற்று வருகின்றார். [illegible] கோணாவில் பாடசாலையில் உயர்தரப் பிரிவையும் [illegible] இப்போது [illegible] நடைமுறைப்படுத்த வேண்டும். அதற்கு [illegible] வேண்டும். [illegible] கற்பதனை விட இப்பாடசாலையில் [illegible] உருவாக்க [illegible] [illegible] வேண்டும் [illegible] எனது ஐயா, அம்மா [illegible] [illegible] கல்வி அதிகாரிகளையும் என் தந்தையாரையும் அழைத்துச் சென்று கல்வி [illegible] கிளி/கோணாவில் இந்து மகா வித்தியாலயத்தில் கணித, விஞ்ஞானம் ஆகிய பாடங்களைக் கற்பித்தற்கு அனுமதியைப் பெற்றுத் தந்தார். திரு.ஐங்கேசன் அவர்களும் கல்வி கற்றுக்கொண்டு இருந்தார். அவர்களுடைய [illegible] மாணவர்களுக்குக் கல்வியைக் கற்பிக்கும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. அந்த வகையில் அந்த மாணவர்கள் அனைவரும் சிறப்பான பெறுபேறு பெறும் வகையாக வகுப்பறைகள் நடைபெற்றுக்கொண்டு இருந்தன. [illegible] வேறு ஆசிரியர்கள் [illegible] வருகைத்தந்து சம்மதம் தெரிவித்து வருகை தந்தனர். அந்த வகையில் திரு. சிவஞானசுந்தரம், செல்வி. பரமேஸ்வரி துரைசாமி அவர்கள் பாடசாலைக்கு ஆசிரியர்களாக வருகை தந்தனர். இவ்வாறு திரு.ஐங்கேசனுடைய கல்வி வளர்ச்சி அமைந்தமை அவரது குல தெய்வங்களின் திருவருளே ஆகும்.

திரு.ஐங்கேசன் அவர்கள் கிளி/கோணாவில் இ.ம.வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் சாதனைகளை உருவாக்குவதில் முன்னின்று உழைத்து சாதனை ஆசிரியராகவும் திகழ்ந்தார். 80%மான மாணவர்களை சாதனைகளாக ஆக்கிய பெருமை இவருக்குரியதாகும். இவரது பணிக்காலத்தில் சிறப்பு சேவைகளின் பலனாக கிளி/கிராஞ்சி [illegible] பாடசாலைக்கு அதிபராகச் சென்றார். அங்கு பணியாற்றி மீண்டும் கிளி/கோணாவில் இந்து மகா வித்தியாலயத்திற்கு அதிபராக பொறுப்பேற்று 06.12.2023 அன்று தனது அரச பணிக்காலத்தை நிறைவு செய்து ஓய்வு பெறுவது அரச அங்கீகாரம் [illegible] இவ்வேளையில் இவரது ஓய்வுக்காலம் சிறப்புற நல் ஆசிகளைத் தெரிவிக்கின்றேன்.

இவருடைய நாமம் பற்றி நோக்கும் போது சத்தம் கடவுளிய சிதம்பரநாதர் [illegible] பேராக அமைகின்றது ஐங் - ஐம்பெரியவன், கேசன் - [illegible] சகுனங்களை விலக்குபவன், [illegible] - உண்ணும் உணவுகள் இறைவனாக சிறக்கச் செய்பவன், சாதுவன் - உறங்கும் போது சிறப்பான உறக்கத்தைத் தருபவன். இவ்வாறு சிதம்பரநாதரின் ஒவ்வொரு நாமத்திற்கும் தனித்துவமான பொருட்கள் உண்டு. கேசன் அவர்களுடைய பணியும் அவருடைய பெருந்தகை ஏற்ற துலங்குவதை உணர முடிகின்றது. அவ்வகை அவரது குல தெய்வங்கள் துணை கொண்டு **"இலை ஆடினாலும் ஈசன் செயல்"**

**"அவனின்றி ஓரணுவும் அசையாது"**

இவரது ஓய்வு காலம் சிறக்கவும்
சிந்தனைகள் சிறக்கவும்
உடல் உள நலம் சிறக்கவும்
இறைபணி சிறக்கவும்
சமூக சமய செயற்பாடுகள் சிறக்கவும்
இவ்வாறு அரிய பணிகள் பல செய்து பல்லாண்டு காலம் வாழ ஆசி கூறி அமைகின்றேன்.

**அன்பே சிவம் - அறிவே தெய்வம்**

***சமாதான நீதவான் Lion சிவஸ்ரீ கதிர் துரைசாமி சுப்ரமணியம் சிவாச்சாரியார் MA - J.P***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாற்றுப் பார்வை

" கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்

நற்றாள் தொழா அர் எனின்"

என்பது வள்ளுவப்பெருந்தகையின் வாக்கு ஆகும். இந்த வகையில் எமது அறிவுப் பசியைப் போக்கும் ஆலயமாக விளங்குவது கிளி/வேரவில் இ.ம.வி ஆகும்.

இப் பாடசாலையானது வன்னிப் பெருநிலப்பரப்பில் இயற்கை அன்னையின் எழில் கொஞ்சும் கிளிநொச்சி பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவின் தென்புலத்திலே முல்லை, மருதம், நெய்தல் ஒருங்கே அமையப்பெற்ற மன்னார் வீதிக்கு மேற்குப்புறமாக பன்னிரெண்டாம் கட்டைச் சந்தியில் இருந்து ஏழு கல் மைல் தொலைவில் அமைந்துள்ள இயற்கை அன்னையின் அரிய கொடையாக அமைந்துள்ள பழம்பெரும் வரலாற்றுப் பதிவுகளை தன்னகத்தே கொண்ட கிராமம் தான் ஈழவூர் என்ற சிறப்புப் பெயருக்கு உரித்துடையது வேரவில் கிராமம். இக் கிராமத்தின் அரிய பொக்கிசமாக அமைந்துள்ளது தான் இக் கிராமத்தின் கண்களாக கொள்ளப்படும் நூறு வருடங்களைத் தாண்டி பெருமிதத்தோடு விழுது பரப்பி வேர் ஊன்றி நிமிர்ந்து நிற்கும் மாணவர்களின் அறிவுப் பசியைப் போக்கும் பள்ளி கிளி /வேரவில் இந்து மகா வித்தியாலயமாகும்.

இப் பாடசாலையானது கி.பி 1900ம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்டு இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் அதை நிருபிப்பதற்கு ஏற்ற ஆதாரங்கள் போதாமையினால் இப் பாடசாலையில் புதிய கட்டிடத் திறப்பு விழாவிற்கான அழைப்பிதழ் எம் மூதாதையர்களினால் பாதுகாக்கப்பட்டு கைக்கு கிடைத்தமையினால் 1914/09/14 அன்று முத்துக் குமாரசுவாமி வித்தியாசாலை என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டதாக அறியக் கிடைக்கின்றது. ஆரம்பத்தில் (1-5) வரையான வகுப்புக்களைக் கொண்ட ஆரம்ப பாடசாலையாக இது அமைந்து காணப்பட்டுள்ளது. இவ்வாறு மாணவர்களின் அறிவுக் கண்களைத் திறந்து வளர்ந்து விருட்சமாகி பல அதிபர்களை உருவாக்கி அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவராலும் பல மாணவர்கள் சிறந்த கல்விமான்களாக உருவாக்கப்பட்டுள்ளனர். 1979ம் ஆண்டின் பின்பே எமது பாடசாலை கல்வித் துறையில் பெரும் வளர்ச்சியை அடைந்துள்ளது. இவ்வாண்டிலே தான் க.பொ.த (சா/தரம்) ஆரம்பிக்கப்பட்டு பல மாணவர்கள் பரீட்சையில் தோற்றி நல்ல பெறுபேறுகளைப் பெற்று பாடசாலைக்கும் எமது கிராமத்திற்கும் பெருமையைத் தேடித் தந்துள்ளனர். இது மட்டுமன்றி எமது கிராமத்திலும் எம்மைச் சூழவுள்ள அயல் கிராமங்களிலும் இருந்து மாணவர்கள் வந்து கற்பதற்கு எமது பாடசாலை பெரும் வரமாக அமைந்து நிற்கின்றது.

1983ம் ஆண்டிற்கு பின்பு எமது பாடசாலையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. புதிய அதிபர் இளமைத்துடிப்புள்ள சமூகத்தை கட்டி எழுப்ப வேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்ட ஆசிரியர் குழாமும் எமது பாடசாலைக்கு கிடைத்ததனால் எமது மாணவர் சமூகத்தை தட்டிக் கொடுத்து வளர்த்து கல்வியில் மட்டுமன்றி ஏனைய இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் சிறந்து விளங்கினர். இக் காலத்திலேயே அதிகளவான மாணவர்கள் க.பொ.த. (சா/தரம்) கல்வி கற்று உயர்தரத்திற்குச் சென்று தமது சமூகத்திற்கு சேவைகளை ஆற்றிக் கொண்டிருப்பதை நாம் இன்று காணக்கூடியதாகவுள்ளது.

1995ம் ஆண்டு எமது நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையினால் வலிகாமத்தின் இடப்பெயர்வு காரணமாக அங்கிருந்து இடம்பெயர்ந்த மக்களைத் தாங்கிநின்றது எமது வேரவில் இந்து மகா வித்தியாலயமே ஆகும். ஆலமரம் பாடசாலையாகவும் கட்டிடங்கள் அனைத்தும் இடம்பெயர்தோரை தாங்கும் நலன்புரி நிலையமாகவும் அமைந்திருந்தது. இந்த நிலையில் கல்விப் பணியினை ஆலமரத்தின் கீழ் சிறந்த முறையில் எமது ஆசிரியர் குழாம் ஆற்றி மாணவர்களை உயர்த்திநின்றது எனலாம். இவ்வாறு 1999ம் ஆண்டிலே எமது பாடசாலை அன்று இருந்த அதிபர் மற்றும் ஆசிரியர் குழாத்தின் முயற்சியினால் க.பொ.த.உயர்தரத்திற்கு தரமுயர்த்தப்பட்டதுடன் பாடசாலை கிளி /வேரவில் இந்து மகா வித்தியாலயமாக பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 1 C பாடசாலையாக மிளிர்ந்து நின்றது எனலாம். இதன் பின் மாணவர்களை வருடா வருடம் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி சாதனை படைத்து நிற்கின்றது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பாடசாலை இயங்கி வந்த காணி சிறிய காணியாக இருந்த காரணத்தினால் 2005ம் ஆண்டு எமது நிர்வாகம் பொறுப்பை ஏற்று அதிபர் அவருடன் இணைந்த ஆசிரியர் குழாம் எமது கிராமத்தின் சமூக ஆர்வலர்கள் அனைவரின் பெரும் முயற்சியினால் இன்று எமது பாடசாலை தற்போது இருக்கும் காணிக்கு நகர்த்தப்பட்டு இயங்கிவந்த நிலையில் 2008ம் ஆண்டு பாரிய இடப்பெயர்வை நாம் சந்திக்க வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டு மீண்டும் 2010ம் ஆண்டு எமது பாடசாலை மீள் இயங்கு நிலைக்கு வந்தது. தற்காலிக கொட்டகைகளில் தான் மாணவர்கள் கல்வி கற்று வந்தனர். அதன் பின் தென்கொரிய நாட்டின் உதவியுடன் எமக்கு மிகவும் அத்தியவசியமான இரண்டு கட்டிடம் அமைத்து தரப்பட்டது. இவ்வாறு எமது பாடசாலை பல சாதனைகளைப் படைத்து நிற்க ஆரம்பக் கல்வி முதல் உயர்கல்வி வரை கல்வி, விளையாட்டு மற்றும் ஏனைய துறைகளிலும் சாதனை படைத்து நின்றது. இவ்வாறு சாதனை பலவற்றைப் படைத்து தலைநிமிர்ந்து நிற்கும் எம் அன்னையவள் 2014.09.14 அன்று நூறு அகவையில் கால்பதித்து நூற்றாண்டு விழாவையும் கண்டு கழித்து நின்றாள் என்றால் மிகையாகாது. அன்னை அறிவுக் கண்ணைத் திறந்து அகன்று விரிந்து ஆயிரம் மாணவரைத் தாங்கி சதாவதானி ஆனாள்.

2016ம் ஆண்டு எமது பாடசாலைக்கு எமது இன்றைய மணிவிழாவின் நாயகன் எமது அன்னையின் பழைய மாணவன் முன்னைய தமிழ் ஆசான் திரு.ஐயம்பிள்ளை கேசவன் ஐயா அவர்கள் அதிபராக 2016.01.04 அன்று கடமை ஏற்றுக் கொண்டார். அதன் பின் எமது பாடசாலை கல்வியிலும், இணைப்பாட செயற்பாடுகளிலும் அரிய பல சாதனைகளை படைத்துள்ளது. ஆரம்பக் கல்வியினை எடுத்துக் கொண்டால் நீண்ட கால இடைவெளியின் பின் பல மாணவர்கள் இவர் வந்த காலத்திலிருந்து புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று உதவிப் பணத்தினைப் பெறும் வாய்ப்பினை பெற்றுக் கொண்டனர். இது மட்டுமன்றி க.பொ.த சாதாரண தரத்திலும் ஒவ்வொரு ஆண்டும் பல மாணவர்கள் சிறந்த பெறுபேற்றைப் பெற்று வெளியில் சென்று தமது கல்வியினைத் தொடர்ந்து வருகின்றனர். எமது பாடசாலையில் கலைப்பிரிவு மட்டும் இருப்பதனால் வேறு பாட துறைகளைத் தெரிவு செய்து பல மாணவர்கள் வெளியில் சென்று கற்று பல்கலைக்கழகம் மற்றும் கல்வியல் கல்லூரிகளிற்கும் சென்றுள்ளனர். எமது மணிவிழா நாயகன் கேசவன் அதிபர் காலத்தில் இப் பாடசாலையை பொறுப்பேற்ற அவ் வருடமே அருணதாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையரசன் 7A,B,C பெறுபேற்றினை பெற்றார். 2018 இல் கேசவன் சபரீசன் 8A, C எனவும் க.பொ.த.சாதாரண தரத்தில் சிறந்த பெறுபேற்றினைப் பெற்று விஞ்ஞானப் பிரிவில் கல்வி கற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு இவர் காலத்தில் பல சாதனைகள் இடம்பெற்றுள்ளன. இது எம் அதிபரின் முயற்சியும் வழிகாட்டலுமே ஆகும்.

கல்வியில் மட்டுமன்றி இணைப்பாட விதானத்தில் பல மாணவர்கள் மாவட்டம், மாகாணம், தேசியம் வரை சென்று சாதனைகள் படைத்துள்ளனர். இத்துடன் ஆங்கில தினம், சமூக விஞ்ஞான போட்டி, மெய்வல்லுனர் போட்டிகளிலும் தேசியம் வரை சென்று சாதனை படைத்து நின்றதும் எம் அதிபர் கேசவன் அவர்களின் காலத்திலேயே ஆகும்.

இத்துடன் பாடசாலைக்கு கட்டிடத்தொகுதி இரண்டினைப் பெற்று தந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஒன்று அதிபர் அலுவலகத்துடன் கூடிய வகுப்பறைக் கட்டிடத்தொகுதி மற்றைய கட்டிடத்தொகுதி மாணவர்களுக்கான செயற்பாட்டு அறைத்தொகுதி என்பனவாகும். இவ்வாறு பல சேவைகளை ஆற்றி பழைய ஆசிரியர் விடுதி திருத்தம், பாடசாலை முன் பகுதிக்கு மதில் அமைக்கப்பட்டமை, பாடசாலையின் முன் பகுதியில் சரஸ்வதி சிலை அமைக்கப்பட்டமை இவை அனைத்தும் கேசவன் அதிபர் காலத்தில் செயற்படுத்தப்பட்ட சிறப்பான விடயங்கள் என்றே கூறலாம்.

எனவே எமது பாடசாலையில் ஆரம்பக்கல்வி முதல் க.பொ.த.சாதாரண தரம் வரை கல்வி கற்று தான் கற்ற பாடசாலையிலேயே ஆசிரியர் ஆகி அதிபராகி ஓய்வு பெறும் காலத்தில் இப்பாடசாலையிலேயே என்றால் அந்த வாய்ப்பும் வரமும் எல்லோருக்கும் எளிதில் கிடைத்துவிடாது. ஐ.கேசவன் அதிபர் அவர்கள் இந்தவகையில் குடுத்துவைத்தவர் என்றே கூறலாம்.


"ஈன்ற பொழுதில் பெருதுவக்கும் தன்மகனை
சான்றோன் எனக் கேட்டதாய்"

எம் அதிபரின் உயர்வைக் கண்டு எம் பள்ளி அன்னை அவள் பூரிப்படைவாள் பெருமிதம் கொள்வாள் என்பது யாவரும் அறிவர்.

திரு.த.பிரபாகரன்
விழாக்குழுத்தலைவர்,
கிளி/வேரவில் இ.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கேசவ சேவை

மென்மையான மிருதுவான தோற்றத்தையும் சிந்தனையையும் உடையவர்கள் பள்ளி அதிபர்களாகும் போது அவர்களுக்கு ஏற்றவாறு தமது மாணாக்கரை சுலபமாக வழிநடத்துவார்கள் என்பதைப் பலரும் ஏற்றுக்கொள்வார்கள். இவ்வாறு மென்மையான போக்கைக் கொண்டவர் திருவாளர் ஐயம்பிள்ளை கேசவன். மிகச் சிறப்பான மனப்பாங்கையும் அமைதியான பணிச்சிறப்பையும் கொண்ட பாடசாலை முதல்வர்.தனது சொந்த ஊரான வேரவிலிலும் அயற்கிராமமான கிராஞ்சியிலும் ஆசிரியராகவும் அதிபராகவும் இரண்டாம் ஈழப்போரின் பிடியில் துணிவுடன் செயலாற்றியவர் அதிபர் பெருமகன் கேசவன்.

பலருக்குக் கிடைக்காத அளப்பெரிய சந்தர்ப்பத்தை தனதாக்கிக் கொண்டு ஈழத்திரு நாட்டின் அரும் பெரும் புவியியற் கண்டமான வேரவில் பகுதியில் பிறந்து வளர்ந்து படித்துள்ளார்.தனது சொந்த மண்ணிலேயே 90 ஆம் ஆண்டு முதல் 21ஆம் நூற்றாண்டின் இருபத்து மூன்று வரை தனது பொன்னான சேவையினை வழங்கிய பெரியவர்.இவ்வாறு தனது சொந்த ஊரிலே சொந்த நிலத்திலே முழுமையாக ஆசிரியப் பணியை செய்யக் கொடுத்து வைத்தவர்.

பலரும் இக்கால வேளையிலே பேசும் நிலத்தின் சொந்தக்காரனாக தன்னை முதன்மைப்படுத்தி சிறு பள்ளியாக இருந்த தனது அயற்கிராமமான கிராஞ்சிப் பள்ளியிலே பதினான்கு ஆண்டுகள் அதிபராக கண்ணியமான பணிபுரிந்து தனது பகுதியிலே எல்லோரதும் மாண்பான கௌரவத்தைப் பெற்ற அதிபர்.

காலமறிந்து மக்களின் தேவையறிந்து மாணவர்களின் பங்கை உணர்ந்து மிகச்சிறப்பாக கிராஞ்சிப் பள்ளியை மேலோங்க வைத்த பெருமதிப்புப் பெற்றவர்.பின்னாளில் தனது பிறப்பிடமான எல்லா வளங்களையும் பெற்றுள்ள வேரவில் உயர் பள்ளியில் அதிபர் பொறுப்பை ஏற்று பொறுமையுடன் தனது சேவையை எமக்கும் தனது சொந்தங்களுக்கும் வழங்கிய உயர்வான அதிபர் பதவியை எல்லோரும் போற்றும் வண்ணம் செயலாற்றியவர்.

தனது அதிபர் பதவிக்கு மேலாக பலதரப்பட்ட கிராம மட்டக் குழுக்களில் தன்னை இணைத்து ஊராரும் மற்றோரும் அறியும் படி தனது அதிபர் பதவியின் உன்னத செயற்பாட்டைச் செய்த வேரவில் வீரன். இவ்வாறான அதிபர்கள் எமது தேசத்தின் அதிபர்களாக பள்ளியை அலங்கரிக்க வேண்டும் என்பதை அதிபர் கேசவன் அவர்கள் எமக்கு முன்வைத்துள்ள பெரும் செய்தியாகும்.

இவரது கிராஞ்சி,வேரவில் பள்ளி முதல்வர் காலம் என்றென்றும் பேசப்படும் வரலாற்றுச் சிறப்பாகும்.தனது சுமையை நிறைவு செய்து இளைப்பாறும் காலத்தில் மகிழ்வோடும் மாண்பாகவும் வாழ எனது நல்லாசிகள் அதிபர் பெருமகன் கேசவனுக்கு உரித்தாகட்டும்.

வாழ்க வேரவில்
கேசவ சிந்தனையுடன்
தொடரட்டும் பணி!

திரு.த.குருகுலராசா
மேனாள் கல்விப்பணிப்பாளர்,
மேனாள் வடக்கு மாகாண
சபையின் கல்வி அமைச்சர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



கிளிநொச்சி வேரவில் இந்து மகாவித்தியாலயத்தின் அதிபர் திரு.ஐயம்பிள்ளை கேசவன் அவர்கள் தனது அறுபதாவது அகவையினைப் பூர்த்தி செய்து அரச சேவையில் இருந்து ஓய்வு பெறும் வேளையில் பாடசாலை சமூகத்தினர் அவருக்கான மணிவிழாவினை கொண்டாடுவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

பூநகரி பிரதேசத்தில் வேரவில்லைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.ஐயம்பிள்ளை கேசவன் அவர்கள் தனது முதல் நியமனத்தினையும் கிளி/வேரவில் இந்து மகா வித்தியாலயத்திலேயே பெற்று கடமையாற்றியதுடன் அதிபராக ஓய்வு பெறுகின்ற இவ்வேளையிலும் அப்பாடசாலையிலேயே கடமையாற்றியுள்ளார்.கிளி/வேரவில் இந்து மகா வித்தியாலயத்தில் பணியாற்றிய இரண்டு காலப்பகுதிகளிலும் அர்ப்பணிப்பான சேவையினை வழங்கியதுடன் அப்பாடசாலையினை முன்னேற்றப் பாதையில் இட்டுச் சென்றதில் இவரது பங்களிப்பு மகத்தானது.

சிறந்த அதிபராக மாத்திரமன்றி வேரவில்,கிராஞ்சி மற்றும் ஜெயபுரம் போன்ற கிராமங்களின் பல பொது அமைப்புகளில் பல்வேறுபட்ட பதவிகளை வகித்து சமூக சேவைகள் ஆற்றி வருகின்றமைமையும் பாராட்டத்தக்கது. அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் திரு.ஐயம்பிள்ளை கேசவன் அவர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் மணிவிழாவினை ஏற்பாடு செய்துள்ள பாடசாலை சமூகத்தினருக்கும் எனது பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திருமதி.றூ.கேதீஸ்வரன்
அரசாங்க அதிபர்/மாவட்ட செயலாளர்
கிளிநொச்சி மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி



கிளி/ வேரவில் இந்து மகா வித்தியாலயத்தில் கடமையாற்றி 05.12.2023 முதல் ஓய்வு பெறும் அதிபர் திரு.ஐயம்பிள்ளை கேவசன் அவர்களது சேவையினை மதிப்பளித்து வரும் இம்மலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

1990 முதல் இப்பாடசாலையிலேயே தனது கற்பித்தல் சேவையினை ஆரம்பித்த திரு.ஐயம்பிள்ளை கேசவன் அவர்கள் தொடர்ந்து கிராஞ்சி அ.த.க பாடசாலையிலும் 14 வருடங்கள் தனது கல்விச் சேவையினை வழங்கி 2016ம் ஆண்டு முதல் தனது நியமனப் பாடசாலையான கிளிநொச்சி வேரவில் இந்து மகா வித்தியாலயத்தில் மீண்டும் கடமையினைப் பொறுப்பேற்று 07 வருடங்கள் அங்கும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி 05.12.2023 முதல் ஓய்வு பெறுதல் என்பது எண்ணிப்பார்க்க முடியாத விடயமாகும்.

34 வருடங்கள் ஆசிரியர்,அதிபர் சேவையினை சிறப்பாக ஆற்றிய திரு.ஐயம்பிள்ளை கேசவன் அவர்கள் தாம் கற்பித்த சகல பாடசாலைகளிலும் அம்மாணவர்களை சிறப்பாக வழிநடாத்தி கற்றல் செயற்பாடுகளுடன், அவர்களை சமூகத்தில் ஆளுமையுள்ள மாணவர்களாக மிளிரச் செய்வதில் இவர் ஆற்றிய அர்ப்பணிப்பான சேவை போற்றுதற்குரியது.


கிளிநொச்சி மாவட்டத்தின் பின்தங்கிய நிலையிலுள்ள வேரவில் பிரதேசத்தில் நிறைந்த வளப்பற்றாக்குறைகள் காணப்படுகின்ற நிலையிலும் அவற்றினைப் புறந்தள்ளி கல்வித்துறையில் ஓர் அடையாளமாக திகழ்ந்துள்ள திரு.ஐயம்பிள்ளை கேசவன் அவர்கள் தனது சேவைக்காலத்தில் மாணவர்களுக்கும், மாவட்டத்திற்கும் ஆற்றிய சேவையினை நான் மதிக்கின்றேன்.

மேலும் அவ் அதிபரது திறமை மற்றும் அவரது அர்ப்பணிப்பான சேவை ஆகியவற்றை மதித்து வெளிவரும் மணிவிழா மலருக்காக முன்னின்று உழைத்த இப்பாடசாலையின் ஆசிரியர்கள் மற்றும் மலர் வெளியீட்டுக் குழுவினருக்கும்,அப்பாடசாலையின் பெற்றோர்களுக்கும்,நலன்விரும்பிகளுக்கும் எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு.கி.கமலராஜன்,
வலயக்கல்விப் பணிப்பாளர்,
கிளிநொச்சி தெற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உண்மையாக வாழ்ந்து காட்டியவர்

கிளி/வேரவில் இந்து மகா வித்தியாலய அதிபர் உயர்திரு ஐயம்பிள்ளை கேசவன் அவர்கள் 06.12.2023 இல் அறுபதாவது அகவையில் அதிபர் சேவையில் இருந்து ஓய்வு பெறுவதையிட்டு எனது பாராட்டுதலையும் வாழ்த்துக்களையும் அவருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் வழங்குவதையிட்டு அகமகிழ்வடைகின்றேன்.

ஆளுமைமிக்க அதிபர்களுடைய முக்கிய பண்பு மற்றவர்களை மதிக்கும் பண்பு. இப்பண்பு இவரிடத்திலே மேலோங்கி வளர்ந்துள்ளது. 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்ற தத்துவம் இவரது மனதிலே ஆழப் பதிந்ததொன்று. இதனால் தன்னிடம் வருகின்ற மாணவர்களை அவ்வாறான கண்ணோட்டத்திலே நோக்கி அவர்களுக்கும் கல்விச் சேவையை புரிந்துள்ளார்.

கடந்த 08 வருட காலத்திலேயே பாடசாலையின் பெறுபேறுகள், மாணவர்களின் அடைவு மட்டங்கள், பிற செயற்பாடுகள் என்பவற்றில் முன்னேற்றம் காணப்படுவதை பல தரப்பட்ட பாடசாலைப் புள்ளிவிபரங்களும் எடுத்துக் காட்டுகின்றன. நானறிந்த வகையில் எந்தவொரு தனிமனிதருக்கோ அல்லது குருவுக்கோ தீங்கு செய்யவில்லை. அவ்வாறான நல்ல உள்ளம் கொண்டவர்.

பல்வேறுபட்ட பிற அழுத்தங்கள் சூழ்ந்திருந்த காலத்தில் ஒரு பாடசாலையின் அதிபர் பொறுப்பினை ஒருவர் ஏற்பது என்பது பெற்றோல் குதங்கள் நிறைந்த ஒரு இடத்திற்குள்ளால் நெருப்புப் பந்தத்தை கொண்டு போகும் செயலுக்கு ஒப்பானது.

அதிலும் 1C தர பாடசாலை ஒன்றின் அதிபர் பொறுப்பினை ஏற்பது என்பது சாதாரண அதிபர் ஒருவரினால் நினைத்துப் பாரக்கவே முடியாத ஒரு செயல். ஆயினும் திருவாளர்.ஐயம்பிள்ளை கேசவன் அவர்கள் அதிபர் பொறுப்பினை ஏற்று திறம்பட சேவையாற்றியுள்ளார். 'நோக்கம் இல்லாமல் ஊக்கம் இல்லை.ஊக்கம் இல்லாமல் உழைப்புமில்லை, பயனுமில்லை' என்பது எம் முன்னோர் கூற்று. எண்ணங்களே மனதிற்கு வலிமையூட்டுவனவாகும். சிந்திக்கும் திறன் படைத்தவனே வாழ்க்கையில் நம்பிக்கை பெற்று வெற்றி காணமுடியும் என்பது இன்றைய உளவியலாளர்களது முடிவு.

'ஆரோக்கியமான எண்ணங்கள் ஊற்றெடுக்கும் மனதில் இருந்து தான் நல்ல நோக்கங்களும் உருவாகும்.அந்நோக்கங்கள் ஊக்கத்தை தர உழைப்பு நல்ல பயன்மிகுந்த வெற்றிகளைத் தரும்' என்பதனை தனது செயலால் நிரூபித்து நிற்கின்றார் எமது மதிப்பிற்குரிய அதிபர் திருவாளர் ஐயம்பிள்ளை கேசவன் அவர்கள்.

'தன் கடமையை சரியாக செய்வது தான் இவ்வுலகில் உண்மையாக வாழ்வது' என்ற அண்ணல் காந்தி அவர்களது கூற்றிற்கு உதாரணமாக எமது பாடசாலையில் சேவையாற்றிய அதிபர் திருவாளர் ஐயம்பிள்ளை கேசவன் அவர்களது ஓய்வுக் காலம், அவரது ஆளுமையின் இன்னுமொரு பரிமாணத்தை எமது தேசத்துக்கு அடையாளம் காட்டும் காலமாகவும் மகிழ்ச்சி நிறைந்த காலமாகவும் அமைய இறை ஆசியுடன் கூடிய வாழ்த்துக்களைக் கூறி நிற்கின்றேன்.

திரு.த.பிரபாகரன்
விழாக்குழுத் தலைவர்
கிளி/வேரவில் இ.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞானம் சிறீதரன் பா.உ
M.Ed.,B.A.PGDE(Me).,Sp.Tr(Ag)
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,
இல.882, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி, இலங்கை.
021 228 0024, 021 222 1595,
021 228 0024, 021 222 1595,
:077 691 3244
:shritharanmp@gmail.com
:-www.shritharan.com

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT

SIVAGNANAM SHRITHARAN M.P
M.Ed. B.A.PGDE(Me).,Sp.Tr(Ag)
Jaffna Electoral District,
No.882, Arumugam Road,
Vaddakachchi, Kilinochchi, Sri Lanka.
:021 228 0024, 021 222 1595,
:-021 228 0024, 021 222 1595,
:-077 691 3244
:-shritharanmp@gmail.com
:-www.shritharan.com

**2023.11.29.**

பணி ஓய்வு நிறைவைத் தரட்டும்...!!!

மூன்று தசாப்தங்களுக்கும் அதிககாலம் தான் ஆற்றிய அளப்பரிய கல்விப் பணியினால் கிளிநொச்சி மாவட்டத்தின் கல்விப் பாரம்பரியத்தில் தனக்கெனத் தனியிடம் பதித்து நிற்கும் மதிப்பார்ந்த அதிபர் திரு.ஐயம்பிள்ளை கேசவன் அவர்களின் பணிவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்கக் கிடைத்தமை மகிழ்வையும், நிறைவையும் தருகிறது.

'ஆசிரியத்துவம் வாய்க்கப்பெறுவது வரம்' என்பது எத்தனை நிதர்சனமானதோ, தான் கற்ற பள்ளியிலேயே ஆசிரியராகக் கடமையாற்றும் வாய்ப்பைப் பெறுவதென்பதும் அத்தனை இலகுவில் சாத்தியமாகிவிடாத ஆசீர்வாதப் பேறுதான். அந்தப் பெரும்பேறு இவருக்கு வாய்த்திருக்கிறது. அதிலும் குறிப்பாக தான் கல்விகற்ற பாடசாலையிலேயே ஆசிரியர் நியமனம் பெற்றதோடன்றி அங்கேயே அதிபராகவும் கடமையாற்றி, அப்பள்ளியிலிருந்தே பணி ஓய்வும் பெறுகின்ற பேறுக்குரியவராக அதிபர் கேசவன் அவர்களின் பணிக்காலம் அமைந்திருக்கிறது.

இந்த மண்ணில் போர்மேகம் சூழத்தொடங்கிய 1990களின் முற்பகுதியில் ஆரம்பக்கல்வி ஆசிரியராகத் தனது கல்விப் பணியை ஆரம்பித்த இவர் தனது சேவைக்காலம் முழுமைக்கும் கிளி/வேரவில் இந்து மகாவித்தியாலயம், கிளி/கிராஞ்சி அ.த.க.பாடசாலை ஆகிய வளப்பற்றாக்குறை மிகுந்த இரு பாடசாலைகளிலும் பணியாற்றியதன் மூலம், அப்பிரதேச மாணவர் சமூகத்தின் உணர்வுகளோடு ஒன்றிக் கலந்த உரிய ஆசிரியராகவும், அதிபராகவும் தனது அடையாளத்தை ஆழப்பதித்திருக்கிறார். ஆரம்பக்கல்வி ஆசிரியராக, அதிபராக என தனிமனித வாழ்வில் படிப்படியான வளர்ச்சிகண்ட இவரது வாழ்க்கைமுறையும், ஆளுமைப் பாங்கும் இன்றைய தலைமுறையினருக்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டு.

பல்வேறுபட்ட பரிமாணங்களில் படிநிலை வளர்ச்சிகண்டு, நிதானமான போக்கு, நேர்மையான சிந்தனைத் திறன், அறம்சார் வழியில் மாணவரை அறிவூட்டும் பாங்கு என்பவற்றைத் தாங்கி உலாவரும் இவரை கிளிநொச்சியின் கல்வியியல் ஆளுமைக்கான அடையாளமாக அடிக்கோடிட்டுக் காட்டமுடியும். கல்விப்புலத்தில் மிகநீண்ட காலங்கள் கருத்தொன்றி சேவையாற்றி மூன்று தசாப்த காலமாக கல்வியில், கலைகளில், ஒழுக்கத்தில் உயர்ந்த ஒருபெரும் மாணவசமுதாயத்தை உருவாக்கிய பெருமைக்குரிய இவர், வாழும் காலமெல்லாம் இவ்வையம் வாழ்த்தும் வண்ணம் பணிபுரிந்திருப்பது போற்றுதற்குரியது.

தனது பூர்வீக பூமியான பூநகரி மண்ணையும், அந்த மண்ணின் மாணவர்களையும் நேசித்து அவர்களை கல்விப் புலத்தில் உயர்ந்தவர்களாக வளர்த்தெடுக்க வேண்டுமென்ற வேணவாவில் தனது 33 வருட கல்விப் பணியையும் இந்த மாவட்டத்திற்கே அர்ப்பணித்துள்ள இவரது பணி அனைவருக்கும் முன்னுதாரணமானதாகும். கல்வி, நிர்வாகம், சமூக சேவைகள், அறப்பணிகள் என எல்லாவற்றிலும் தன்னை முழுதாய் அர்ப்பணித்து ஒப்பாரும் மிக்காரும் இல்லாத உயர் ஆளுமையாக ஒவ்வொருவர் உள்ளங்களிலும் தன் பணியால் உயர்ந்து நிற்கும் அதிபர் திரு.ஐயம்பிள்ளை கேசவன் அவர்களின் ஓய்வுகாலம் ஒளிமயமாய் அமையவும், இப்பணி விழா மலர் சிறப்புறவும் மனமுவந்து வாழ்த்தி நிற்கிறேன்.

இங்ஙனம்
மக்கள் பணியிலுள்ள,

**சிவஞானம் சிறீதரன்**
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,
கிளிநொச்சி.

சி.சிறீதரன்,
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்,
இல. 882, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச்செய்தி

வேரவில் இ.ம.வி இன் அதிபர் திரு.ஐ.கேசவன் அவர்களின் மணிவிழா மலருக்கான வாழ்த்துச் செய்தி வழங்க கிடைத்த சந்தர்ப்பத்தை எண்ணி மிகவும் மகிழ்வடைகின்றேன்.

அதிபர் திரு.ஐ.கேசவன் அவர்களை கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக நான் நன்கு அறிவேன்.

பல்லவராயன்கட்டு சந்தியிலிருந்து செல்லும் போது முதலில் கிராஞ்சி பாடசாலையும் அடுத்ததாக வேரவில் பள்ளியும் இறுதியாக கடற்கரைக்கு அண்மித்த வலைப்பாடு பாடசாலையும் அமைந்திருக்கும். அந்த கொத்தணிக்குள் வேறு பள்ளிகள் இல்லை.மன்னார் - யாழ்ப்பாண நெடுஞ்சாலையிலிருந்து இப்பள்ளிக்கு செல்லும் மண்ணாலான பாதை இன்றுவரை நேர்த்தி செய்யப்படவில்லை. எனவே இந்த பள்ளிக்கு வேறு பாடசாலை ஆசிரியர்கள்,அதிபர்களை இடமாற்றம் செய்வது மிகவும் கடினமான பணியாகும். எனவே தான் கடந்த 34 வருடங்களுக்கு மேலாக திரு.ஐ.கேசவன் கிராஞ்சி, வேரவில் பள்ளிகளிலேயே கடமை புரிய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆசிரியராக 13 வருடங்களும் அதிபராக 21 வருடங்களும் கடமை புரிந்தார். கிராஞ்சியில் அதிபராக திரு.ஐ.கேசவன் கடமை புரிந்த காலத்திலேயே அவருடன் நெருக்கமாகப் பழகும் சந்தர்ப்பம் எனக்கு ஏற்பட்டது.

நான் உதவிக்கல்விப் பணிப்பாளராக கடமை புரிந்த காலத்தில் பள்ளிகளின் மேற்பார்வை நான் பணிகளுக்காக பல தடவைகள் சென்றுள்ளேன்.மேலும் பள்ளிகளில் நடைபெறும் பல்வேறு விழாக்களுக்கு என்னை அடிக்கடி அன்புடன் அழைப்பார்கள். நானும் பெருவிருப்புடன் அங்கு செல்வேன்.எமது அலுவலகத்திலிருந்து தொலைதூரத்தில் உள்ள பள்ளிகள் என்பதாலும் இப்பாதைகளால் செல்வது கடினமான பணி என்பதாலும் ஆசிரியர் விடுதிகளில் தங்கி நின்று எமது பணிகளையும் ஆற்றுவதுண்டு. திரு.ஐ.கேசவன் மற்றும் அவர்களுடன் இணைந்தவர்களின் அன்பான உபசரிப்புகளை நாம் இன்னும் மறக்கவில்லை. தொலைதூரத்திலிருந்து வந்து ஆசிரியர் விடுதிகளில் தங்கி நின்று கற்பிக்கும் ஆசிரியர்களின் பங்களிப்பும் நிறையவே உள்ளன.

திரு.கேசவன் அவர்கள் கிராஞ்சிப்பள்ளியில் அதிபராக இருந்த காலத்தில் கொரியா நாட்டின் கொயிக்கா செயற்றிட்டத்தில் அழகான கட்டடங்கள் கட்டப்பட்டன. மேலும் நான் கல்விப்பணிப்பாளர் என்ற வகையில் இவரின் பள்ளி ஆசிரியரையும் எம்முடன் இணைத்து கொரியா நாட்டிற்கு அழைத்துச் சென்றோம். எமது மாவட்டத்திலிருந்து ஒரே ஒரு ஆசிரியர் மட்டுமே கொரியா நாட்டிற்கு சென்றார். அந்தப் பெருமையும் திரு.ஐ.கேசவனின் பள்ளிக்கே உரித்தாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06.12.2023 அன்று கடமையின் பின்னர் அரச சேவையில் இருந்து ஓய்வு பெறவுள்ளார். தான் பிறந்த ஊரிலுள்ள பள்ளியிலே கற்று அதே பள்ளியிலே அதிபர் கடமையாற்றி ஓய்வு பெறுவதற்கு கொடுத்து வைத்திருக்க வேண்டும்.மிகவும் அமைதியான பண்புகளைக் கொண்ட இறைபக்தி நிறையவே உடைய பண்பாளன் திரு.கேசவன்.மற்றையவர்களை அன்புடன் மதித்து பழகியவர்.மிகவும் நேர்மையான அதிபர். மிகவும் கஸ்டப்பிரதேசத்தில் அமைந்துள்ள பள்ளிகளில் தாங்கள் ஆற்றிய அர்ப்பணிப்பான கல்விச் சேவைகளுக்காக தங்களை பாராட்டி வாழ்த்துவதில் கல்விப்பணிப்பாளர் என்ற வகையில் மிகவும் பெருமிதம் கொள்கின்றேன். தங்களின் அரச சேவைக்கான ஓய்வு காலம் மகிழ்ச்சிகரமாகவும் மேலும் தாங்கள் உடல் உள நலத்துடன் குடும்பத்தவர்களுடன் இணைந்து வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி மனம் நிறையவே வாழ்த்துகின்றேன்.

திரு.க.முருகவேல்
முன்னாள் கல்விப் பணிப்பாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மணிவிழா வாழ்த்துச் செய்தி

கிளிநொச்சி மாவட்டத்தில் மிகவும் இடர்பாடுகள் கொண்ட பூநகரி பிரதேசத்தில் பிறந்து அங்கேயே கல்விப்பணியாற்றிய மதிப்பார்ந்த கேசவன் அதிபர் அவர்களுக்கு மணிவிழா வாழ்த்து செய்தி வழங்குவதில் நான் பெருமகிழ்வடைகிறேன்.

தொடர்ச்சியாக பல்வேறு நெருக்கடிகளை சந்தித்து வரும் கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு போன்ற பிரதேச பாடசாலைகள் ஆசிரியர் வளம், பௌதீக வளம், என்பவற்றில் நிறைவின்மை உள்ளது என்பதனை நான் நன்கு அறிவேன். இந்நிலைமையை நிவர்த்தி செய்வதற்காக நான் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த வேளையில் அதிபர் கேசவன் அவர்களாலும் அப்பிரதேச மக்களாலும் கோரப்பட்ட பல விடயங்களை முடிந்தளவு செய்திருந்தேன். உதாரணமாக, கிளிநொச்சி மாவட்டத்திற்கான மின்சாரம் வழங்கும் வேலைத்திட்டத்தை இப்பிரதேசத்திலிருந்து ஆரம்பித்து இப்பிரதேச மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு முன்னோக்கி செல்ல வழிவகுத்தோம். அதற்கு அதிபர் அவர்களின் ஒத்துழைப்பு முக்கியமானது. கடவுள் நம்பிக்கையும், மனித விழுமியங்களுக்கும் மதிப்பளிக்கும் அதிபர் கேசவன் அவர்கள் கல்வித்துறை சார்ந்து பல்வேறு முன்னேற்றகரமான செயற்பாடுகளுக்கு தனது ஒத்துழைப்பினை வழங்கியிருந்தார். பாடசாலைக்கும் சரி தனது வீடு தேடி வரும் விருந்தினர்களாக இருந்தாலும் சரி அறுசுவை உணவு வழங்கி அவர்களை விருந்தோம்பும் பண்பு மிக முக்கியமானது. தான் கற்பித்த சகல பாடசாலைகளிலும் மாணவர்களின் முன்னேற்றத்திற்காக அரும் பாடுபட்டவர். அவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கும் இணைப்பாட விதான செயற்பாடுகளுக்கும் சரி தன்னை அர்ப்பணித்து சேவையாற்றி அம்மாணவர்களின் மனங்களில் நீங்காத இடம்பிடித்தவர். இவர்களின் வழிகாட்டலில் உள்வாங்கப்பட்ட பல மாணவர்கள் உயர் கல்வியை பெற்று பொறுப்புவாய்ந்த பதவிகளிலும் உள்ளனர்.மேலும் கல்வித்துறைக்கு அப்பால் பிரதேசத்தின் நலன்களிலும் அக்கறை கொண்டவர். ஒரு அரச சேவகனாக கேசவன் அவர்கள் பணியாற்றி மக்களின் மனங்களிலும் நிலைத்து நிற்கின்றார். கல்வித்துறைச் செயற்பாட்டாளனாக, சமூக செயற்பாட்டாளனாக என பல்பரிமாணம் வகித்து ஓய்வுபெறும் அதிபர் திரு கேசவன் அவர்களின் மணிவிழா சிறப்புற வாழ்த்துவதோடு, அவரின் ஓய்வுக் காலமும் சிறப்பாக இருக்கவும் அவர் தொடர்ந்து சமூக செயற்பாட்டாளனாக இயங்கவும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு.மு.சந்திரகுமார்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்,
பொதுச் செயலாளர்-சமத்துவக் கட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி கல்விக் கோட்டத்தில் வேரவில் இந்து மகா வித்தியாலயத்தின் அதிபராகப் பதவி வகித்து 06.12.2023 சேவையில் இருந்து ஓய்வு பெறும் திரு.ஐயம்பிள்ளை கேசவனைப் பாராட்ட கிடைத்த சந்தர்ப்பத்தை பெரும் பேறாகக் கருதுகின்றேன். அத்துடன் சேவையினைப் பாராட்டும் முகமாக வெளிவரும் மணிவிழா மலருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

திரு.ஐ.கேசவன் அவர்கள் ஆசிரிய நியமனம் பெற்று கிளி/வேரவில் இந்து மகா வித்தியாலயத்தில் கடமையாற்றும் போது நான் பூநகரிக் கல்விக்கோட்டத்தில் கோட்டக்கல்வி அதிகாரியாக பதவி வகித்தேன். அப்பொழுது வேரவில் பாடசாலை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையாக விளங்கியது. பூநகரிப் பிரதேசத்தில் மிகவும் பின்தங்கிய பிரதேசத்தில் இப்பாடசாலை விளங்கியதுடன் இப்பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் க.பொ.த உயர்தர கல்வியை கற்க விரும்பின் முழங்காவில் மகாவித்தியாலயத்திற்கு அல்லது பூநகரி மகா வித்தியாலயத்திற்கு செல்ல வேண்டும். சுமார் 20 மைல்கள் வரை அவர்கள் செல்ல வேண்டும்.இதனால் வேரவில் அ.த.க பாடசாலையை க.பொ.த உயர்தரம் வரையான பாடசாலையாக மாற்ற வேண்டும் என்பது பெற்றோரது வேண்டுகோளாகும்.இதனால் நான் அடிக்கடி வேரவில் அ.த.க பாடசாலைக்கு சென்று வந்தேன். இந்நிலையில் வேரவில் அ.த.க. பாடசாலையை க.பொ.த உயர்தர பாடசாலையாக மாற்ற கல்வி நிலையில் உயர்வைப் பெற சகல ஆசிரியர்களோடும் கூடிய தொடர்பைப் பேணினேன்.

திரு.ஐ.கேசவன் அவர்கள் பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியர் என்பதோடு வேரவில் கிராமத்தை பிறப்பிடமாகவும் உடையவர்.இதனால் இப்பாடசாலையின் வளர்ச்சியில் எல்லா ஆசிரியர்களையும் விட மிகக் கூடிய கவனம் எடுத்தார்.நான் 1998ஆம் ஆண்டு கிளிநொச்சி கல்வி வலயத்தில் வலயக்கல்வி பணிப்பாளர் பதவியினைப் பெற்றேன்.(01.01.1998) இதன் காரணமாக இப்பாடசாலையினை தரம் உயர்த்த வாய்ப்பு ஏற்பட்டது. இதற்காக க.பொ.த சாதாரண தர தரத்தில் குறைந்தது 10 மாணவர்கள் க.பொ.த உயர்தரம் கற்க தகுதி பெற்றால் க.பொ.த உயர்தரத்தை ஆரம்பிக்கலாம் என பெற்றோருக்கும் பாடசாலைச் சமூகத்துக்கும் எடுத்துக் கூறிவந்தேன். இதனை ஒரு சவாலாக திரு.ஐ.கேசவன் எடுத்துக் கொண்டார்.1998 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரத்தில் குறிப்பிட்ட நிபந்தனையை இப்பாடசாலை பூர்த்தி செய்தது. இதனால் 04.01.1999 1C பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டு க.பொ.த உயர்தர வகுப்பு இப்பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டது.அத்துடன் பாடசாலையும் வேரவில் இந்து மகா வித்தியாலயம் என பெயர் மாற்றப்பட்டது. இவ்வைபவத்தில் வலயக்கல்விப் பணிப்பாளராக நான் கலந்து கொண்டேன். இதனால் வேரவில் இந்து மகா வித்தியாலய அதிபரும், பாடசாலைச் சமூகமும் ஆசிரியர்களும் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டனர்.

14.01.2016 ஆம் அண்டு அதிபராக பதவி ஏற்ற திரு.ஐ.கேசவன் 2023 ஆம் ஆண்டு வரை அதிபர் பதவி வகித்து 2023.12.06 ஆம் திகதி மணிவிழா காண்கின்றார்.தான் கல்வி கற்ற பாடசாலையில் ஆரம்பக் கல்வி ஆசிரியராக பதவி வகித்து பாடசாலையின் அதிபராக பதவி ஏற்று தனது கிராமத்துக்கும் பாடசாலைச் சமூகத்துக்கும் அளப்பரிய சேவையாற்றிய திரு.ஐ.கேசவனைப் போல் ஒரு சமூக சேவையாளனைச் சந்திப்பது மிகமிக கடினமாகும்.சிறந்த ஒரு சமூக சேவையாளன்.கிராமத்தின் சகல முன்னேற்றத்திலும் முதன்மையாளனாக நின்று செயற்பட்டவர். ஏனைய சகல பாடசாலைகளுக்கும் முன்னுதாரணமான ஒரு அதிபர் என்றால் மிகையாகாது. ஓய்வுக் காலத்தில் பாடசாலைக்கும் சமூகத்துக்கும் சேவையாற்ற எனது நல்லாசிகளை வழங்குகிறேன்.

திரு..ப.அரியரத்தினம்
முன்னாள் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா நாயகனை மனதார வாழ்த்துகிறேன்



மனித வாழ்க்கைப் பயணத்தில் பல்வேறுபட்ட தருணங்களில் பலரை சந்தித்து சிலரோடு பழகி பணியாற்றினாலும் அவர்களிலும் ஒரு சிலர் மறக்க முடியாத மனிதர்களாக நிலைத்து விடுகிறார்கள்.அவ்வாறு தனது அமைதியாலும் அடக்கத்தினாலும் எனது விருப்பத்திற்குரியவரான மணிவிழா நாயகன் அதிபர் கேசவன் விளங்குகிறார்.வேரவிலைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டு தான் பெற்ற கல்வியால் தான் சார்ந்த பிரதேசத்தில் பணியாற்றவும் சேவை செய்யவும் சிறந்த ஒரு வாய்ப்பினை இறைவன் இவருக்குத் தந்திருக்கிறார்.

34 வருடங்கள் கல்விப் பணியை தொடர்ச்சியாக ஆற்றி ஓய்வு பெறுவது என்பது சாதாரண விடயமல்ல. 1990களில் வேரவில் இ.ம.வித்தியாலயத்தில் ஆசிரியப் பணியை ஏற்றுக் கொண்ட இவர் அப்பாடசாலையில் கல்வி கற்றிருப்பதும் அதிபராக இன்று அதே பாடசாலையில் ஓய்வு பெறுவதும் இவரது சேவை நீட்சிக்கு அடையாளமாகின்றன.வேரவில் கிராமத்தின் சகல விடயங்களையும் மனங்கொண்டு தனது நீண்ட சேவையினை அக்கிராமத்திற்கு வழங்கி வந்திருக்கின்றார். நானறிந்த வகையில் தனது சொத்துக்களை பாடசாலைக்காக பயன்படுத்தி அதனது வளர்ச்சிப் பாதை நோக்கி சிந்திக்கின்ற ஒரு பரோபகாரி.


அதிபர்கள் கலந்துரையாடல்களின் போது அவரது அமைதியும் அடக்கமும் எல்லோரது மனதையும் கவரக்கூடியது.அதிகமாகப் பேசாத அவரது பண்பும் பேசுகின்ற பொழுது நிதானமாக சொல்ல வருகின்ற விடயத்தை மிகத் தெளிவாகப் பேசும் ஆளுமையும் இவருக்கே உரியது.நீண்டகாலம் அதிபராக கடமையாற்றி நிறைந்த அனுபவ ஞானத்தோடு ஓய்வு நிலை எய்துகின்ற இவரது இடைவெளி, கல்வி சமூகத்திற்கு இழப்பாக இருக்கின்ற போதிலும் தனது சுகதுக்கங்களை மறந்து பணியாற்றிய இவர் ஓய்வு காலத்தில் குடும்பத்தினரோடு இணைந்து உடல்,உள ஆரோக்கியத்துடன் தனது சமூகப்பணி வாழ்வினை தொடர இறையாசி வேண்டி உளமார வாழ்த்தி நிற்கின்றேன்.

திரு.பா.வாசுதேவன்
பிரதிக்கல்விப் பணிப்பாளர்
பொது,நிறுவன முகாமைத்துவம்
வலயக்கல்வி அலுவலகம்
கிளிநொச்சி தெற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அர்ப்பணிப்பு மிக்க கல்விச் சேவையாளன்...



புகழ் பூத்த கிளிநொச்சி மாவட்டத்தின் தெற்குப் பகுதியில் அமைந்திருக்கும் எழில் நிறைந்த பூநகரிப் பிரதேசத்தின், வேரவில் கிராமத்தில் அமைந்திருக்கும் கிளி/ வேரவில் இந்து மகா வித்தியாலயத்தில் தன் நிறைவான சேவையைச் செவ்வனே புரிந்து பாடசாலையின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றி சேவையிலிருந்து ஓய்வு பெறும் ஒரு நல்ல அதிபரின் வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வெய்துகிறேன்.

அதிபர் திரு.ஐ.கேசவன் அவர்கள் நாட்டின் அசாதாரண சூழ்நிலையான காலகட்டங்களில் பல இன்னல்களைத்தாண்டி, கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பல அதிகஸ்டப் பிரதேசப் பாடசாலைகளில் தனது பணியைச் செவ்வனே புரிந்துள்ளார். 1990ம் ஆண்டு தனது பணியை கிளி/ வேரவில் இந்து மகா வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வி ஆசிரியராக ஆரம்பித்த இவர் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக அப்பாடசாலையில் தனது ஆசிரியப் பணியைச் சிறப்புற மேற்கொண்டு மாணவர் மனதில் நீங்கா இடம் பிடித்தார். அதன் பின்னர் 2002ம் ஆண்டு தனது ஆற்றலால் அதிபர் என்ற பதவிக்கு முன்னேறி கிளி/கிராஞ்சி அ.த.க பாடசாலையில் ஒரு தலைசிறந்த அதிபராக அப்பாடசாலையின் வளர்ச்சிக்கு ஒளி விளக்காகத் திகழ்ந்தார்.

மாணவர்களின் வளர்ச்சிக்குத் தன்னை அர்ப்பணித்த இவர் 2016ம் ஆண்டிலிருந்து இன்று வரை தான் ஆசிரியராகக் கடமையாற்றிய பாடசாலையான கிளி/ வேரவில் இந்து மகா வித்தியாலயத்தில் ஒரு தன்னிகரில்லாத தலைவனாக மிளிர்கின்றார். கடந்த 08 வருடங்களாக இப்பாடசாலையின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் அச்சாணியாக இருந்து சேவையாற்றினார் என்று கூறினால் மிகையாகாது.

மேலும், தனது அதிபர் சேவையின் தன்னிகரற்ற பணிகளோடு மட்டும் நின்று விடாது, வேரவில் மற்றும் கிராஞ்சிக் கிராமங்களில் பல பொது அமைப்புக்களிலும் தலைவராக, செயலாளராக தனது பணியினை மக்களுக்காக ஆற்றி வருகின்றார்.

கல்விச் சேவைக்காகத் தன்னை அர்ப்பணித்து தனது நிறைந்த சேவையிலிருந்து ஆறுதல் பெறும் ஆளுமை மிக்க அதிபர் அவர்களது ஓய்வுக் காலம் சிறக்க வாழ்த்தி அவரது சமூகப்பணி தொடர வேண்டி எனது நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு.நா.அகிலன்
பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்
பூநகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



துரைராசா இளங்குமரன்
முன்னாள் அதிபர்
கிளி/வேரவில் இந்து மகா வித்தியாலயம் (புதிய பாடசாலையின் நிறுவனர்.)
சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

1897 ஆவணி 29ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட நூற்றாண்டு கடந்த சைவ கல்விப்பாரம்பரியம் மிக்க கிளி/வேரவில் இந்து மகா வித்தியாலயத்தின் அதிபராக விளங்கும் உயர்திரு. ஐயம்பிள்ளை கேசவன் அவர்களின் மணிவிழா குறித்து வாழ்த்துவதில் ஆனந்தமடைகிறேன். பல பேரறிஞர்கள் அலங்கரித்த பாடசாலையைத் தலைமைதாங்கி வழிநடத்தும் அதிபர் கேசவன் அவர்கள் சிறந்த ஆளுமைமிக்கவர். இந்தப் பாடசாலையின் பழைய மாணவன், பல மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பங்காற்றி வருபவர். அன்னாரின் மணிவிழா நல்ல முறையில் அமையவும் அவரது எதிர்கால வாழ்வு சிறக்கவும் எல்லாம்வல்ல வேரவில் இந்துவின் வித்தக விநாயகனை பிரார்த்திக்கின்றேன்.

கல்வித் துறையில் சேவை செய்பவரெல்லாம் காலமெல்லாம் மதிக்கப்படுவார்கள். எத்துறையைச் சார்ந்தவருக்கும் இல்லாத பெருமை ஆசிரியத்துவப் பணிக்கு உண்டு. அந்தவகையில் கேசவன் அதிபர் அவர்கள் மிகவும் பின்தங்கிய பிரதேசத்தில் கல்விப் பணியை சிறப்பாகச் செய்து வருகின்றார். அவர் செய்த மிகச்சிறந்த பணிகளில் ஒன்று பழைய மாணவர்களை அழைத்து எமது கல்லூரியில் யுத்த காலத்திற்கு முன் பணியாற்றிய உயிருடன் உள்ள அனைத்து முன்னை நாள் ஆசிரியர்களை, யாழ்ப்பாண பல்கலைகழகத் துணைவேந்தர் பேராசிரியர். சி.சிறிசற்குணராசா, யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியின் பீடாதிபதி உயர்திரு. சுப்பிரமணியம் பரமானந்தம் ஆகியோரை அழைத்து கௌரவப்படுத்தி பெருமைப்படுத்திய செயற்பாடு பாராட்டத்தக்கது.

இராசியான பாடசாலையான இங்கு கற்பித்தவர்கள் யாவரும் இன்று மிக உன்னத இடங்களில மிளிர்கின்றனர். அந்தவகையில் அதிபர் கேசவன் அவர்களும் பாராட்டுதற்குரியவர்.

அதிபர் கேசவன் அவர்கள் இன்று எல்லாவற்றையும் கடந்து தமது சமூகத்தையும் மக்களையும் நேசிக்கும் ஒருவராக பல்வேறு அறப்பணி நிலையங்களை நிறுவி அதன் மூலம் சமூகப்பணியாற்றி தலைமைத்துவத்தின் அடையாளமாக சமூக சேவகனாக மக்கள் மனதில் நிலைபெற்று ஒரு நல்ல மனிதராக எல்லாவற்றிலும் தன்னை அர்ப்பணித்து பொறாமை மிக்காரும் இல்லாத ஒருவராக தன் பணியில் உயர்ந்து நிற்க வேண்டும். அதிபர் கேசவன் அவர்களின் ஓய்வுக்காலம் இனியதாய் அமையவும் இம் மணிவிழா மலர் சிறப்புறவும் மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி



ஒரு நல்ல ஆசிரியருக்கு மாணவர்களின் மனங்களை சுடர் விட்டு எரியச் செய்வதே குறிக்கோளாய் இருக்கின்றது என்ற அப்துல்கலாம் அவர்களின் வாக்கிற்கிணங்க தனது சேவையை செவ்வனே செய்து மணிவிழா காணும் திரு.ஐயம்பிள்ளை கேசவன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் உவகையடைகின்றேன்.

தனது ஆரம்பக்கல்வி தொடக்கம் இடைநிலை கல்வி வரை கிளி/வேரவில் இந்து மகாவித்தியாலயத்தில் கல்வி பயின்று அதே பாடசாலையில் 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆசிரியராக தனது பணியை ஆரம்பித்த திரு.ஐயம்பிள்ளை கேசவன் இன்று அதே பாடசாலையில் அதிபராக தனது சேவைக்காலத்தை பூர்த்தி செய்வது என்பது மிகவும் மகிழ்ச்சியான விடயம். தனது சேவைக்காலத்தில் பெரும்பாலான காலப்பகுதியை பூநகரி பிரதேச மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக அர்ப்பணித்து பூநகரி பிரதேசத்தில் சிறந்த கல்வியியலாளர்கள் உருவாக உந்துகோலாக இருந்தது மட்டுமன்றி பல பொது அமைப்புகளின் உறுப்பினராகவும் இருந்து பல சேவைகளை எம்மண்ணிற்கு ஆற்றியுள்ளார்.

சிறந்த கல்வியியலாளராகவும் சிறந்த சமூக சேவையாளராகவும் தனது பணியை செவ்வனவே செய்து இன்று மணிவிழா காணும் திரு.ஐயம்பிள்ளை கேசவன் அவர்களுக்கு மனமாற வாழ்த்துவதுடன் தொடர்ந்து சகல செல்வங்களுடன் நீண்ட ஆயுளுடனும் தனது சேவை இந்த மண்ணிற்கு செய்ய இறையாசி வேண்டி நிற்கின்றேன்.

திரு.நா.கணேஸ்வரநாதன்,
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
பூநகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா வாழ்த்துக்கள்



நற்சமூகத்தை உருவாக்குவதற்கு அடித்தளமிடுகின்ற ஆசிரியப்பணியில் ஆசிரியராகவும் அதிபராகவும் அயராது உழைத்து அகவை அறுபதில் கால் பதிக்கும் வேரவில் இந்து மகா வித்தியாலய அதிபர் திரு.ஐ.கேசவன் அவர்களின் மணிவிழா வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் நான் மகிழ்வும் நிறைவும் கொள்கின்றேன்.

வேரவில் மண்ணில் ஐயம்பிள்ளை நாகம்மா தம்பதியருக்கு மகனாகப் பிறந்த இவர் தனது முற்பத்து நான்கு வருட கால ஆசிரியர்,அதிபர் பணியில் பல சிறார்களை சிறந்த கல்விமான்களாக மிளிர்வதற்கு வித்திட்டவர் என்றால் அது மிகையாகாது. அந்தவகையில் நான் பூநகரி கோட்டக்கல்விப் பணிப்பாளராக இருந்த காலத்தில் அவரது சேவையை கண்கூடாகக் கண்டு கொண்டுள்ளேன்.

தான் பிறந்த மண்ணையும் சமூகத்தையும் நேசித்து பல்வேறு பொது அமைப்புகளில் அங்கத்துவம் செய்து பொதுப்பணிகளிலும் இவர் தனது சேவைகளை வழங்கி வருகிறார். இத்தகு பண்புகள் கொண்ட இவ் ஆசான் தனது சேவை ஓய்வு காலத்தில் நோய் நொடிகள் எதுவுமின்றி தனது குடும்பத்தாருடன் உடல் உள ஆரோக்கியத்தோடு மகிழ்வாக தனது வாழ்க்கைப் பயணத்தைத் தொடர எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்து எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு.ஆ.உதயணன்
முன்னையநாள் கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
பூநகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரைச்சிக் கோட்டக் கல்விப் பணிப்பாளரின் எண்ணத்திலிருந்து...............



யாழ் மண்ணிலிருந்து வன்னிப் பெருநிலப்பரப்பு நோக்கிய குடியேற்றத்திலே வேரவிலை தளமாகக் கொண்ட கிளி/மண்ணிலே தளமமமைத்து அக்காலத்தில் காடுகளைக் கழனிகளாக்கி திரு.ஐயம்பிள்ளை கேசவன் அவர்கள் ஆரம்பக் கல்வியினை வேரவில் இந்து மகா வித்தியாலயத்திலும் உயர்கல்வியினை யாழ்/மீசாலை வீரசிங்கம் கல்லூரியிலும் கற்றவர்.

இளமையில் சிறப்பான துடியாட்டமும் எதையும் பார்த்தவுடன் அதே போல் உருவகிக்கும் கற்பனைத் திறனும் கொண்டவர்.கிளிநொச்சியில் பாதைகளும் வாய்க்கால்களும்,மதவுகளும் அற்ற அக்காலத்தில் மாரியிலே வெள்ளம் பெருக்கெடுக்கின்ற போது நகரத்தை நோக்கிப் பயணிப்பதற்கு பாதைகள் தடைப்பட்டு விடும் புழுதி நிறைந்த பாதைகளும் குன்றுங் குழியுமான போக்குவரத்தில் சிரமப்படுவோர் நாம்.குண்டு வீச்சு விமானங்கனும், வேவு விமானங்களும் வட்டமிட ஓலைக் கொட்டில்களில் மர நிழல்களிலே பள்ளிக்கூடங்களும் பரீட்சைகளும் இடம்பெற்றன.மாலையானதும் ஒரே இருள் மயம், குப்பி விளக்குகளும் கண்ணைச் சிமிட்டி சிமிட்டிப் படிக்கும் காலம் அது.

திரு.ரணசிங்க பிரேமதாஸ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் தொண்டர் ஆசிரியராக கற்பித்து கேசவன் அவர்கள் 16.03.1990 ஆம் ஆண்டு பயிலுநர் ஆசிரியர் நியமனத்தை பெற்று வேரவில் இந்து மகா வித்தியாலயத்தில் கடமையேற்றுப் பணிபுரிந்தவர்.2016 ஆம் ஆண்டு முதல் வேரவில் இந்து மகா வித்தியாலயத்தில் அதிபராகப் பணியேற்று இன்று வரை பணிபுரிகின்றார்.

சமுதாய சேவையில் பல தொண்டு நிறுவனங்களில் தலைவர்,செயலாளர் பதவிகளில் தொண்டாற்றினார். மூன்று குழந்தைகளைப் பெற்று அன்பும் அறனும் கொண்ட வாழ்விலே பிள்ளைகளை பட்டதாரியாக்கினார். இவரது செயற்பாடானது வீட்டிலே அன்புப் பிள்ளையாக குடும்பத்திலே நல்ல கணவனாக,முக மலர்ச்சியில் சிறந்த நிர்வாகியாக விருந்தோம்பல் பண்புகளுடன் பள்ளியிலே அதிபர் எனப் பல வகிபாகங்களுடன் விழாக்காணும் கேசவன் எதிர்காலம் அமைதியாகவும் இறைபக்தியுடனும் உற்றார்,உறவினர் அரவணைப்புடன் திகழ வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

'இரவு கண்டது கனவு என்பது விடிந்ததும் தெரியும்' அதேபோல் வாழ்ந்து முடித்ததும் தான் எவ்வாறு வாழ வேண்டும் என்பது புரியும்.வாழ்க்கை அனுபவங்களை விட்டுச் செல்லாமல் அன்பை விட்டுச் செல்லும் சேவை நாயகனின் நினைவுகள் இப்பள்ளியிலே தங்கியிருக்கும். நிலைமை மாறினால் மகிழ்ச்சியாக இருக்கலாம் என்பது பொய். மகிழ்ச்சியாக இருப்பதாலே நிலைமை மாறி விடும் என்பதே உண்மை.மகிழ்ச்சியான ஓய்வுநிலை எதிர்காலம் சிறப்பாக அமைய வாழ்த்தி நிற்கின்றேன்.

திரு.சு.தர்மரத்தினம்
முன்னையநாள் கோட்டக்கல்விப்பணிப்பாளர்,
பூநகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு.ஐயம்பிள்ளை கேசவன் அதிபர் அவர்களின் மணிவிழா வாழ்த்துச்செய்தி



இந்து மகா சமுத்திரத்தின் முத்தென சிறப்பிக்கப்படும் ஈழத்திரு நாட்டிலே வரலாற்றுப் புகழ் நிறைந்த பூநகரிப் பிரதேசத்தின் கிராமங்களில் மிகப் பழமை வாய்ந்த கிராமங்களில் ஒன்று தான் வேரவில்.

முற்காலத்தில் இக்கிராமத்தை வீரபாண்டியன் எனும் அரசன் ஆட்சி புரிந்ததாக வரலாறு உண்டு. பனை, தென்னை, மீன், நெல் வளங்கள் பொருந்திய வந்தாரை மிக அன்புடன் வரவேற்று விருந்தளிக்கும் பெருமை மிக்கது இக்கிராமம்.

இக்கிராமத்தில் ஐயம்பிள்ளை நாகம்மா தம்பதியினருக்கு 06.12.1963 அன்று கடைசி மகனாக அவதரித்தவர் கேசவன் அவர்கள். இவர் தனது ஆரம்பக் கல்வியை இக்கிராமத்து பாடசாலையிலும், உயர்நிலைக்கல்வியை மீசாலை வீரசிங்கம் கல்லூரியிலும் கற்று வந்தார். அதன் பின் வேரவில் இந்து ம.வியில் கடமையாற்றிய காலத்தில் என்னுடன் தனது கிராமத்துப் பிள்ளைகளின் கல்விநலம் கருதி கற்பித்து வந்தார். இவ்வாறு இங்கு கற்பித்து வந்த காலப்பகுதியில் 16.03.1990 இவருக்கு ஆசிரியர் நியமனம் கிடைத்தது.அங்கு கற்பித்து வந்த காலப்பகுதியில் 03.01.2016 வரை கிராஞ்சி அ.த.க பாடசாலையின் அதிபராக கற்பித்து பெற்றோர்,மாணவர், நலன்விரும்பிகள் ஆகியவர்களால் போற்றிக் கௌரவிக்கப்பட்டார்.

04.01.1996 ஆம் வருடம் தொடக்கம் உயர்தரப் பாடசாலையான வேரவில் இந்து மகாவித்தியாலயத்திற்கு திணைக்களத்தால் அதிபராக நியமிக்கப்பட்டார்.தொடர்ந்து 34 வருடங்களுக்கு மேலாக இவ்விரு பாடசாலைகளிலும் அதிகமாக சேவையாற்றி 06.12.2023 திகதி இன்று மணிவிழா காணும் கதாநாயகனாக இவ்வதிபர் போற்றப்படுகின்றார்.இவர் அதிபராகக் கடமையாற்றிய காலமும் இதற்கு முன்னரான அதிபர் இருந்த காலமும் வித்தியாலயத்தின் கல்வி சிறப்புற மேன்மைப்பட்டிருந்தது.தரம் 5,சாதாரணதரம்,உயர்தரம் ஆகிய வகுப்புகளில் சிறந்த பெறுபேறுகள் கிடைக்கப் பெற்றன.உயர்தர வகுப்பில் பரீட்சைக்கு தோற்றிய அனைத்து மாணவர்களும் சித்தியடைந்து பல மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் இவ்வித்தியாலயத்தின் பெருமைக்கு சான்றாக புகழ் பரப்பியுள்ளனர்.

கிராஞ்சி,வேரவில்,வலைப்பாடு,பொன்னாவெளி, பாலாவி போன்ற கிராமங்களில் இருந்து போக்குவரத்தற்ற இப்பிரதேசத்தின் மத்தியில் அமைந்துள்ள இவ்வித்தியாலயத்தில் கல்வி கற்ற பல மாணவர்கள் ஆசிரியர்களாகவும்,கிராம சேவை உத்தியோகத்தர்களாகவும், நிர்வாக அதிகாரிகளாகவும் இன்னும் பலவிதமாக துறைகளிலும் சிறப்பான சேவையாற்றி வருவதற்கு இவரும் இவரது வித்தியாலய ஆசிரியர்களும் சான்றாக அமைந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் துளசி என்னும் பெயருடைய மனைவியுடன் இணைந்து இல்லறத்தை நல்ல விதமாக நடத்தி முத்தான மூன்று பிள்ளைகளைப் பெற்றெடுத்து நன்கு கல்வி புகட்டி வந்துள்ளார்.அவர்களில் லக்ஷியா என்ற பிள்ளை திருமண பந்தத்தில் இணைந்து வாழ்ந்து வருகின்றார். சிறிவித்தியா என்ற பிள்ளை கிழக்கு பல்கலைக்கழகத்திலும் சபரீசன் எனும் மகன் ஊவா பல்கலைக்கழக்த்திலும் கல்வி கற்று பட்டதாரிகளாக வெளியேறியுள்ளனர்.

தான் கற்பித்த பிள்ளைகளை நல்ல முறையில் கற்பித்ததன் பயனாக அவரது பிள்ளைகளும் சிறந்த கல்வியைப் பெற்றுள்ளமை போற்றுதற்குரியது. 'பிறர் பிள்ளை தலை தடவினால் தன் பிள்ளை தானாக வளரும்'என்ற முதுமொழி இதற்கு சான்றாகும்.

இவரது 34 வருட அதி உன்னத சேவையின் போது அவர் எல்லோரிலும் காட்டிய நல்லுணர்வு,தன் ஆசிரியர்கள், மாணவர்கள்,பெற்றோர்கள், நலன்விரும்பிகள்,திணைக்கள உத்தியோகத்தர்கள் மத்தியில் நன்மதிப்பையும் சிறப்பினையும் ஏற்படுத்தியுள்ளது. 'வாழும் போது வாழ்த்துவோம்' எனும் தொனிப்பொருளில் இவ்வாண்டு இவ்வித்தியாலயத்தில் இவரின் தலைமையில் நடைபெற்ற மறக்க முடியாத ,அழிக்க முடியாத கௌரவிப்பு நிகழ்வு எவர் மனதிலும் என்றென்றும் நிலைத்து நிற்கும் என்பது வெள்ளிடமலை.அத்துடன் இவரது சிறந்த பணிக்கு ஓர் உதாரணமாகவும் அமைந்துள்ளது. இவரது எதிர்கால வாழ்வு இன்று போல் என்றும் அல் போல் தழைத்து,அறுகு போல் வேரூன்றி குடுமடபத்துடன் மேலும் மேலும் சிறக்க எனது அன்பானமேலான வாழ்த்துக்களை மணிவிழாக்காணும் நாயகனான இவருக்கும் இவரது குடும்பத்தினருக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

திரு.தி.கணபதிப்பிள்ளை

ஓய்வுநிலைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர்,

பூநகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா வாழ்த்துச் செய்தி



கிளி/வேரவில் இந்து மகா வித்தியாலயத்தின் அதிபராக கடமையாற்றி 06.12.2023 இல் மணிவிழா காணும் விழா நாயகன் திரு.ஐயம்பிள்ளை கேசவன் அவர்களின் சேவை நலன் பாராட்டி வெளியிடப்படும் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

எனது முதல் நியமனப் பாடசாலையான கிளி/வேரவில் இ.ம.வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றிய காலத்தில் என்னிடம் கற்ற மாணவனாக இருந்து 1990இல் ஆரம்பக்கல்வி உதவி ஆசிரியராக நியமனம் பெற்றார். இவரது தந்தையார்,தாயார்,சகோதரர்கள் என்னுடன் குடும்ப உறவினர்களாக மிக நீண்டகாலமாக எனது தந்தையார் காலம் முதல் இன்று வரை உறவுடையவர்கள். அரச உத்தியோகம் கிடைத்தவுடன் நகரப்பகுதிகளில் தாங்கள் வசதிக்காக சேவையாற்றும் காலத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகஸ்டப் பிரதேசம் என வகைப்படுத்தப்பட்ட பிரதேசமான பூநகரிக் கோட்டத்திலுள்ள வேரவில், கிராஞ்சி பாடசாலையில் தனது சேவையை முழுமையாக செய்துள்ளார்.2012 இல் அதிபர் தரம் 2 II இற்கு நியமனம் பெற்று கிராஞ்சி அ.த.க பாடசாலையில் 03.01.2016 வரை கடமையாற்றினார். 04.01.2016 தொடக்கம் ஓய்வு பெறும் காலம் வரை தான் கல்வி கற்ற பாடசாலையில் அதிபராக கடமையாற்றும் பயனைப் பெற்றுள்ளார்.

இவரிடம் காணப்படும் எளிமை,பொறுமை,தன்னடக்கம் சிறப்பான பண்புகளாகும். 12 ஆண்டுகள் ஆசிரியராகவும் 21 ஆண்டுகள் அதிபராகவும் சமூகத்திற்கு சேவையாற்றியுள்ளார். அத்துடன் பொது அமைப்புகளிலும் சேவையாற்றி வருகின்றார். இவருடைய ஓய்வுக் காலம் சிறப்பாக அமைய வாழ்த்துகிறேன்.

திரு.மு.எமிலியாம்பிள்ளை
ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர்
மடு வலயம் (SLEAS III)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை



என்றும் மாணவர்களுக்கு நல்வழி காட்டும் சிறந்த ஆசிரியர்களில் ஒருவராக இருந்து எல்லோரும் போற்றும் மிக உன்னதமான கோயிலான பள்ளிக்கு தலைமை ஆசிரியராக பல வருடங்களாக மிக சிறப்பான சேவையாற்றி பல மாணவர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றிச் செல்லும் திரு.ஐயம்பிள்ளை கேசவன் ஆகிய தங்களிற்கு 06.12.2023 நடைபெறும் மணிவிழாவில் வாழ்த்துக்களைக் கூறி தங்களது இனிவரும் எதிர்காலம் சிறப்பாக அமைய இறைவனது அருளாசி வேண்டி இவ்வளவு காலமும் தங்களது சேவையை மிகவும் நேர்த்தியாக நிறைவு செய்தமைக்கு எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இனிய வாழ்த்துக்களுடன்,

Dr.A.நிருபனா


கால்நடை வைத்திய அதிகாரி,

பூநகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேரவில் மண்ணின் பெருமை பெறும் அதிபர் திரு. ஐயம்பிள்ளை கேசவன்**



கிளிநொச்சி மாவட்டத்தில் வட மேற்காக அமைந்துள்ள பூநகரிப் பிரதேச செயலகப் பிரிவில் மன்னார் வீதியில் உள்ள பல்லவராயன்கட்டுக்கு மேற்கே பத்து கிலோ மீற்றர் தொலைவில் வேரவில் கிராமம் காணப்படுகிறது. அங்கே நூற்றாண்டு வரலாற்றைக் கொண்ட இந்து மகா வித்தியாலயம் அவ்வூர் மாணவர்களுக்கு ஓர் அரிய அறிவாலயம். 1985 முதல் 1987 வரை மூன்று ஆண்டுகள் ஆசிரியப் பணி புரிய வாய்ப்பு கிடைத்திருந்தது. அந்தக் காலத்தில் அவ்வூரின் இளவலாக, பழைய மாணவராக அறிந்திருந்த திரு. ஐயம்பிள்ளை கேசவன் 1990 இல் தனது பாடசாலையிலேயே ஆசிரியராகி 2016 இல் அதிபராகி நல்ல வளமான மாணவர்களை உருவாக்க களம் அமைத்துள்ளார்கள். இன்று ஓய்வு பெறும் அதிபர் கேசவன் சிறப்பான ஓய்வு காலத்தைப் பெற இறைவனை வேண்டுகிறேன். 2002 முதல் கிராஞ்சி பாடசாலை அதிபராகி அப்பாடசாலையை வளர்த்தெடுத்த பெருமைக்குரியவர். 2016 இல் மீண்டும் வேரவில் மகா வித்தியாலயத்தில் பணியை ஏற்று திறம்பட வழி காட்டியவர். பழைய அதிபர்கள் காட்டிய பாதையில் மாணவர்கள் கல்வியில் நேர்மையான வழியில் மேன்மை அடைய தம்மாலான பங்களிப்பை வழங்கியமை பாராட்டுக்குரியது. படிப்பிலும், விளையாட்டிலும், கலைகளிலும் மாணவர்கள் ஈட்டிய சாதனைகள் பல்கலைக்கழகம் முதல் கல்விக் கல்லூரிகள் மற்றும் அரச பணிகளில் தனியார் துறைகளில் இடம் பிடிக்க வழிகோலியது. இன்று மாவட்டத்தில் முதல் நிலைகளில் மாணவர்கள் இடத்தை பிடிக்க பணி ஆற்றும் அதிபரின் சேவை என்றுமே போற்றுதற்குரியது.


வளர்க நும் பணி!!!
வாழ்க நம் பள்ளி!!!

கலாநிதி.க.ஸ்ரீகணேசன்
சிரேஸ்ட விரிவுரையாளர்,
ஆங்கில மொழிக் கற்பித்தல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆளுமை மிக்க அதிபர்



வேரவில் இந்து மகா வித்தியாலயம் நூறு வருடங்களை கடந்த ஒரு பாடசாலை. இப்பாடசாலையானது ஆரம்பத்தில் யாழ் இந்து தமிழ்க் கலவன் பாடசாலை எனவும் அதன் பின்னர் இந்து மகா வித்தியாலயம் என்றும் பெயர் மாற்றி உயர்ந்து நிற்கின்றது. இவ்வித்தியாலயத்தின் வளர்ச்சியானது 1985 ஆம் ஆண்டிலிருந்தே ஆரம்பமாகின்றது. அக்காலப் பகுதியில் இருந்து கல்வி, இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் எழுச்சி பெறத் தொடங்கியது. அன்றிலிருந்து இந்தப் பாடசாலை வளர்ச்சிப் போக்கில் சென்று கொண்டிருக்கிறது.இதன் வளர்ச்சியை கண்டு புளகாங்கிதமடைகிறேன். 1985 ஆம் ஆண்டின் பின் இங்கு கற்று வெளியேறிய மாணவர்கள் இலங்கை நிர்வாக சேவையிலும் அதிபர் சேவையிலும் நிர்வாக உத்தியோகத்தர் சேவையிலும் கிராம சேவகர் சேவையிலும் உள்ளனர்.


இப்பாடசாலையின் அதிபராக கடமையாற்றும் திரு.ஐ.கேசவன் அவர்கள் இளைஞனாக இருந்த காலத்தில் இருந்தே நானறிவேன்.அவரின் பெற்றோர்,சகோதரசகோதரிகளையும் நானறிவேன். இவர் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலத்தில் கல்வி கற்று தன்னை வளப்படுத்திக் கொண்டவர்.தான் பெற்ற கல்வியினால் ஆசிரியராகி அதிபரானவர்.கிராஞ்சிப் பாடசதலையின் அதிபராகப் பொறுப்பேற்று அதனை வளர்ச்சிப் போக்கில் கொண்டு சென்றவர்.பின்னர் வேரவில் இந்து மகா வித்தியாலயத்தின் அதிபராக பொறுப்பேற்று அதன் தொடர் வளர்ச்சியனை மேலும் முன்னகர்த்தி பல சாதனைகளை நிகழ்த்த வழிவகுத்தவர்.அதில் ஒன்று க.பொ.த (உ.த) கலைப்பிரிவு மாணவி ஒருவர் பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையிலான Z Score தர அடிப்படையில் மாவட்ட மட்டத்தில் இரண்டாம் நிலை பெற்றமையாகும். இவர் வேரவில் பாடசாலையில் அதிபராகிய பின்இரண்டு மூன்று தடவைகள் சந்தித்திருக்கின்றேன். அமைதியானவர்.அதிர்ந்து பேசாதவர். பண்பாளன் ஆவார் .இவர் தனது ஓய்வு காலத்தில் உடல் உள ஆரோக்கியத்துடன் நீண்டகால வாழ வாழ்த்துகின்றேன்.

திரு.சு.சிவாநந்தன்
முன்னாள் கணித ஆசிரியர்,
வேரவில் இ.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி



ஐயம்பிள்ளை கேசவன் அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி கூறுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இவர் என்னுடன் 1995 தொடக்கம் 2000 ஆண்டுவரை உதவி ஆசிரியராக பணிபுரிந்தார்.

இவர் ஆசிரியராக இருந்த காலத்தில் கடமை,கண்ணியம், கட்டுப்பாடு உடையவராக தனது கடமையைச் சரிவர செய்தவர்.இவர் நேரம் தவறாமல் குறித்த நேரத்தில் குறித்த வேலையை செய்து முடிப்பதை குறிக்கோளாக வைத்து சேவை செய்து வெற்றியும் கண்டார் .இவர் இப்பாடசாலையிலே கல்வி கற்று இப்பாடசாலையிலே ஆசிரியராகவும் அதிபராகவும் சேவை செய்து இவ்வூரில் நல்ல பிரசைகள் பலரை உருவாக்கினார். இவர் இப்பாடசாலையில் மிகுந்த பற்றுடையவராக இருந்து சேவை செய்தவர்.பிறவிச் சைவமாக இருந்து சைவ சமயத்தை மாணவர்கள் மத்தியில் வளர்த்தவர்.சக ஆசிரியர்களுடன் அன்பு,பாசம் மற்றும் நேசத்துடன் பழகி வந்தார்.இதனால் ஏனைய ஆசிரியர்களும் இவருடன் நேசமாக இருந்தனர்.இப்பாடசாலையின் நிதிப்பொறுப்பை ஏற்று நேர்மையாக செய்து முடித்தார்.இவர் தனது ஓய்வுக் காலத்தை சமூகப் பணிகளில் அர்ப்பணித்து இந்தக் கிராமத்தில் மக்களை சமூகப்பற்றுள்ளவரகளாக மாற்றி ஒரு நல்ல ஒன்றுபட்ட சமூகத்தை ஏற்படுத்தி எல்லோரையும் நற்பிரசையாக வளர்க்க வேண்டும் என்று எல்லாம் வல்ல வெள்ளிப் பள்ளத்து விநாயகப் பெருமானை வணங்கி கேசவன் அவர்களின் குடும்பத்தினரும் பிள்ளைகளும் என்றும் சந்தோசமாகவும் ஒற்றுமையாகவும் வாழ வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

திரு.கு.கணகலிங்கம்
ஓய்வு நிலை அதிபர்,
கிளி/வேரவில் இ.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா வாழ்த்துச் செய்தி



எண்ணங்கள் தூய்மையுற
எழுச்சி பெற்ற ஆசிரிய
வண்ணத்துள் வாழ்ந்து வளர்ந்திட்ட நல்
இதயன்எங்கள் மனங்கவர்ந்த ஏந்தல் எழில்
வேந்தன்கேசவன் பெயர் சொல்லின்
கீர்த்திமிகு கல்விச்சீர் பேசும்
இவர்பெற்றளித்த அறிவும் நல் ஆற்றல்களும்
தேசொளிர மாணவர்தம் திறன் பெருக்கக்
கண்டோம் யாம்.

வேரவில் பெற்றெடுத்த விவேகமுள்ள பேராசான்.
ஊர் போற்றப் பெயர் பெற்ற உத்தமராம் நல் அதிபர்
கடமையிலே கண்ணாய்
கருத்துடனே பெற்றார்தம் பிள்ளைகளின் நல்லொழுக்கம்

பெருமைதரும் ஆரோக்கியம்
அருமை இவர் ஆளுமைசார் அகம் கனிந்த பேரன்பு ஆட்சி கண்டோம்
அவை சிறப்பு ஆனந்திப்போம்.

கற்றதனால் பெற்ற செல்வம்
கருத்துலவக் காருண்யராய் சுற்றமெலாம் பாராட்ட சோர்வற்றிப் பணி
செய்தீர் ஓய்வினிலும் ஊரார் உமைத் தொடரும் வாய்மை பெற்றீர்
எங்கு சென்ற போதும்

எல்லோரும் பாராட்ட நல்லோராய் வாழந்தீர்
நல்ல உள்ளம் வளம் பெருக்கி
நாளெல்லாம் இனித்திருக்க
வாழ்த்துகிறோம் வாழ்க
உங்கள் மனை சிறக்க மாண்போங்கும் மக்கள் கல்வி மேன்மை தரும்
மகிழவுலவ வாழ்த்துகிறோம்.

திரு.கா.அ.ஜெயக்குமார்,
முன்னையநாள் அதிபர்,
கிளி/வேரவில் இ.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி



கல்வித்துறையில் அளப்பெரும் சேவையாற்றி இன்று மணிவிழா காணும் திரு.ஐயம்பிள்ளை கேசவன் அதிபர் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

வேரவில் இந்து மகாவித்தியாலயத்தில் நான் சிறுவனாகக் கல்வி கற்கின்ற போது திரு.ஐ.கேசவன் அவர்கள் நிரந்தர நியமனம் கிடைப்பதற்கு முன்னரே (1990 ஆம் ஆண்டுக்கு முன்பு) ஆசிரியராகக் கடமையாற்றியவர் .அப்போது எமது பகுதியில் ஆசிரியர்களின் தட்டுப்பாடு இருந்தது.பிரதான பாடங்களுக்கு கூட ஆசிரியர்கள் இல்லை. இதனால் கல்வி கற்ற இளைஞர்களில் திரு.ஐ.கேசவன் அவர்களும் மாணவர்களின் நிலை கருதி கற்பித்தல் பணியில் ஈடுபட்டவர். இதனை ஓர் பாக்கியம் என்றே கருதுவேன். பிரதான பாடமாக தமிழைக் கற்பித்தார். இத்துறையில் ஆழமான அறிவுடையவர். அத்தோடு வேறு பாடங்களையும் கற்பிக்கும் சகல துறை விற்பனரும் கூட. பின்னர் நிரந்தர நியமனம் கிடைத்து எமது பாடசாலையிலும் அயற்பாடசாலைகளிலும் கல்விப்பணியாற்றி அதிபராகப் பதவி உயர்வினைப் பெற்று கிளி/வேரவில் இந்து மகாவித்தியாலயத்தில் தனது அதிபர் சேவையில் ஓய்வு பெறுகின்றார்.

சிறந்த ஆளுமைப் பண்பும் சக உத்தியோகத்தர்களிடையே பரஸ்பர உறவும் கொண்டு தனது பதவிக்காலத்தில் சிறப்பான கல்விப்பணியாற்றி பல மாணவர்களின் வாழ்வில் ஒளியூட்டிய மதிப்பு மிக்க அதிபர் திரு.ஐ.கேசவன் அவர்கள் சிறந்த உடல்,உள ஆரோக்கியத்துடன் வாழ இறையாசி வேண்டி அவரது மணிவிழா சிறக்க எனது வாழ்த்துக்கள்.

அன்புடன்,
திரு.சி.ஸ்ரீரஞ்சன்
முன்னாள் தவிசாளர்,
பிரதேச சபை,பூநகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி



காடும் காடு சார்ந்த இடமாகிய முல்லை நிலத்தின் இயற்கை எழில் மிக்கதும் பார்ப்பதற்கு பசுமை நிறைந்ததாகவும் பாடிவரும் பலவகை பறவைகளின் இன்னிசை எழுப்பி கானம் பாடும் கானகமாகவும் அமைதியின் இருப்பிடமாகவும் காணப்படும் அழகிய கிராமம் வேரவில். இங்கு மார்கழித் திங்கள் 06.12.1963 பிறந்து ஆசிரியர் அதிபர் சேவைப் பதவிக்காலத்தை அகவை 60 இல் பூர்த்தி செய்து மணிவிழாக்காணும் வேரவில் இந்து மகாவித்தியாலய அதிபர் திரு.ஐயம்பிள்ளை கேசவன் அவர்களை வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கல்வியில் பின்தங்கிய பிரதேசத்தில் பிறந்து ஆரம்ப இடைநிலைக் கல்வியைக் கற்று பல சவால்களைத் தாண்டி கடின முயற்சியால் கல்வியில் உயர்ந்து தான் கல்வி கற்ற பாடசாலையில் 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற வாக்கியத்திற்கு அமைவாக ஆசிரியராக,அதிபராக இப்பாடசாலையில் பல ஆண்டுகள் கடமையாற்றியுள்ளார்.

அறிவுக்கூர்மையும் ஆக்க சக்தியும் அறநெறி தவறாத சிறந்த அதிபராவார்.யாருடைய மனதையும் புண்படுத்தாது யாருக்கும் தீமை செய்யாது வன்முறைகளைக் கடந்து இன்முகத்தோடும் அமைதியான முறையில் அதிக ஆரவாரமின்றி ஆமை போன்று அனைத்தையும் தனக்குள் அடக்கி ஆசிரியர் மாணவர்களை தனித்துவமான முறையில் இனங்கண்டு செயலாற்றும் நல்ல பண்பும் ஆளுமையுமுள்ள அதிபராக செயலாற்றி வந்தமை பாராட்டத்தக்கதாகும்.

நான் பலாலி ஆசிரியர் கலாசாலையில் கல்வி பயின்ற அதே காலப்பகுதியில் அதிபர் அவர்களும் தேசிய கல்வி நிறுவனத்தில் கல்விப் பயிற்சியினை மேற்கொண்டார்.அதிக வார்த்தைகள் பேசாது விட்டாலும் ஓர் இனிமையான புன்முறுவலினால் அனைவர் உள்ளத்தையும் கொள்ளை கொண்டவர்.

தன்னைப் போன்று தனது பிள்ளைச் செல்வங்களையும் ஒழுக்க நெறியிலும் உயர் கல்வியிலும் உயர்வடைய செய்த நல்ல தந்தையாகவும் ஆசிரியராகவும் வழிகாட்டியாகவும் திகழ்ந்தமை பாராட்டக்கூடியது.

தனது கிராமத்தின் வளர்ச்சிக்காக பல பொதுநல அமைப்பு சேவைகளில் இணைந்து சமூகப்பணியாற்றி கலாச்சார பண்பாட்டு விழுமியங்கள் குறையாது கட்டிக்காத்து அதன் வளர்ச்சியிலும் உயர்ச்சியிலும் தன்னை முழுமையாகக் கையளித்து வருவது பாராட்டத்தக்கது.

ஓய்வுபெறும் காலத்தில் தொடர்ந்து தனது மனைவி மக்களோடும் உறவுகளோடும் நலமே வாழவும் நோய்நொடியின்றி நற்சுகத்துடன் பல்லாண்டு காலம் வாழ இறைவனை வேண்டுகின்றேன்.

'God Bless You'

அருட்சகோதரி.சி.அனற்றா றோச்
திருக்குடும்பக் கன்னியர் மடம்,
வேரவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றேன்.



கல்விப்பணி எனும் அறப்பணியை ஆற்றி இன்று மணிவிழாக் காணும் வேரவில் மைந்தன் நண்பன் அதிபர் கேசவன் அவர்களை பாராட்டி வாழ்த்துவதில் பெருமிதம் கொள்கின்றேன்.

அரிவரி தொடக்கம் ஆசிரியச் சேவைக்காலம் வரை ஒன்றாக ஒரே வகுப்பில் ஒரே பாடசாலையில் கல்வி கற்று ஆசிரியர் சேவையிலும் ஒன்றாக பணியாற்றி அதிபர் சேவையிலும் ஒரே கோட்டத்தில் பணிபுரிந்து இன்று மணிவிழா காணும் வேரவில் மண்ணின் மைந்தனைப் பாராட்டி எழுதுவதில் பெருமிதம் கொள்கின்றேன்.

நாம் இருவரும் வேரவில் மண்ணில் பிறந்தோம்.வேரவில் மண்ணில் படித்தோம்.வேரவில் மண்ணில் ஆசிரிய சேவையை தொடங்கினோம்.அந்தக்காலப்பகுதியை மீட்கும் போது என்னை அறியாமல் இளமை துளிர் விடுவது போல் உணர முடிகிறது.முதன்முதலாக வேரவில் பாடசாலையிலிருந்து கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்து உயர்கல்வி கற்க சென்ற பெருமையும் முதன்முதலாக இப்பாடசாலையில் பயின்று ஆசிரியர் நியமனம் பெற்ற பெருமையும் எம்மையே சாரும்.

1968இல் தரம் 1 இல் சேர்ந்தோம். 1990 இல் ஆசிரியர் நியமனத்தில் சேர்ந்தோம். இன்று வரை எமது நட்பு இடைவிடாது தொடர்கிறது.

நல்ல கல்விப்புலம்,மற்றவர்களுடன் அன்பாகப் பழகும் முறை,உதவும் பண்பு,விகடமான பேச்சு, வியக்க வைக்கும் நகைச்சுவை என்பன இவரிடத்தில் காணப்பட்டது.


1968 இல் தரம் 1 இல் கல்வி கற்பதற்கு சேர்ந்து 1990 இல் ஆசிரியர் நியமனத்தில் இணைந்து இன்று வரை எமது நட்பு இடைவிடாது தொடர்கிறது. ஓய்வுக் காலங்களிலும் எமது நட்பு தொடர இறைவனை வேண்டி நீண்ட ஆயுளும் நிறைவான வளத்துடன் வாழ இறைவனின் ஆசி வேண்டி பாராட்டி வாழ்த்துகிறேன்.

திரு.சு.செல்வரத்தினம்
ஓய்வுநிலை அதிபர்
அகில இலங்கை சமாதான நீதவான்,
பழைய மாணவர்,முன்னாள் ஆசிரியர், உப அதிபர்
கிளி/வேரவில் இ.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆற்றலும் அனுபவமும் நிறைந்த சிறந்த முகாமையாளர்



கிளி/வேரவில் இந்து மகாவித்தியாலயத்தின் அதிபரான உயர்திரு.ஐயம்பிள்ளை கேசவன் அவர்களின் மலரிற்கு எனது செய்தியை வழங்குவதற்கு சந்தர்ப்பம் தந்த மணிவிழா குழுவிற்கு எனது நன்றியைத் தெரிவிக்கும் அதேவேளையில் திரு.ஐ.கேசவன் பதவியிலிருந்து ஓய்வு பெறவுள்ளார் என்பதனை எண்ணும் போது மனம் வருந்த வேண்டியுள்ளது.

திரு.ஐ.கேசவன் அவர்கள் தொண்ணூறின் முற்பகுதியில் ஆசிரியர் பணியினைத் தான் கற்ற பாடசாலையிலேயே ஆரம்பித்து பன்னிரண்டு வருடங்கள் சிறந்த சேவையாற்றி பதவியுயர்வு பெற்றுபல சவால்கள் நிறைந்த காலத்தில் கிளி/கிராஞ்சி அ.த.க பாடசாலையில் அதஅபிவிருபராகக் கடமையேற்று அங்கு பல சாதனைகளைப் படைத்து அப்பாடசாலையை பல வழிகளிலும் அபிவிருத்தியை ஏற்படுத்தி பதினான்கு வருடங்கள் சிறந்த சேவையாற்றி இரண்டாயிரத்து பதினாறாம் ஆண்டின் முற்பகுதியில் இருந்து வேரவில் இந்து மகாவித்தியாலயத்திற்கு அதிபர் பதவியேற்று ஏழு வருடங்கள் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி 05.12.2023 அன்று ஓய்வு பெறுகின்றார். நீண்டகாலம் அதிபராக இருந்தவர்களின் வரிசைகளில் இவரும் ஒருவராவார்.

ஆளுமை மிக்க நல்ல மனிதர். தான் பெற்ற அனுபவத்தினூடாகவும் இயல்பாகவே இருந்த திறன்கள் வாயிலாகவும் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், கல்விப்புல உத்தியோகத்தர்கள், அதிகாரிகள் என பலதரப்பட்டவர்களின் உதவிகளையும் ஒத்துழைப்புகளையும் பெற்று இப்பாடசாலையை வளப்படுத்திய பெருமை இவரையே சாரும்.

சைவசமய கலாசாரத்தை பேணுவதிலும் பின்பற்றுவதிலும் உதாரண புருஷராகத் திகழும் இவர் பல்வேறு சமூகப் பணிகளிலும் பொதுப்பணிகளிலும் தம்மை அர்ப்பணித்து முன்னேறி வருவது குறிப்பிடத்தக்கது. இவரது ஓய்வு காலம் சிறக்கவும் இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து சமூக,சமயப் பணிகளில் ஈடுபடவும் இவரது இல்லறமும் வளமடையவும் எல்லாம் வல்ல இறைவனை வணங்கி விடை பெறுகின்றேன்.

திரு.நீ.கருணாநிதி
முன்னைய நாள் அதிபர்
கிளி/வேரவில் இ.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை



கிளி/வேரவில் இந்து மகா வித்தியாலயத்தின் அதிபராகப் பணியாற்றிய திரு.ஐயம்பிள்ளை கேசவன் அவர்களின் பணி ஓய்வுக்கு வாழ்த்துரை வழங்க வாய்ப்பளித்த ஏற்பாட்டுக் குழுவினர்களுக்கு என் உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு.ஐ.கேசவன் அவர்கள் கடந்த 34 வருடங்களாகக் கல்வித் துறையில் அளப்பரிய சேவையாற்றிப் பணியிலிருந்து ஓய்வு பெறுகிறார். அவருக்கு எனது உளம் கனிந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

திரு.ஐ.கேசவன் அவர்கள் என்னுடன் கிளி/வேரவில் இந்து மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணியாற்றி சில ஆண்டுகளின் பின்னர் கிளி/கிராஞ்சி அ.த.க பாடசாலையில் 'தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி தன் மெய் வருந்தக் கூலி தரும்' எனும் வள்ளுவர் வாக்கிற்கேற்ப அதிபராகப் பதவியுயர்வு பெற்றதுடன் 2002 தொடக்கம் 2016 வரை பணியாற்றிய காலத்தில் இப்பாடசாலையை வகை 2 பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்ட பெருமையும் இவருக்கே உரியது.

நான் இவ்வூரில் வாழ்ந்த படியால் இவரின் குடும்ப நண்பராகவும் சக ஆசிரியராகவும் பணியாற்றி வந்தேன். இவரின் பொது அமைப்பு சேவைகள் அளவிடற்கரியவை.இவருடைய கல்வித்துறையில் நீண்ட நெடிய பயணத்தில் 'தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்'என்ற குறளுக்கு இணங்க இவர் அதிகமான மாணவர்களை மிகச்சிறந்த போதனைகள் வழி உயர்நிலைக்கு கொண்டு சென்றிருக்கிறார்.கவலை என்பது இவருக்குத் தெரியாத ஒன்று. எந்நேரமும் நகைச்சுவையாகவும் கலகலப்பாகவும் சிலேடையாகவும் பேசி எல்லோரையும் மகிழ்ச்சியாக வைத்திருக்கக் கூடியவர். 'உடுக்கை இழந்தவன் கை போல ஆங்கே இடுக்கண் கலைவதாம் நட்பு' என்ற வள்ளுவன் வாக்கிற்கு இலக்கணமானவர்.எல்லோருக்கும் எந்த வேளையிலும் உதவி செய்யும் மனம் படைத்தவர். வானத்தைப் போல மனம் படைத்த மன்னவன்.

மாந்தனாகப் பிறந்த ஒவ்வொருவரும் பயனான வாழ்க்கையை வாழ்ந்து பிறரையும் பயன்மிகு வழிக்கு கொண்டு வரவைப்பதே நீதியாகும்.அந்தப் பணியினை மிகச்சிறப்பாக செய்துள்ளார். அதிபர் கேசவன் காட்டில் நிலவாய் கடலில் மழையாய் பிறந்தால் யாருக்கு இலாபம் பசியில் உணவாய் பகைக்கு உறவாய் இருந்தால் ஊருக்கு இலாபம்.....என்ற பாடல் வரிகளுக்கேற்ப இவரின் சேவைகள் அமைந்துள்ளன.

ஓய்வு என்பது சும்மா இருப்பதல்ல.மனதுக்கு மகிழ்ச்சி தரும் தொண்டொன்றில் தன்னைக் கரைத்துக் கொள்வதே என்ற வார்த்தைகளை என்றோ உள்வாங்கியவர்.ஓய்வு என்பது வேலை செய்பவர்களுக்கு வேலையை வேள்வியாய் செய்யும் கேசவன் போன்றவர்களுக்கு ஏது ஓய்வு?

நாளெல்லாம் நல்லென நடக்கட்டும் நகரும் பொழுதெல்லாம் நல்லவை ஆகட்டும். ஆண்டவரின் அருள் தங்களையும் தங்கள் குடும்பத்தினரையும் அகலாது சூழட்டும் என்று பிரார்த்திக்கின்றேன். வாழ்த்துகின்றேன்.

வாழ்க! வளமுடன்!

அன்பிற்கினிய நண்பன் கேசவன் அவர்களுக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

செல்வி.பாக்கியராணி றிச்மண்ட்
ஓய்வு பெற்ற ஆசிரியை
கிளி/வேரவில் இ.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச்செய்தி



கிளி/வேரவில் இந்து மகா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி இன்று ஓய்வு பெறும் மதிப்பிற்குரிய உயர்திரு ஐயம்பிள்ளை கேசவன் அவர்களின் மணிவிழா மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்வேளையில் இவரது அன்பு நிறைந்த உள்ளங்களினால் மணிவிழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை சிறப்பானதாகவும் பாராட்டப்படத்தக்கதாகவும் இருக்கின்றது. இவராற்றிய கல்வி பணிக்காக நன்றி கூறுவதோடு இவரின் விழா சிறக்க வாழ்த்துக்களையும் மனதார தெரிவித்து நிற்கின்றேன். இவருடன் ஒன்றாக பணியாற்ற வாய்ப்பு கிடைக்காத போதும் 2016 ஆம் ஆண்டு ஒரு வருடம் இவருக்கு கீழ் பணியாற்றும் வாயப்பைப் பெற்றேன். மேலும் இவர் பணியாற்றிய பிரதேசத்தில் நீண்டகாலம் இணைந்து பணியாற்றும் வாய்ப்பு கிடைத்ததும் ஓர் வரப்பிரசாதமாகும். அமைதியான மனிதர்,உண்மையான உழைப்பாளி, துடிப்பான பணியாளர் என இவரிடம் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய விடயங்கள் நிறைய உண்டு.தான் வேலை செய்த இடத்தினில் மாணவர்கள், பெற்றோர்களது கல்வி ஊக்கியாக மட்டுமன்றி சமூக சேவைகளையும் இணைத்து பல சமூகத் தொண்டுகளையும் அச் சமூகங்களுக்காக மேற்கொண்டவர். தான் கற்பித்த, அதிபராக கடமையாற்றிய பாடசாலைகளிலே தனது பிள்ளைகளையும் கற்பித்துக் காட்டியவர். நல்ல நிலைக்கு தன் பிள்ளைகளைக் கொண்டு வந்த பற்றாளன். இவர் இவ் வருடம் 06.12.2023 அன்று பணியில் ஓய்வு பெறுகின்றார். ஓய்வு என்பது நோக்கத்தைக் கைவிடுவதல்ல என்ற கூற்றுக்கமைய ஓய்வான பின்னரும் தான் சார்ந்த சமூகத்திற்கும் அளப்பரிய சேவையினை இவர் ஆற்றுதல் வேண்டும். எனவே இந்தப் பணியைச் செய்வதற்கு இவர் நீண்ட ஆரோக்கியமான உடல் உள வலுவைப் பெற்றிட இறைவனிடம் வேண்டி இவரது அறுபதும் அறுபதிற்கான மலரும் சிறக்க வாழ்த்துகின்றேன்

நன்றி

திரு.ச.லதீஸ்குமார்
அதிபர்,
கிளி/கிராஞ்சி அ.த.க. பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச் செய்தி

ஆற்றல்மிகு கல்வி நிறுவனங்களையும் ஆலயங்களையும் ஒன்றிணைந்ததாக கருதுகின்ற ஈழ ஊராம் வேரவில் கிராமம் தனில் தனது கல்விளைப் பெற்று தன்னை வளப்படுத்திக் கொண்ட திரு.ஐ.கேசவன் அதிபர் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழத்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இவர் தன்னுடைய வேலை உலகிலே ஆசிரியராகவும் அதிபராகவும் இப்பாடசாலையிலே கடமை ஆற்றி பிரதேச மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டு கல்விப் பணியிலும் சமயப் பணியிலும் தன்னைக் கரைத்துக் கொண்ட ஒருவராவார்.

வன்னிப் பெருநிலப்பரப்பு போரின் தாக்கத்தினால் பெரும் இடர்பாடுகளை சந்தித்த பொழுது இவர் மிகவும் மகத்தான கல்விப் பணியினை இந்த மாணவர்களுக்கு வழங்குவதற்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். சமூகப் பணிகளிலும் இப்பிரதேசத்தை வளர்ச்சி அடைந்த பிரதேசமாக மாற்ற வேண்டும் என்று தூர சிந்தனையோடும் அல்லும் பகலும் உழைத்து வருகின்ற ஒரு பெருந்தகை ஆவார். பாடசாலையில் நிர்வாக பணிகளை இக்கட்டான வேளைகளிலும் எந்தவித சஞ்சலமுமின்றி சிறப்பாகவும் வினைத்திறனாகவும் ஆற்றக்கூடிய ஒருவராவார்.

ஒரு பாடசாலையை வழிநடத்துவது என்பது இலகுவான காரியமாக இக்காலப் பகுதியில் அமைந்திருப்பதில்லை. சமூகத்தின் சிறு விம்பமாக காணப்படுகின்ற பாடசாலையில் பல்வேறுபட்ட பிரச்சினைகளை நாளுக்கு நாள் எதிர்கொண்டு அவற்றை செவ்வனே தீர்க்கின்ற ஆற்றல் அதிபர்களுக்கு வாய்த்திருக்க வேண்டும். அந்த கைங்காரியத்தை சிறப்பான முறையில் கையாண்டு வேரவில் இந்துவின் பிள்ளைகளை சரியான பாதையில் இட்டு செல்கின்ற உன்னத பணியை ஆற்றி இன்று மணிவிழாக்காணும் இவருடைய ஓய்வு காலம் உடல், உள, ஆன்மீக பலத்துடன் அமைதி நிறைந்ததாகவும் சந்தோசம் நிரம்பியதாகவும் இறை ஆசீருடன் விளங்க வேண்டும் என்று இறைவனை பிரார்திக்கின்றேன்.

இதேவளையில் இவரது அன்பு நிறைந்த உள்ளங்களினால் மணிவிழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை சிறப்பானதாகவும் பாராட்டப்படத்தக்கதாகவும் இருக்கின்றது. இவராற்றிய கல்விப் பணிக்காக நன்றி கூறுவதோடு இவரின் விழா சிறக்க வாழ்த்துக்களையும் மனதார தெரிவித்து நிக்கின்றேன்.

திரு.ம.மரியராசா
அதிபர்
கிளி/வலைப்பாடு றோமன் கத்தோலிக்க
தமிழ் கலவன் பாடசாலை
வலைப்பாடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா காணும் என் ஆசான் வாழிய வாழியவே



கிளி/வேரவில் இந்து மகா வித்தியாலயத்தின் அதிபராக சேவையாற்றி மணிவிழாக் காணும் என் ஆசான் மதிப்புக்குரிய திரு ஐயம்பிள்ளை கேசவன் அவர்களின் சேவைநயந்து வெளியாகும் மணிவிழா மலருக்காக அவரைப்பற்றிய சில வரிகளை எழுதக்கிடைத்த சந்தர்ப்பத்தை பெருமையாகக் கருதுகிறேன்.

எமது மண்ணின் மைந்தனான கேசவன் அதிபர் அவர்கள் கிளி/வேரவில் இந்து மகா வித்தியாலயமாகிய எம் பள்ளியின் மாணவனாக நல் ஆசானாக நல் அதிபராக கடமையாற்றிய பெருமை இவரையே சாரும். அடிப்படை வசதிகளற்ற மிகவும் பின்தங்கிய எமது பகுதியில் கல்வியில் சமூகம் விழிப்படைந்திராத காலத்தில் கற்றலில் சிறந்து விளங்கியமையால் எண்பதுகளின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் சென்று க.பொ.த. (உ/த) வரை கற்று தேர்ந்து மீண்டும் எமது பள்ளிக்கு ஆசிரியராக நியமனம் பெற்று வந்தார்.

1990 ஆம் ஆண்டில் அதிபராக திரு.தி.கணபதிப்பிள்ளை சேர் இருந்த காலத்திலே எம் பள்ளிக்கு முதன் முதலாக ஆசிரியர் நியமனம் பெற்று வந்தார். அந்நாள் எம் பிரதேசம் பெருமை கொண்ட இனிய நாள். ஏம் பிரதேசதின் மைந்தர்களான மூவர் ஒரேநாளில் எம் பள்ளியில் கடமையேற்றார்கள். அப்போது நான் இரண்டாம் வகுப்பில் கல்வி கற்றுக்கொண்டிருந்தேன். கிராஞ்சியிலிருந்து எம் அதிபரோடு கூட திரு.தம்பிப்பிள்ளை விநாயகமூர்த்தி மற்றும் வேரவில்லிருந்து திரு.சுப்பையா செல்வரட்ணம் ஆகிய மூவரும் புதிதாக வந்தனர். விபரம் தெரியாத சிறுவனாக இருந்தாலும் ஊரவர்கள் ஒரேநாளில் ஒன்றாக நியமனம் பெற்ற பெருமையை ஊர் கதைத்ததோ என்னவோ அந்நாள் இன்றும் பசுமையான நினைவாக உள்ளது. வேறு தூரப்பகுதிகளிலிருந்து வந்து தங்கிநின்று சேவையாற்றிய அக்காலப்பகுதியின் ஆசிரியர் குழாத்துடன் எம் ஊரவர்களாக முதன்முதலில் மூவர் ஒரேசமயத்தில் நியமனம் பெற்றுக்கொண்டமை எம் பிரதேசத்திற்கு பெருமையான விடயமாக இருந்திருக்கும் என்பது நிச்சயமாகும். மாணவர்கள் எல்லோரதும் குடும்பப் பின்னணிகளைத் தெரிந்தவர்களாக மாணவர்களை இனங்கண்டு ஊக்கப்படுத்தல்களை வழங்கி சிறப்பான கற்றல் கற்பித்தலில் ஈடுபாடு கொண்டு கற்பித்தனர். இவர்கள் இட்ட அடித்தளங்களே பின் நாட்களில் நான் உட்பட பல மாணவர்கள் கற்றலில் துலங்கவும் பெயர் சொல்லும் படியாக கற்றலில் விழிப்புணர்வுகொண்ட மாணவர் சமூகம் உருவாகவும் காரணமாக அமைந்தது.

விழா நாயகன் கேசவன் சேர் அன்று இடைநிலைப் பிரிவு வகுப்புக்களுக்கு சிறப்பாக தமிழ் பாடத்தைப் போதித்தார். இடைநிலைப்பிரிவுகளுக்கு தமிழ் இலக்கியங்களை நயம்படவும் இலக்கணங்களை மாணவர்கள் விளங்கக்கூடிய வகையிலும் சிறப்பாக கற்பித்தார். தொண்ணூறுகளில் க.பொ.த.(சா/த) பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள மாணவர்களைச் சிறப்பாக வழிப்படுத்தினார். நான் இடைநிலைப் பிரிவின் ஆரம்ப வகுப்புக்களில் கேசவன் சேரிடம் படித்திருக்கிறேன். இவர் கற்பித்தல் முறை சிறப்பானது. "ஒரு தலைமைத் தொடரோடு சார்புத்தொடர் ஒன்றேனும் பலவேனும் கலந்துவரும் வாக்கியம் கலப்பு வாக்கியம் எனப்படும்" என அவர் கற்பித்தது இன்றும் பசுமையாய் உள்ளது. சிறந்த முறையில் இலக்கணங்களை மாணவர்கள் யாவரும் விளங்கும்படியாக கற்பித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைபாடவிதான செயற்பாடுகளிலும் சிறப்பான பங்களிப்பை வழங்கினார். குறிப்பாக பாடசாலையில் திரு.க.சிவசாமி அதிபர் அவர்கள் பணியாற்றிய காலத்தில் சாரணர் அணியை உருவாக்கி அதற்கு சிறப்பான பயிற்சிகளை வழங்கினார். வேறு இடங்களுக்கு அழைத்துச் சென்று சாரணர் பயிற்சிப் பாசறைகளையும் நடாத்தியிருக்கிறார்.

இவர் நகைச்சுவையாக கதைகள் பேசுவதோடு நாசூக்காக பேசும் பேச்சாற்றலும் கொண்டவர். எங்கும் எவரிடமும் கலகலப்பாக பேசுவதுடன் அவரின் பேச்சுக்கள் சிந்திக்கத்தூண்டுவனவாகவும் இருக்கும். ஒரு சமயம் அதிபர் ,ஆசிரியர்கள் மாணவர்கள் ஒன்றாய் பூங்காவில் நின்றிருந்த நேரம் ஒரு மாணவன் பூங்கா உபகரணம் ஒன்றுக்கு லைற் நீலம் கலந்து வர்ணம் அடித்தனாங்கள் என்று சொல்லும் போது அதைக்கேட்ட அதிபர், 'லைற் என்று ஆங்கிலத்தையும் நீலம் என்று தமிழையும் ஏன் இரண்டு மொழியையும் கலந்து சொல்லுறாய் மெல்லியநீலம் அல்லது லைற் புளூ என்று சொல்லவேணும்' என்பதாக சொல்ல அதை நகைச்சுவையாகவும் சிந்திக்குபடியாகவும் இரண்டு நிறங்களையும் கலக்குறதுதானே அதுதான் சேர் தமிழையும் ஆங்கிலத்தையும் கலந்திட்டான் போல என்று தன் மாணவன் பக்கமாக நின்று பேசினார். மாணவனாக இருந்து அன்றைய நாளில் கேட்டது சிந்திக்கச் செய்யும் ஞாபகமாக இன்றும் உள்ளது.

அவர் திறமையையும் ஆளுமையையும் கண்ட அன்றைய வலயக்கல்வி அலுவலகம் அவரை கிளி/கிராஞ்சி அ.த.க.பாடசாலையின் அதிபராக தொண்ணூறுகளின் இறுதியில் நியமித்தது. அதிபராகச் சென்ற இவர் அப்பாடசாலையின் வளர்ச்சிக்காக பெரும்பாடுபட்டு பாடசாலையை பௌதீக வள ரீதியிலும் கல்வியிலும் இதர செயற்பாடுகளிலும் முன்னிலை பெற வைத்தார். மீண்டும் 2016ஆம் ஆண்டு கிளி/வேரவில் இந்து மகா வித்தியாலயத்தின் அதிபராக நியமிக்கப்பட்டார். எம் பள்ளியில் கடந்த ஏழு வருடங்களாக கடமையாற்றி பெரும்பணியாற்றினார். பள்ளியின் சமூகம் அவருடன் படித்தவர்கள், அவரிடம் படித்தவர்கள், தெரிந்தவர்கள், பழகியவர்கள் என்ற வகையிலே காணப்பட்டதால் பாடசாலை சமூகத்தை ஒன்றிணைத்து பல வளர்ச்சிகளை ஏற்படுத்தினார். இவர் கடமையேற்றதன் பின்னர் ஏற்றபட்ட வளர்ச்சிகளை பாடசாலையினுள் பௌதீகத் வளத் தோற்றங்களாகவும் பண்புத்தரச் சுட்டிகளாகவும் இன்று கண்கூடாகக் காணலாம். இவர் செய்த சேவைகளுக்காய் அர்ப்பணிப்புக்களை மதிப்பளித்து இன்று பாடசாலை சமூகமாக இணைந்து அறுபதாவது அகவையிலே மணிவிழாவை பெருவிழாவாக கொண்டாடுவது மெச்சத்தக்கது. மணிவிழா நாளிலே உடல் உள ஆரோக்கியத்துடன் மகிழ்வுடன் வாழ இறைதுணை வேண்டி மணிவிழா நாயகனின் மாணவனாக வாழ்த்தி பெருமகிழ்வடைகிறேன்.

திரு.ஜெயபாலன் சிறீரங்கன்
முன்னையநாள் ஆசிரியர்,
கிளி/கல்மடுநகர் அ.த.க.பாடசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி



முல்லையும் மருதமும் ஒருங்கே அமைந்த அமைதியான இயற்கை அழகுநிறைந்த வேரவில் கிராமத்தில் அறிவுச் சுடர் ஏற்றும் அன்னை கிளி/வேரவில் இந்து மகா வித்தியாலயத்தில் பணியாற்றி மணிவிழாக் காணும் அன்பும் பண்பும் மிகு அதிபரின் சேவையை நயந்தும் வியந்தும் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் அகமகிழ்கின்றேன்.

அணுகியோரை ஆளுமையாக்கும் அனுபவம் வாய்ந்த திரு.ஐ.கேசவன் அதிபர் தனித்துவமானவர் எப்போதும் எச் செயலைச் செய்தாலும் பார்ப்பதற்குச் சாதாரணமாகவே தெரியும் ஆனால் தூரநோக்கும் தூய சிந்தனையும் மிக்கவர். இன்முகத்துடன் வரவேற்று நகைச்சுவையுடனே ஆயிரம் சிந்தனைகளைப் புகட்டி வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல விடயத்தை நுணுக்கமாகக் கூறும் தந்திரம் மிக்கவராகத் திகழ்கின்றார்.

எமது பாடசாலை பின்தங்கிய பிரதேசத்தில் குன்றும் குழியும் நிறைந்த போக்குவரத்து சீரற்ற இடத்தில் காணப்படுவதால் பணி செய்வதற்கு யாரும் வர விரும்புவதில்லை எனினும் அதிபரின் இன்முக வரவேற்பும் ஆற்றுப்படுத்தல் திறனும் ஆசிரியர்களின் நலன்களில் அக்கறை உள்ளவராகக் காணப்படுவதால் தம் இன்னல்களை மறந்து காலங்கள் போனதே தெரியாமல் சேவை செய்கின்றனர்.

எப்போதுமே சுறுசுறுப்புடன் மூப்பை வெளிக்காட்டாமல் ஆர்வமுடன் சேவை செய்பவர். இயற்கை பசளையில் வீட்டுத்தோட்ட மரக்கறிகளையே விரும்புபவர் இதுவே அவரது உடல் உள ஆரோக்கியத்திற்கும் மூப்பைக் காட்டிக் கொள்ளாத இரகசியமும் என்றால் அது மிகையாகாது.

தென்னங்கீற்றுத் தென்றலுடன் தெம்மாங்கின் இசையும் சேர மணிவிழாக்காணும் எம் அதிபரின் ஓய்வுக் காலம் சிறக்க வாழ்த்துகின்றேன்.

திரு.சி.பிரதாஸ்கரன்
பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னைய நாள் அபிவிருத்திச் சங்க செயலாளரின் வாழ்த்துச்செய்தி



இயற்கை வளங்கள் ஒருங்கே அமையப்பெற்ற கிளிநொச்சி மாவட்டத்தில் வரலாற்றுப்பதிவுகளை தன்னகத்தே கொண்ட பூநகரிப் பகுதியின் தென்புலத்திலே பல்லவராயன்கட்டுச் சந்தியில் இருந்து ஏழு கல் மைல் தொலைவில் அறிவுக் கண்ணை திறக்கும் கிளி/வேரவில் இந்து மகா வித்தியாலயத்தில் கல்வியினைக் கற்று கற்பித்து 06.12.2023 அன்று மணிவிழாக்காணும் எமது பாடசாலையின் முதல்வர் திரு.ஐயம்பிள்ளை கேசவன் ஐயா அவர்களின் மணிவிழா மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் அக மகிழ்வடைகின்றேன்.

வேரவில் கிராமத்திலே பிறந்து வேரவில் இந்து மகா வித்தியாலயத்தில் கல்வியினைக் கற்று தனது உயர்கல்வியை யா/மீசாலை வீரசிங்கம் கல்லூரியில் கலைப்பிரிவில் கற்று மீண்டும் உயர்கல்வி முடிந்தவுடன் எமது பாடசாலையில் தொண்டர் ஆசிரியராக கடமையாற்றி 16.03.1990 ஆசிரிய நியமனத்தினைப் பெற்று இப்பாடசாலையில் தனது காலத்தில் பலவேறு துறைகளில் மாணவர்களை மிளிரச்செய்து 2002.08.12 வரை இப்பாடசாலையில் தனது பெரும் சேவையினை செய்து அதிபராக 13.08.2002 தொடக்கம் கிளிகிராஞ்சி அ.த.க பாடசாலையில் கடமையினை பொறுப்பேற்று அங்கும் பல மாணவர்களை உருவாக்கி உயர் கல்விக்கு வழி சமைத்து நின்றவர். அதிபர் கேசவன் ஐயா அவர்கள் அங்கும் கல்வி, இணைப்பாடவிதானம், விளையாட்டுஅனைத்திலும் சாதனைகள் படைத்து தன் சேவையிலும் சிறந்து விளங்கியவர்.

2016.01.04 முதல் மீண்டும் தான்கற்ற பாடசாலையிலேயே முதல்வராக கடமையினைப் பொறுப்பேற்று தனது பணியினை சிறப்பாக மேற்கொண்டவர். அவரின் சாதனைகள் கல்வி,விளையாட்டு என கிளிவேரவில் இந்துவிலும் தொடர்ந்தது. இவர்காலத்தில் எமது பாடசாலையில் இருந்து பல்கலைக்கழகத்திற்கும் பெரும்பாலான மாணவர்கள் தெரிவாகியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இவர் காலத்திலேயே தொழில்நுட்பம், விஞ்ஞானம் போன்ற துறைகளையும் மாணவர்கள் தெரிவு செய்து கல்வி கற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டும் உள்ளனர்.

இவர் காலத்தில் கிளி/வேரவில் இந்து மகா வித்தியாலயத்தில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளராக சேவையாற்றும் சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. எவருடனும் அன்பாகவும் பண்புடனும் பழகும் உள்ளம் கொண்டவர்நகைச்சுவையாகவே விடயங்களை முன்வைப்பவர். அவரின் நகைச்சுவைக் கதைகளிலே ஆயிரம் கருத்துக்கள் பொதிந்து இருக்கும். இவ்வாறு தனது சேவைக்காலத்திலேயே சிறப்பாகச் சேவையாற்றியவர். நான் செயலாளராக கடமையாற்றிய காலத்தில் எனது எண்ணங்களுக்கு செயல் வடியம் கொடுத்தார் என்றே கூறலாம்.தனது சொந்தப் பணத்திலேயே பாடசாலை நலனுக்காக பல்வேறு வழிகளில் செலவிட்டுள்ளார் என்பதையும் என் பணிக் காலத்தில் என்னால் கண்டு கொள்ள முடிந்துள்ளது.இவ்வாறு சேவையாற்றி இன்று மணிவிழாக் காலம் இந்நாளில் அவரை மேலும் வாழ்த்துவதோடு அவரும் அவரது குடும்பமும் உடல,உள ஆரோக்கியத்துடன் பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகின்றேன்.

நன்றி

திரு.ச.அரிச்சந்திரன்
முன்னையநாள் செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திக்குழு
வேரவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முன்னைய நாள் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி**



அதிகஷ்டப் பிரதேசப் பாடசாலையாக இருந்தாலும் பல சவால்களின் மத்தியிலும் உயர்ந்து தனித்துவத்துடன் விளங்கும் கிளி/வேரவில் இந்து மகா வித்தியாலயத்தின் அதிபர் திரு.ஐ.கேசவன் அவர்களின் சேவையைப் பாராட்டி வாழ்த்துரை வழங்குவதில் பெருமிதம் கொள்கின்றேன்.

தான் கற்ற பாடசாலைக்கும் ஊருக்கும் பெருமை சேர்த்த உத்தமர் கேசவன் அதிபர். பாடசாலை வேலைகளில் தானும் ஒருவராக நின்று சேவையாற்றுவது அவர் பாடசாலை மீது கொண்ட பற்றும் பெரும் தன்மையுமே. எப்போதுமே சாதாரணமாகப் பழகுவதும் விவசாயத்தில் நாட்டமுடன் செயற்படுவதும் ஓய்வின்றி உழைப்பதுவும் அவரின் குணாம்சமே. விருந்தோம்பல் பண்பு மிக்கவர் இன்முகத்துடன் வரவேற்பவர்.

சக ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களுடன் அன்பாகப் பழகுபவர். ஆலோசனைகள் கூறி வழிப்படுத்தும் ஆளுமைமிக்கவர். பாடசாலையின் வளர்ச்சியில் பெரும் பங்கு கேசவன் அதிபருடையதே என்றால் அது யாராலும் மறுக்கமுடியாது. எவ்வேளையிலும் பாடசாலையின் வளர்ச்சிக்காய் அர்ப்பணித்து சேவை செய்பவர். ஓய்வின்றி உழைத்திடும் அதிபருக்கு ஓய்வுக் காலம் என்றால் அது சற்றேனும் பொருந்தாது. எனினும் அகவை அறுபது கண்டு மணிவிழாக்காணும் நாயகனை வாழ்த்துகின்றேன்.

கந்தையா காந்தரூபன்
முன்னாள் பாடசாலை
அபிவிருத்திச் சங்க செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா நாயகனுக்கு வாழ்த்துப்பா



அரிச்சுவடி தொடங்கி எம் பிள்ளைச் செல்வங்களை
அகிலம் ஆறும் பதவி தனைப் பெற்று உயர்ந்திட
அன்பாகப் புன்னகைத்து நீங்கள் எம் உள்ளம் தனில்
அறுதியாய் நிலைத்து நிற்கும் ஆசான் அல்லவா!

எமதூரிலே வாழ்ந்து எம் இன்னல் இடர்களிலே
எங்கும் பங்குகொண்டு எம் குடும்ப நண்பனாய்
பதவி நிலை பாராது இன்முகம் காட்டி
பண்பென்றால் இதுதான் என உணர்த்தி

பக்குவம் பதவி படிப்பிலே முன்னே நிற்கும் நீங்கள்
பலர் வாழ்வுக்கும் உதாரண புருசனாய் தோன்றி
பார் போற்ற வாழ்ந்து உயர்ந்து பல் துறை கண்டு
மணிவிழா காணும் இவ்வேளை தனிலே

தம் சேவையினை மனதாரக் காணும் என் குடும்பமும்
தன் நிறைவாய்ப் பெற்றேன் எனும் கௌரவமாய்
மணிவிழா காணும் இவ்வேளை தனிலே
மனமார வாழ்த்துகின்றேன்.


நன்றி

திரு.ச.அன்ரனிப்பிரான்சிஸ்
தலைவர்,
கலைமகள் விளையாட்டுக்கழகம்,
வேரவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா நாயகன்



ஈழவூரின் பூர்வீகக் குடிகளில் ஒரு இராமு ஐயம்பிள்ளை ,ஐயம்பிள்ளை நாகம்மா குடும்பத்தினரது இளைய மகன் திரு.ஐயம்பிள்ளை கேசவன்.இவர் ஈழ ஊரில் 1963.12.06 பிறந்தார்.வேரவில் இந்து அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் ஆரம்பக் கல்வி முதல் க.பொ.த சாதாரண தரம் வரை கல்வி கற்று சிறந்த பெறுபேறு காணப்பெற்று க.பொ.த உயர்தரத்தினை மீசாலை வீரசிங்கம் கல்லூரியில் கற்று சிறந்த பெறுபேறுகளைப் பெற்றார்.அவரது சொந்த ஊரிலேயே (ஈழவூர்) வேரவிலில் அவர் கற்ற பாடசாலையிலேயே ஆசிரியராகக் கடமையேற்றார்.

இவர் ஆசிரியத்தொழிலை மிகக் கண்ணியமாக மேற்கொண்டு சிறந்த மாணவர்களை உருவாக்கியுள்ளார்.சிறந்த விவசாயி,சிறந்த பண்பாட்டாளர், ஒழுக்க விழுமியங்கள் நிரம்பியவர்,கடமையை கடமையை கண் போன்று காப்பவர்,சமூக சேவையில் மிகவும் நாட்டமுடையவர்,மற்றவரின் தேவையறிந்து உதவும் மனம் உடையவர்.

இவர் மக்கள் சிறந்த சமூகமாக இருக்க வேண்டும் என மேலான எண்ணம் கொண்டுள்ளார்.எதனையும் ஒழிவுமறைவின்றி பேசுபவர்.அனைவரையும் மரியாதையுடன் நடத்துபவர்.எவருக்கும் தீங்கு செய்ய எண்ணுவதில்லை இவ்வாறு அனைவருக்கும் முன்னுதாரணமாக இருப்பவர்.இவ்வாறாக இருக்கும் இவர் கிராஞ்சி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் 2002 ஆம் ஆண்டு ஆவணி மாதம் அதிபராகப் பொறுப்பேற்றார்.பொறுப்பேற்றது முதல் அப்பகுதி மக்களை அரவணைத்து பாடசாலை வளர்ச்சிக்கு பெரிதும் உழைத்தார்.பாடசாலை இவரது காலத்தில் துரிதமாக வளர்ச்சி கண்டது. இவரது காலத்தில் க.பொ.த சாதரண தரம் இங்கு ஆரம்பிக்கப் பெற்றது.

இவர் கிராஞ்சி அ.த.க பாடசாலை 2016.01.04 ஆம் திகதி (ஈழவூர்) வேரவில் இந்து மகா வித்தியாலயத்தில் அதிபர் பொறுப்பை ஏற்றார்.அன்று தொடக்கம் பாடசாலையின் வளர்ச்சியிலும் மாணவர்ளது வளர்ச்சியிலும் மிகவும் கவனமெடுத்துப் பாடுபட்டார். இவரது காலத்தில் பல மாணவர்கள் பல்கலைக்கழகங்களிற்கு தெரிவாகினர்.பாடசாலையும் வளர்ச்சி கண்டுள்ளது.பல தடைகளை எதிர்கொண்ட போதிலும் சளைக்காது செயற்பட்டார்.மிகவும் எளிமையானவர்.அனைவரதும் சுபாவங்களையும் தெரிந்து கொண்டு கடமையாற்றும் இவர் அறுபது அகவையில் ஓய்வு பெற்று மணிவிழா காண்கின்றார்.

இவ்வாறு மணிவிழா காணும் எனது ஊரின் மைந்தனே பல சிறப்புக்களும் மேலும் பெற்று சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ இறையாசி கிடைக்க வேண்டி மனம் நிறைந்து வாழ்த்துகின்றேன்.

வாழ்க பல்லாண்டுகள்!

திரு.செ.குழந்தைவேல்
அகில இலங்கை சமாதான நீதவான்,
மத்தியஸ்தர சபை உறுப்பினர்,
ஈழவூர்,வேரவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேரவில் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வாழ்த்துச் செய்தி**

வேரவில் கிராம இந்து மகா வித்தியாலயத்தின் முதல்வரும் மணிவிழா நாயகனுமாகிய உயர்திரு.ஐயம்பிள்ளை கேசவன் அவர்களுக்கு மணிவிழா நூல் வெளியீட்டுக்கான வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் வேரவில் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் ஆகிய நாம் மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றோம்.

'எழுத்தறிவித்தவன் இறைவன்' அந்த இறைவனை ஆசிரியர்களிடம் காண்கின்றோம். இக்கூற்றிற்கு எங்கள் மணிவிழா நாயகன் ஐயம்பிள்ளை கேசவன் உரித்தானவர்.ஒரு ஆசிரியராக அதிபராக தனது கடமையை செவ்வென திறம்பட செய்து முடித்தவர். இந்து மத போதனைக்ள மற்றும் வள்ளுவனின் திருக்குறள்கள்,ஒளவையாரின் மூதுரைகள் இவற்றுடன் நீதிநூல்கள் என எல்லாவற்றிலும் கூறப்பட்ட மானுடத்திற்கே உரித்தான கருத்து நிலைகளை அனைத்து மெடைப்பேச்சிலும் எடுத்தியம்பும் வல்லமை கொண்டவர்.அறத்தின் பால் தனது எண்ணத்தையும் சிந்தனையையும் பறிகொடுத்தவர். தனது கடமைக்கப்பாலும் மண்பற்றும்,சமூகப்பற்றும் நேரான எண்ணத்தையும் உடையவர்.ஊர்மக்களால் நன்கு அறியப்பட்ட ஒருவர் என்பதுடன் ஒவ்வொரு பொதுமகனையும் நன்கறிந்தவர் என்பதோடு பஞ்சமாபாதகங்களை தவிர்க்க வேண்டும் என்று குரல் கொடுக்கும் நல்ல பண்பாளன்!. இவரைப் போன்ற மானுடர்களை காண்பதற்கு இவ்வுலகம் ஆவலாகவுள்ளது.இவரது நல்லெண்ணங்களும்,நல்வழிப்படுத்தல்களும் எமது சமூகத்திற்கு எதிர்காலத்திலும் தேவைப்படுகிறது என்ற அசையாத நம்பிக்கையோடு இவரது ஓய்வு காலம் சிறப்போடு அமைய எமது நல்லாசிகளும் இறைவனின் பிரார்த்தனைகளும் உரித்தாகட்டும்.

தலைவர்,
மாதர் கிராம
அபிவிருத்திச் சங்கம்,
வேரவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழாக் காணும் மண்ணின் மைந்தன்



ஈழவூர் என்று அழைக்கப்படும் வேரவில் பகுதியில் பிறந்து வேரவில் இந்து மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்று பின்பு அதே பாடசாலையில் ஆசிரியராக நியமனம் பெற்று கடந்த எட்டு வருடங்களாக அதே பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி இன்று மணிவிழாக் காணும் மதிப் பிற்குரிய அதிபர் ஐயம்பிள்ளை கேசவன் அவர்களின் மணிவிழா மலரிற்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமை கொள்வதுடன் ஊரோடு உறவாடி உன்னத சேவையாற்றி ஓய்வு பெறும் அதிபர் அவர்கள் தனது ஓய்வுக் காலத்தை தனது குடும்பத்துடன் சிறந்த உடல் உள ஆரோக்கியத்துடன் நீண்ட காலம் வாழ இறைவணை மனதார வேண்டி வாழ்த்துகின்றேன்.

திரு.பே.சுஜியந்தன்,
கிராம அலுவலர்,
பொன்னாவெளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணி ஓய்வு பெறும் மணிவிழா நாயகனைப் பற்றி...



'தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற் தோன்றாமை நன்று' என்பது வள்ளுவப் பெருமான் வாக்காகும். இவ்வாக்கிற்கு அமைய 1963.12.06 அன்று ஐயம்பிள்ளை நாகம்மா தம்பதியினருக்கு கனிஸ்ட புத்திரனாக கேசவன் ஐயா அவர்கள் பிறந்தார்.'வளரும் பயிரை முளையிலே தெரியும்' என்பார்கள். அவரின் இளமைச் செயற்பாடுகள் அவரின் எதிர்காலம் சிறப்பாக அமையும் என்பதனை எடுத்துக் காட்டின.

இவ்வாறு இவர் வளர்ந்து வரும் காலத்தில் தனது ஆரம்பக்கல்வி முதல் பதினோராம் ஆண்டு வரை கிளி/வேரவில் இந்து அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் கல்வி கற்ற காலத்தில் (பதினோராம் தரம் கற்றகாலத்தில்) அவரை நானும் நன்கு அறிந்திருந்தேன். எங்கள் வீட்டுப்பாதையினாலே அதிபர் கேசவன் மற்றும் அவரது சகோதரர்கள் பாடசாலைக்கு சென்று வருவதைப் பார்த்திருக்கிறேன். வேரவில் கிராமத்தில் இவர்கள் வசித்தமையால் இவர்களுக்கு இக்கிராமத்திலேயே பல காணிகள் உள்ளன. அக்காணிகளில் ஈழவெளிக்குளத்திற்கு மேல் காணப்படும் தோட்டக்காணிக்கு தனது தந்தையாருடனும் சகோதரர்களுடனும் இணைந்து தோட்டச் செய்கையில் ஈடுபட்டு வந்தார். அத்துடன் கல்வியையும் கண்ணாகக் கற்று வந்தார். அக்காலத்தில் அதிபராகக் கடமையாற்றிய சிவசாமி என்பரின் விருப்புக்குரிய மாணவர்களில் இவரும் ஒருவர். இப்பாடசாலையில் அடிப்படைக் கல்வியில் தேறி உயர்கல்வியினை யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் முடித்து 1989 ஆம் ஆண்டு முதல் தொண்டராசிரியராக கடமையாற்றினார். அக்காலத்தில் எமது பாடசாலையின் முதல்வராக இருந்த திரு.தி.கணபதிப்பிள்ளையுடன் இணைந்து இப்பாடசாலை சகல துறைகளில் வளரவும் பல சாதனைகளைப் படைக்கவும் வழிசமைத்து நின்றார்.

இவ்வாறு கல்விப்பணியாற்றிக் கொண்டிருந்த சமயம் 1990.03.16 அன்று நிரந்தர நியமனம் பெற்று எமது பாடசாலையில் நிரந்தர ஆசிரியராக தனது பணியினை தொடர்ந்து செய்து வந்தார். அப்பொழுது வாகன வசதிகள் மிகக்குறைவு. துவிச்சக்கர வண்டிகளே எமது வாகனங்கள் ஆகும். தனது மேலதிக பயிற்சிகளை எல்லாம் துவிச்சக்கர வண்டிகளிலேயே சென்று முடித்து வருவார். இவரது கல்விப் பணியினால் எமது மாணவர் சமூகம் விழித்துக் கொண்டது. தனது சேவைக்காலத்தில் பல நூறு மாணவர்களை உருவாக்கி விட்டு அவரிடம் கல்வி கற்ற மாணவர்கள் பலர் ஆசிரியர்களாக ,அதிபர்களாக, வேறு பல துறைகளிலும் கடமையாற்றி வருவதை கொண்டு உணர்ந்து கொள்ளலாம். இவரிடம் கற்ற மாணவர்களிடம் பேசும் போதெல்லாம் ஏதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்கள் பற்றிக் கூறினால் அவர்கள் 'நாங்கள் தமிழ் பாடம் கற்றது கேசவன் ஆசிரியரிடம்'' என்று பெருமையாகக் கூறுவார்கள். தமிழ்ப்பாடத்தை சிறந்த முறையில் கற்பித்தவர். மாணவர்களுக்கு சலிப்புத் தட்டாமல் பாடத்தைக் கொண்டு செல்வார்.

அக்காலத்தில் எமது பாடசாலையில் தமிழ்பாட ஆசிரியர் என்றால் அது கேசவன் ஆசிரியரே ஆவார். தமிழுக்கு அமுதென்று பெயர். எமது பாடசாலைக்கு தமிழ்ப்பாடத்துக்கு கேசவன் ஆசிரியர் என்றே கூறலாம். பாடங்களை நடாத்தும் சமயங்களில் எல்லாம் நகைச்சுவையாகவும் பழமொழிகளைக் கூறியும் மாணவர்களை தன்னுடன் கொண்டு சென்று கற்பிக்கும் திறமை மிக்கவர்.

கேசவன் ஆசிரியரின் கதைகளை எல்லாம் அவரிடம் கற்ற மாணவர் கூறும் போது எனக்கும் அவரிடம் கற்கும் வாய்ப்பு கிடைக்கவில்லையே என நினைத்திருந்த சமயம் 1993.09.23 ஆம் திகதி அன்று நானும் கிளி/வேரவில் இந்து மகாவித்தியாலயத்தில் கேசவன் ஆசிரியருடன் ஒன்று சேர்ந்து கற்பிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அவரின் குணாதிசயங்களை என்னால் நேரடியாகவே புரிந்து கொள்ள முடிந்தது.

நான் தொண்டராசிரியராக கற்பிக்க சென்ற காலம் முதல் கிளி/வேரவில் அ.த.க பாடசாலையில் பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தின் பொருளாளராக இப்பாடசாலையில் கடமையாற்றிய காலம் வரை சிறப்பான முறையில் தனது சேவையை செய்து வந்தவர்.

பெற்றோர்கள் என்றால் என்ன? பழைய மாணவர்கள் யாராக இருந்தாலும் என்ன? அவரது கணக்கு வைக்கும் முறையையும் கணக்கு சமர்ப்பிக்கும் முறையையும் கண்ட வியந்து போனார்களே தவிர எந்த விமர்சனங்களும் கூறுவதைக் காண முடியாது. அவ்வாறே தனது பணியினை செவ்வனவே செய்தவர்.

பாடசாலையில் நடைபெறும் எந்த நிகழ்வுகளிலும் அதனைப் பொறுப்புடன் நடாத்தி முடிக்கும் எண்ணம் கொண்டவர். விளையாட்டுப்போட்டி, கலைவிழா,கண்காட்சி, தமிழ்த்தினப்போட்டிகள் என்ன நிகழ்வு என்றாலும் மாணவர்களை ஒழுங்கமைத்தல் முதல் அவர்களைப் போட்டிகளுக்கு தயார்படுத்தல் ,போட்டிகளுக்கு அழைத்துச் செல்லும் பணிவரை சிறப்பான முறையில் நெறிப்படுத்தியவர்.

இவ்வாறு தனது சேவைக்காலத்தில் தன்னால் இயன்ற முழுமையான சேவை எமது பாடசாலைக்கு வழங்கியிருந்தவர்.இவ்வாறு 2001ஆம் ஆண்டு நான் ஆசிரியர் பணிற்சிக்கலாசாலைக்கு சென்ற சமயம் என்னை அழைத்துச் சென்று வழியனுப்பி வைத்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.2002.08.13 அன்று கிளி/கிராஞ்சி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் தனது அதிபர் பதவியினை பொறுப்பேற்றுக் கொண்டார். பொறுப்பேற்ற நாள் முதல் அப்பாடசாலையின் வளர்ச்சியில் கண்ணுங்கருத்துமாக செயற்பட்டார். அங்கிருந்த மாணவர்களை வழிப்படுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியில் சாதனை படைக்க வழிசமைத்தார். இவரது காலத்திலேயே நான் கிளி/கிராஞ்சி அ.த.க பாடசாலை க.பொ.த (சாதாரண தரத்திற்கு தரமுயர்த்தப்பட்டது என்பதையும் இங்கு கூறக்கூடியதாக உள்ளது. இவ்வாறு தனது சேவைகளை செவ்வனவே அங்கு ஆற்றி 03.01.2016 அன்றுடன் விடைபெற்றுக் கொண்டு தான் கற்பித்த பாடசாலையில் அதிபராக 04.01.2016 அன்று கடமையைப் பொறுப்பேற்று இன்றுவரை கடமையாற்றி வருகின்றார்.

எமது வேரவில் இந்துவில் கடமையேற்ற காலம் முதல் ஆரம்பக்கல்வி ,க.பொ.த (சா.த),க.பொ.த (உ.த) ஆகியவற்றிலும் கல்வி நிலையிலேயே பல சாதனைகளைப் படைத்துள்ளார்.இதுமட்டுமன்றி இணைப்பாடவிதானங்களாக விளையாட்டுப் போட்டிகள்,கணிதம்,விஞ்ஞானம் ,சமூக விஞ்ஞானம்,உடற்கல்வி ஆகியவற்றிலும் பெரும் சாதனை படைத்துள்ளார்.

'வெள்ளத்தனையது மலர் நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்தனையது உயர்வு'

ஒவ்வொருவரின் மனதிலும் எண்ணங்களே அவர்களின் உயர்வும் தாழ்வும் என் வள்ளுவப் பெருந்தகை குறிப்பிடுகின்றார். அவ்வாறு அவரின் சேவைக்காலத்திலேயே 2022ஆம் ஆண்டின் உயர்தரப் பரீட்சை முடிவில் மிகவும் சிறப்பாக அமைந்துள்ளமை இவரின் சிந்தனையின் செயல் வடிவமே எனக் கூறலாம். இதுமட்டுமன்றி தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை,க.பொ.த சாதாரண பரீட்சை என்பவற்றிலும் பல வருடங்கள் சாதனைகள் படைத்துள்ளது. இதை விட இவர் அதிபராக கடமையேற்ற காலம் முதல் ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழக அனுமதியினையும் மாணவர்கள் பெற்று வந்துள்ளார்கள். இத்துடன் தொழினுட்ப பிரிவு விஞ்ஞானப்பிரிவு,வணிகப்பிரிவு என பல பிரிவுகளையும் மாணவர்கள் தெரிவு செய்ய வழிப்படுத்தி வழியும் காட்டியுள்ளார்.

எளிமையின் பிறப்பிடம் எங்கள் அதிபர் என்றால் மிகையாகாது. எவரையும் மனம் நோகும்படி நடந்து கொள்ள மாட்டார். எடுத்தெறிந்து பேச மாட்டார். விட்டுக்கொடுக்கும் பண்பு மிக்கவர். எவருக்கும் உதவி செய்யும் பண்புள்ளம் கொண்டவர். நாம் செய்வதே நமக்கு என்பார்கள். இவர் தனது சேவைக்காலத்தில் சிறப்பாக தன் பணி செய்தமையல் தான் இவரின் புத்திரர்களும் நல்ல நிலையில் கல்வியில் உயர்ந்து நிற்கின்றனர்.

எளிமையின் இருப்பிடம். பாகுபாடு அற்றவர். படித்தவர் முதல் பாமரர் வரை ஒரே கண்ணாக நோக்குபவர்.தொழிலாளி,முதலாளி என்ற பாகுபாடு பார்ப்பதில்லை.சிறந்த தமிழ் அறிஞர்.சிறந்த விவசாயி.சிறந்த உழைப்பாளி.அன்புள்ளம் கொண்டவர். எவரையும் மதிப்பவர்.எவருக்கும் உதவும் பண்பானவர்.இப்படியாக தன் குடும்பத்தையும் பாடசாலையையும் இரு கண்களாக கொண்டு நடத்தியவர். அன்பின் இருப்பிடம், அறிவின் சுரங்கம்,ஏழைகளின் வழிகாட்டி,உழைப்பின் உறைவிடம்,ஊன்றுகோலின் சிகரம்,மாணவர்களின் வழிகாட்டி இம்மணிவிழா நாயகனை இந்நாளில் பாராட்டுவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

வாழ்க அவர் பணி
வளர்க அவர் புகழ்

திருமதி.அ.அரிச்சந்திரன்
ஆசிரியர்
கிளி/வேரவில் இ.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்தி வணங்குகின்றேன்



கிளி/வேரவில் இந்து தமிழ் கலவன் பாடசாலையில் என் தமிழ் ஆசிரியரை முதன்முதலில் கண்டேன். அயலூராம் கிராஞ்சி மண் இவரது சொந்த ஊர் என அவ்வூரைச் சேர்ந்த என் சக நண்பிகள் சொல்லக் கேட்டேன். முதல் நியமனம் பெற்று வந்திருந்தார். அன்று தொட்டு தரம் பதினொன்று வரைக்கும் ஏனைய பாடங்களை விட தமிழ்ப்பாடத்தை நான் விரும்பக் காரணமானவர் என் தமிழ் ஆசிரியர் கேசவன் சேர்.

ஆக்கத்திறன்,கலைத்திறன் போட்டிகளில் விருப்புக் கொண்டு ஆர்வத்துடன் பங்குபற்றி வெற்றியீட்டக் காரணமானவர்.க.பொ.த (சா.த), க.பொ (உ.த) பரீட்சைகளில் அதிவிசேட சித்திகள் பெற வழிகாட்டிய என் தமிழ் ஆசானை மறக்க முடியுமா?

தமிழை முறையாகக் கற்றுத் தேர்ந்து தெளிவுபடப் போதிப்பதும் சுவைபட இனிமை மிகு வார்த்தைகளால் கேட்போருக்கு இன்பம் தந்து கவலை மறந்து சிரித்து வாழக் கதை பேசும் வித்தகர்.

'நயன் ஈன்று நன்றி பயக்கும் பயன் ஈன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல்'

வள்ளுவம் தரும் வார்த்தைகளுக்கு ஏற்ப வாழ்வைக் கடைபிடிக்கும் ஆற்றலுடையவர்.பெருந்தன்மை கொண்ட மனிதராக நல்ல உள்ளம், இரக்கப்பண்பு,மன்னிக்கும் மனப்பான்மை, நீதியோடு கருமம் ஆற்றல் இவைகளைக் கொண்டு கடமை புரியும் சிறந்த நிர்வாகி.

'உணரும் உள்ளம் தான்
உண்மையான உள்ளம்' என்பார்கள்.

பள்ளியின் அனைத்து ஊழியர்கள்,மாணவர்கள்,ஆசிரியர்கள் நிலையில் நின்று சிந்தித்து செயற்படும் மனிதாபிமானி.தமிழை சுவைபட பொருளுணர்ந்து கற்பிக்கும் வல்லமை கொண்டவர். அதாவது,

வள்ளுவன் வாயுரை வாழ்த்தும்
நாலடியாரும் நளவெண்பாவும்
பெரிய புராணமும் சீறாப்புராணமும்
அரிச்சந்திர புராணமும் ஆசிய ஜோதியும்
இலங்கை வளமும் இராமாயணமும்
மகாபாரதக் கதைகளும்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என இன்று வரைக்கும் மனதில் நினைவழியாமல் நிற்கும் வகையில் கற்பித்தவர் எம் ஆசிரியர்.

'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற திருமூலர் வாக்குக்கேற்ப கல்விப்பணியின் சேவகன் எம் கேசவன் சேர். அவர் தந்த வழிகாட்டுதலால் தாம் உய்த்த இன்பத்தை தம்மிடம் கற்றவர்களும் அடைய விரும்பியமையால் நானும் கற்பித்தலில் ஈர்ப்புக் கொண்டு ஆசிரியர் பணிக்குச் செல்ல வழிகாட்டியது அவரும் அவரைப் போன்ற ஆசிரியர்களதும் நேர்மையான நடத்தையும் போதனையும் தான்.

முதல் நியமனம் பெற்று கிளி/வேரவில் இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்கு ஆசிரியராக வந்த போது நான் மாணவியாகக் கற்றுக் கொண்டிருந்தேன். அதே பாடசாலையில் அதிபராக பணியாற்றி வந்த போது நான் ஆசிரியராகக் கற்பித்துக் கொண்டிருந்தேன். இன்றும் அதே பாடசாலையில் பணி ஓய்வு பெறும் அதிபராக பாடசாலையை விட்டுச் செல்லும் போதும் அவரது வழிகாட்டுதலுடன் ஆசிரியப்பணியில் இருப்பதை மேலான பாக்கியமாகக் கருதுகின்றேன்.

மாணவப் பருவத்தில் ஆசிரியராக வழிகாட்டியது போன்றே நான் ஆசிரியராக இருக்கும் போதும் அதிபராக இன்று வரைக்கும் அவரிடமிருந்து கற்றுக் கொண்டேயிருக்கின்றேன். ஒவ்வொரு விடயத்திலும் தவறு ஏற்படா வண்ணம் மிகவும் நுணுகி ஆராய்ந்து, சிந்தித்து,சீர்படுத்தி,நீதியுடன் செயலாற்ற பக்குவமாகப் பண்படுத்தி வரும் என் அதிபரை மனதார வாழ்த்தி வணங்குகின்றேன்.

அர்ப்பணிப்புடன் அயராது அறப்பணி செய்த எம் ஆசானின் பாதம்பட்ட இவ்வித்தியாலயம் பெருமை பெற மாணவ மணிகளால் ஏற்றம் கண்டு இன்புற எங்கு நீர் இருந்தாலும் மனதார வாழ்த்துவீர் மணிவிழா நாயகனே!

மாணவரின் வெற்றிகளில் உம் பங்கு அளப்பெரியது. நீங்கள் நீடுழி வாழ வேண்டும்..உம் பணி ஓயாது சிறக்க வாழ்த்தி வணங்குகின்றேன் ஐயா!

திருமதி.செ.நிர்மல றொபின்சன்
ஆசிரியர்
கிளி/வேரவில் இ.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா நாயகனை மாண்புடன் வாழ்த்துகின்றேன்



தான் படித்த பாடசாலையிலேயே ஆசிரியராக, அதிபராக அகவை அறுபதில் மணிவிழாவைக் கொண்டாடும் வாய்ப்பு யாருக்கும் எளிதில் வாய்ப்பதில்லை அதுவும் ஒரு அதிபராக மாணவனாகத் துள்ளித் திரிந்த பாடசாலையில் உறவினர் உட்பட எண்ணற்ற மாணவர்களுக்கு "தேன்மதுரத்தமிழை" தளம்பல் ஏதுமின்றி இலக்கண இலக்கியங்களுடன் கற்பிக்கும் தங்களது இரசனை நயம் அதனை தங்களிடம் அனுபவித்துக் கற்றவர்களுக்குத் தான் புரியும். இதனை சொல்லால் வடிக்க முடியாது இலக்கியக் கதைகளை சொல்லும் போது குண்டுசி விழுந்தாலும் அதன் ஓசை கேட்குமளவு மாணவர் அமைதியாவர். இது தங்களிடம் உள்ள தனித்துவம்.ஏன் கற்பித்தல் மட்டுமின்றி ஏனைய செயற்பாடுகளிலும் தாங்கள் சளைத்தவரல்ல. அதிபராகப் பொறுப்பேற்றுப் பாடசாலையை திறம்பட நிர்வகித்து மாணவரை தலைநிமிரச் செய்த உத்தமரே! நீதி நேர்மை தியாகம் அர்ப்பணிப்பு சகிப்புத்தன்மை பக்தி இன்னும் இன்னோரன்ன சிறப்புக்களால் தங்கள் புகழைக்கூற என் "நா" போதாது.


"ஓய்வு என்பது முடிவல்ல ஆரம்பமே" என்பதற்கிணங்க இனிமேல்தான் தங்கள் பணி ஆரம்பம். இது தாங்கள் அறியாததல்ல. பணி ஓய்வுக் காலத்தில் சீரும் சிறப்புடனும் வாழ மணிவிழா நாளில் நானும் வாழ்த்துகின்றேன்.

திருமதி. புவனலோசனி சிறீலிங்கம்
ஆசிரியர்,
கிளி/வேரவில் இ.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதல் விழுதாய் கேசவ விழுது...



மருத நில இதமான சூழலிலே இன்று தனக்கே உரிய கம்பீரத்துடன் வேரவில் இந்து உயர்ந்து தனித்துவமாய் மிளிர்கின்றது என்றால் அது மிகையாகாது. இந்துவில் தலவிருட்சமாய் ஆலமரம். ஆம் அங்கும் ஆலமரம் இங்கும் ஆலமரம் ஆயிரம் ஆயிரம் விழுதுகள்.

"தெள்ளிய வாலின் சிறுபழத்தொரு விதை
தெண்ணீர் கயத்துட் சிறுமீன் சினையினும்
நுண்ணியதே யாயினும் அண்ணல் யானை
அணிந்தோர் புரவி யாட்பெறும் படையொடு
மன்னர்க்கிருக்க நிழலாடுமே"

என அதிவீர பாண்டியன் சிறப்பிப்பதும்

'ஆல்போல் தழைத்து...'

என வாழ்த்துவதும் ஆலமரத்தின் சிறப்பாலன்றோ

ஆரம்பத்தில் ஆலமரம் கற்பகத் தருவாம் பனைமரத்தைப் பற்றுக் கோடாகக் கொண்டு வளர்ச்சி பெற்றாலும் தன் ஆளுமையால் விழுது விட்டு வேர் ஊன்றி பெரு விருட்சமாக விழுதுகள் தாங்க நிமிர்ந்து நிற்கின்றது. இவ்வாறே எம் பள்ளியின் ஆலமரமும் விழுதுகள் ஊன்றி விழுதுகள் தாங்க இதமான வகுப்பறையாக நிகழ்களமாக தாய்மடி தந்து தட்டிக் கொடுத்த தலவிருட்சம் தனித்துவமானது.

வேரவில் இந்துவின் ஆலமர நிழலிலே ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்து பெற்றோரும் சமூகத்தார்களும் உந்து சக்தியாக அமைய உயர் கல்வியை தொலைதூரம் சென்று யாழ்/வீரசிங்கம் கல்லூரியிலே கலைப்பிரிவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயின்று சித்தியடைந்து வேரவில் இந்துவிலேயே முதல் நியமனமும் பெற்றார் கேசவன் அதிபர்.

இளமைத் துள்ளலுடனே தான் கற்ற பாடசாலையில் வளர்ச்சிக்காலம் தன்னை அர்ப்பணித்து சேவை செய்வதில் இன்பங் கண்டார். இந்துவாய் இந்துவில் தமிழையும் சமயத்தையும் வளர்ச்சி காண வைத்தவர். சாரணராய் சாரணரணியை வளப்படுத்திய சாதனையாளர்.சமூகத்தை பள்ளியுடன் இணைத்த இணைப்புப் பாலமிவர். யாழ்ப்பாணம், கிளிநொச்சி மக்கள் இடம்பெயர்ந்து பாடசாலை அயல்இடங்களில் தங்கிய போது இறப்பு, நோய், பிரிவு, உடை, உறையுள் போன்ற பல இன்னல்களைச் சந்தித்த வேளை ஆறுதல்கூறி உதவி புரிந்து ஊக்கமளித்தவர். இடம்பெயர்ந்து வந்த மாணவர்கள் கற்பதற்கு வழிசமைத்தவர். அவர்களில் இன்று பலர் அரச பதவிகளில் சேவை செய்வதும் அதிபரின் அளப் பெரும் பணியாலன்றோ!

உயர்ந்த எண்ணமுடன் சேவை செய்யும் தன் கேசவனை ஆண்டவன் வாழ்க்கையிலும் உயர்த்தியே நின்றான். கேசவனை யாருக்கும் பிடிக்கும் ஆனால் கேசவனுக்கு துளசியைத்தானே பிடிக்கும். ஆண்டவனின் ஆசியுடன் பெற்றோரும் சுற்றமும் வாழ்த்த கேசவ துளசியாய் இல்லறம் சிறக்க முத்துகளாய் மூன்று செல்வங்களைப் பெற்று மகிழ்ந்தனர். நாளொரு மேனி பொழுதொரு வண்ணமாக வளர்ந்து ஆரம்பக் கல்வியைக் கற்று புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று கிராஞ்சி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கும் சமூகத்திற்கும் பெற்றோருக்கும் பெருமை சேர்த்தனர். சாதாரண தரத்தில் உயர் பெறுபேறு பெற்று உயர்தரங் கற்றுச் சித்தியடைந்தனர். மூத்த மகளுக்குத் திருமணம் செய்து அகமகிழ்து நின்றனர். இரண்டாவது மகளும் மகனும் பல்கலையில் பயின்று வருகின்றார்கள். "நாம் செய்வதே நம் பிள்ளைகளுக்கு" என அடிக்கடி அதிபர் கூறும் வார்த்தை அவரின் சேவையால் வாழ்வினை உயர்த்தியே நிற்கிறது.

வேரவில் இந்துவில் சாதாரண தரம் கற்பவர்கள் குன்றும் குழியும் நிறைந்த பாதையாலே மார்கழி மாதமதில் துவிச்சக்கர வண்டியில் முழங்காவில் மகாவித்தியாலயம் சென்றே பரீட்சை எழுதினர். இதன் சிரமம் உணர்ந்தவராய் அப்போதிருந்த கு.கனகலிங்கம் அதிபரின் எண்ணத்திற்கு வலுச்சேர்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுவீடாகச் சென்று இடைவிலகிய மாணவர்களை அழைத்து வந்து பரீட்சை எழுத வைத்ததுடன் பரீட்சை நிலையமாக உருக்கொடுத்து மாணவர் பெற்றோர் மனதில் நன்மதிப்பைப் பெற்றவர் எங்கள் அதிபர். அத்துடன் அதிக மாணவர்கள் சித்தி பெற்று உயர்தரம் கற்க வழிசமைத்ததனால் வேரவில் இந்து தமிழ்க்கலவன் பாடசாலை விருட்சமாகி கலைப்பிரிவுடன் இந்துமகா வித்தியாலயம் ஆக உயர்ந்ததில் அதிபரின் பங்கு பாராட்டுதற்குரியது.

நல்லெண்ணம் வேகத்துடன் கூடிய விவேகங்கொண்ட கேசவன் சேர் கிளி/கிராஞ்சி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் அதிபரானார். அங்கும் மாணவர் நலன் கருதி கடும் முயற்சியின் பலனாக தரம் 11 வரை உயர்த்திய உத்தமரானார். கல்வியுடன் ஒழுக்கமும் சிறக்கவே பூநகரி பிரதேச செயலர் பிரிவில் கிராஞ்சி கல்வித்தரத்தில் இரண்டாம் நிலை பெற்றுள்ளது. இதில் அதிபரின் முயற்சியும் பங்களிப்பும் போற்றுதற்குரியது.

தன் சேவையை விரிவுபடுத்த சற்றுத் தூர தேசம் சென்று கடமையாற்ற விருப்புடையவராக இருந்தாலும் தாயவளின் அழைப்பே உயர்ந்து உரத்து நிற்க வேரவில் இந்துவின் அதிபரானார். சொல்லவும் வேண்டுமா? தன்னை வளப்படுத்திய தாயை பார் போற்ற வைத்தார். தேசியப் பரீட்சைகளிலும் இணைபாடச் செயற்பாடுகளிலும் பெரும் வெற்றி பெறச் செய்தார். அன்பாகவும் பண்பாகவும் ஆற்றுப்படுத்தும் தனித்துவம் என்றும் உங்களுக்கே உரியது. நயமாகச் சொல்லாமல் சொல்லும் உத்தியைக் கையாள யாரால் முடியும் இவ்வுலகில்? "என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே" என எண்ணத் தோன்றுகிறது. கேசவன் ஆசானிடம் தமிழைக் கற்று நான் தமிழ் ஆசானான போது அதிபராக வழிநடத்தும் பேறு பெற்றேன். நான் மட்டுமல்ல இன்று இந்துவில் கேசவன் அதிபரின் ஆற்றுப்படுத்தலில் அவரிடம் கற்ற பிள்ளைகள் ஆசான்களாய் எண்ணங்களுக்கு வண்ணம் தீட்டி வலுச்சேர்ப்பதும் அதிபரைப் பெருமைப்படுத்துகின்றது.

வேரவில் இந்து ஆதியும் அந்தமுமாய் அமைய அரும் பெரும் சோதியாக ஓய்வின்றி உழைத்திடும் உத்தமருக்கு ஓய்வுக்காலமாம். எப்படி இது சாத்தியமாகும்..? உண்மையில் சொன்னால் சமூக சேவையை ஓய்வின்றிச் செய்யும் காலமாகும். எது எப்படியாயினும் எம் பள்ளியின் முதல் விழுதாய்...கேசவ விழுது...அசையா விழுது தாங்கும் விழுது அகவை அறுபதில் அகமகிழ வாழ்த்துகின்றேன்.

திருமதி.அ.விநோதன்,
ஆசிரியர்,
கிளி/வேரவில் இ.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறைவான பணியால் நிறைந்தீர் எம் மனங்களில்...



நேசமிகு நம் துறையில்
பாசமாய் நமடமுடன் பழகி
காசுதனை துச்சமாய் மதித்து
மனிதத்தை புனிதமாய்க் கருதி
எட்டு ஆண்டு காலம் எம் பாடசாலைதனில்
நற்பணி புரிந்தீர்!

எம் பாடசாலை தனை
பொறுப்பேற்ற நாள் முதல்
கடமையே கண்ணாய்
பணியே சேவையாய்
புன்சிரிப்பே அணிகலனாய்
பொறுமையே குணாதிசயமாய்
இளையோருக்கு வழிகாட்டியாய்
எங்கள் பாடசாலை முதல்வராய் திகழ்ந்தீர்

அன்புக்கு அணிகலனாய்
பண்புக்கு பாசமாகவும்
இன்பத்திற்கு இருப்பிடமாகவும்
பொறுமையின் நாயகனாகத் திகழும்
என் மனதார வாழ்த்துகின்றேன்.

திருமதி.வ.கணேசராஜு
ஆசிரியர்,
கிளி/வேரவில் இ.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அலைமோதும் கால சாகரப் பெருவெளியில்
பணியோடம் செலுத்துங்கால்
பிணியேதும் காணாது
மணிவிழாவாம் கலங்கரை விளக்கம் காணும்
கதாநாயகனே!

'நோய்நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்' என
பிழையெதுவாயினும் அதன் தோற்றுவாயெதுவென
நுணுகித் தெளிந்து தீர்த்திடும்
திறலோனே!

எல்லா அதி தீவிரவாதங்களும் இறுதியில்
நீர்த்துப்போகும் என்ற வாக்கின் வல்லமையறிந்து
தீவிரவாதத்தை தீர்வாக்க விரும்பாது மென்போக்கையும்
தேவையான அளவில் சேர்த்துத் தாமரை இலைமேல்
தண்ணீராய் முகாமை செய்யுமெம்
பள்ளித் தலைமையே!

கூறாமை நோக்கிக் குறிப்பறிந்து
நடக்கவும் சபையறிந்து பேசவும்
சாமர்த்தியம் கொண்டவராய் சமயமொடு தமிழும்
நிலைபெற உழைத்திட்ட பழந்தமிழர்
பரம்பரையில் வந்தவன் நானென
பறைசாற்றும் சேவகனே!(கேசவனே!)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கச்சிதமாய் கதை சொல்லி
இடையிடையே திகட்டாதிருக்கும்படி
கடிக்கேள்வி குறுக்குக் கேள்விகளை
நொறுக்குத் தீனியாக்கி சமகால வாழ்வியலோடு
பொது அறிவையும் பக்குவமாய் புகட்டும்
வகையறிந்த வல்லமையே!

பொருளிலார்க்கில்லை இப்பூவுலகு என்றுணர்ந்து

சுழன்றும் ஏர்ப்பின்னது உலகென ஊகித்து

பருவத்தே பயிர் செய்து பூமாதேவியை

அமுதசுரபியாக்கி குறைவில்லா வாழ்வு காணும்

வித்தகனே!

உம்மை மூப்பென்று சொல்ல
காலக் கணக்கொன்றைத் தவிர
வேறெதும் உண்டா? நடையிலே தளர்வுண்டா?
நாவோசை நயமிழந்ததா?
நினைவாற்றல் நிலைக்கலையா? கேசவனின்
கேசமேனும் குறைந்ததுண்டா?
பளபளக்கும் பல்வரிசை கொண்டவரே!
கண்படாதிருக்க கட்டுப்பல்லென்று
கட்டுங்கோ கதையை.
துளசிகள் கூடியிருப்பது பிருந்தாவனமாம்
அது கேசவன் விரும்பியுறையும் வாசஸ்தலமாம்
ஆகையினால் நீங்களும் நீடுழி காலம்
துளசியோடும் கிளைகளோடும் வனப்புடன்
வாசம் செய்ய வார்த்தைகளைத் தாண்டி
வாழ்த்துகின்றோம் ! ! !

திரு.உ.ஜெயகாந்
ஆசிரியர்
கிளி/வேரவில் இ.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிறந்த முகாமையாளர் எம்முதல்வர்

உலகில் பல்வேறு தொழில்கள் இருக்கின்றது ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு தொழிலை இலட்சியமாக கொண்டிருப்பார் அத்தகைய கனவு நனவாகும் போது வாழ்வே அவர்களுக்கு வெளிச்சமாகும். அவ்வாறு என் வாழ்வில் கண்ட சிறந்த முகாமையாளர் திரு.ஐ.கேசவன் சேர் அவர்கள். முகாமைத்துவம் என்பது எந்த ஒரு நிறுவனத்திலும் ஒழுங்கமைப்பிலும் குறிப்பிட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அவற்றின் செயற்பாடுகளை வினைத்திறனுடன் மேற்கொள்ளும் செயற்பாடாகும். இதனை எம்முதல்வரில் பல தடவை அவதானித்துள்ளேன். குறித்த கிளி/வேரவில் இந்து மகாவித்தியாலத்தியத்தின் குறிக்கோளை அடையும் பொருட்டு கிடைக்ககூடிய ஆசிரிய வளங்களை வினைத்திறனுடன் உச்ச அளவில் பயன்படுத்தி தேவையான விளைதிறனை அடையச் செய்வதே கேசவன் சேரில் நான் கண்ட உண்மை. முகாமைத்துவம் செய்தல் என்பது ஒரு சிக்கலான விடயம் எதுவும் இல்லை. எடுத்துக்கொண்ட விடயத்தை சரியான முறையில் திட்டமிட்டு ஒழுங்கமைத்து நெறிப்படுத்தி உரிய இடங்களில் வழிகாட்டல்களை எமக்கு அடிக்கடி வழங்கி இலக்கு நோக்கி நகர்த்துவதில் பல நுட்பங்களை எமக்கு கற்றுத்தந்து சிறப்பான சேவையாற்றிய சிறந்த ஒரு முதல்வர்.

நிறுவனத் தலைவராக உரிய நேரங்களில் சிறந்த சிற்பிகளாக செதுக்க அரும்பாடுபட்ட சிறந்த உத்தம தலைவர் இவர். இப்பள்ளியில் கடைமையாற்றும் 23 ஆசிரியர்களில் ஒருவரையும் பாகுபாடாக பார்க்காமல் கோபப்படாமல் தன் பணியை செவ்வனே வழங்கிய உத்தம சேவகர் இம்மணிவிழா நாயகன்.

நிர்வாக அணுகுமுறைகளை முதன்முதலில் ஒழுங்குபடுத்திய விஞ்ஞான முகாமைத்துவத்தின் தந்தையான F.W.Taylor ஊழியர்கள் மீது கவனத்தை செலுத்தி அவற்றின் ஊடாக உற்பத்தியை அதிகரிக்கலாம் எனும் கருத்தை பிரான்சில் நிலக்கரி உலோகச் சுரங்க கம்பனி பொதுமுகாமையாளராக பணியாற்றிய தனது அனுபவத்தின் ஊடாக கூறினார். அந்த வகையில் கீழ்மட்ட ஊழியர்களை அழைத்து முகாமைத்துவம் செய்வதில் சிறந்த உன்னத ஆசான் எமது பள்ளி முதல்வர். அவரது தலைமைத்துவப் பண்பானது ஆசிரியர்களாகிய எம்மை இனங்கண்டு பொருத்தமான நபருக்கு அப்பொறுப்பினை வழங்குவதாகும். ஒருசிறப்பான சிற்பி விழா நாயகன் எம் பள்ளி முதல்வர்.சிறப்பான முகாமைத்துவத்தைக் கற்று தந்த உங்கள் பணி ஓய்வு சீரும் சிறப்புமாக அமைய வாழ்த்துகின்றேன்.

திருமதி.காந்திமதி சந்திரபோஸ்
ஆசிரியர்,
கிளி/ வேரவில்இ.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எளிமையின் இருப்பிடம் எங்கள் வித்தியாலய அதிபர்
## மணி விழா நாயகன்!



ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்து மூன்று
மார்கழி ஆறாம் திகதி ஐயம்பிள்ளை
தம்பதியரின் மகனாக வேரவில் மண்ணில்
அவதரித்து தனது பாடசாலைக் கல்வியையும்
உயர் கல்வியையும் தடையின்றி கற்றுக்
கொண்டு ஆசிரியராகவும் அதிபராகவும் பல
வருடங்கள் அரும் பணியாற்றிய அருமையான
அதிபர் சேவையில் ஓய்வையும் பெறும் நாள்
வந்து விட்டது வேரவில் தந்த
வேதநாதனுக்கு மணி விழா

இந்து மகா வித்தியாலய முதல்வரே
இயம்பிட முடியாது உம் புகழை
வான் புகழ் கொண்ட உங்கள் சேவையை
வாழ்த்திட ஆயிரம் நா போதாது
பெற்றவர் மகிழ்ந்திட உற்றவர் போற்றிய
பெரும் சேவை தன்னை செய்தீர்கள்
அத்தனையும் கூறிவிட முடியாது ஆயினும்
சிலவற்றை சொல்லி வாழ்த்துகின்றேன்.

தாய் தந்தையருக்கு தலையாய பிள்ளையாக
சகோதர சகோதரிகளுக்கு இனிய சகோதரனாக
துணைவிக்கு துச்சம் மிக்க துணைவராக
பிள்ளைகளுக்கு பிடித்துள்ள தந்தையாக
பாடசாலைப் பிள்ளைகளுக்கு அறிவூட்டும் ஆசானாக
ஆசிரியர்களை வழிகாட்டும் வழிகாட்டியாக
பெற்றோர்களை செயற்படுத்தும் செயற்பாட்டாளராக
அத்தனை மனங்களையும் மகிழ்விக்கும் மலராக
வேரவில் இந்துவின் தலைவருக்கு
வேரவில் மண்ணின் மைந்தனுக்கு மணிவிழா!

எளிமையே இவரின் இருப்பிடம்
என்றால் அதுவும் மிகையாகாது
ஏனெனில் அவருடைய பணிகளும் பாத்திரங்களும்
எண்ணில் அடங்காது.
கனிவான பேச்சு பரிவான பார்வை
அன்பான அணுகுமுறை தரமான தலைமைத்துவம்
ஓயாத உழைப்பு ஒழுக்கமான ஒன்றிணைப்பு
நகைச்சுவையான கட்டளைகள்
அர்ப்பணிப்புடன் கூடிய கடமைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தனையும் அவரிடம் கொண்ட
மனிதாபிமான உணர்வு கொண்ட அதிபர்
மணிவிழா நாயகனுக்கு மணி விழா

கற்றவர் கல்லாதவர் என்ற பிரிவு இன்றி
ஏழை பணக்காரன் என்ற பாகுபாடு இன்றி
அதிகாரி தொழிலாளி என்ற வர்க்க வேறுபாடு இன்றி
அனைத்து மனிதர்களிடமும்
அற்புதமாக செயற்படும் அறிவாளன்
எளிமையினை உடுத்தும் உங்கள்
உடைகளின் வெளிச்சம்
ஏழ்மைக் குழந்தைகளின் இதயங்களில் ஒளிர்கிறது

சைவத்தையும் தமிழையும் செயற்படுத்தும்
செயற்பாட்டாளனாகவும்
தனது ஆசிரிய சேவையிலும் அதிபர் பதவியிலும்
வேரவில் இந்துவின் பல்வேறு வேலைத்திட்டங்களையும்
வேலைப்பளுக்களின் மத்தியிலும் முன்னெடுத்தவர்
விளையாட்டு, அனைத்து துறைகளிலும்
தேசிய பரீட்சைப் பெறுபேறுகளிலும்
அவர் கடமைக்காலத்தில் பெற்றவை ஏராளம்
இத்தனைக்கும் சாட்சி பரீட்சைப் பெறுபேறுகள்

பல இடையூறுகளுக்கு இடையிலும் சவால்களுக்கு முகங்கொடுத்து
பல்வேறு விமர்சனங்களுக்கு மத்தியிலும்
தன் கருத்தையும் கடமைகளையும் பொறுப்புக்களையும்
வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்து
இன்முகத்துடன் இனிதே நிறைவேற்றியவர்
வேரவில் இந்துவின் அதிபர் பதவி என்பதும்
சுலபமான விடயமல்ல என்பதும் யாவரும் அறிந்ததே
இருப்பினும் அதனை நிறைவேற்றியவர்
எம் வித்தியாலயத்தின் முத்தான முதல்வர்

அத்தனை பருவங்களையும் கடந்து
அயராத முயற்சியினாலும் சேவை நோக்குடனும்
உதவி புரியும் உள்ளத்துடன்
நட்புடன் பழகும் நல்ல மனப்பாங்கும்
இந்த மண்ணின் மைந்தனாகவே
அடையாளம் காட்டுகின்றது
கலையான வாழ்வுப் பாதையின்
இலை பழுக்கும் பொற்காலம்
விலை மதிப்பற்ற வரம் மிக்க காலம்
தொலை தூரப் பாதையில் அறுபதாம்
நிலை கொண்ட அடையாளப் புள்ளி இது
வயது என்பது ஒரு எல்லை இடாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலிபமாய் வலிமையுடன் செயற்படுபவர்
வாடாது இவரின் ஆர்வம்

வான்புகழ் கொண்ட உம் சேவையை
வாழ்த்திட ஆயிரம் நா போதாது
பெரும் சேவை தன்னை செய்திட்டீர்
ஆசிரியராய் அதிபராய் அரும்பணியாற்றி
சமூகத்தில் அன்பாக விளங்குகின்றீர்
சிரிக்கட்டும் உங்கள் பணி
ஓய்வு என்பது சேவையில் இல்லாது
சாகா வரமாய் உம் புகழ்பாடும்
பள்ளி பாலரையும் பாடசாலை ஆசிரியர்களையும்
பண்புடனே நோக்கி பணிவான சேவை செய்ய
வழிகள் பலவும் காட்டினீர்
நல்ல ஆரோக்கியமுடன் நலமாக
பல்லாண்டு காலம் பகலவன் போல் வாழ்க
பிறந்த தின வாழ்த்துடன் மணிவிழா வாழ்த்தும்
வாழ்க வளமுடன்

திருமதி க.ஹரிகரன்
ஆசிரியர்,
கிளி/வேரவில் இ.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## An Exemplary Teacher..........



It's my honour and privilege to send my sincere greetings for the felicitation volume in appreciation of the contribution our principal Mr.I.Kesavan has made to the field of education in his 34 years of enormous service.

Sir Kesavan who is a native of Veravil, stands tall for his academic aptitude and deep knowledge in education and above all, with his simple personality, he deserves the respect and love of all. He's my first first principal as a teacher. My association with Mr.I.Kesavan spans 1 ½ years when I came to Veravil Hindu Maha Vidyalayam as a teacher. I highly appreciate his dedication to work and his systematic approach to academic activities. I'd like to share the experience that his sense of humor is charming. While sharing any stuffs with me, he would end with a proverb and ask if I know that proverb. Unforgettable one. I wish him on this wonderful day when he celebrates his birthday and to bless him long life, good health and many more achievements in the future.

Mr.M.Pranavan
Teacher,
Kn/Veravil H.M.V



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகளின் கல்வியில் பெற்றோரின் பங்கு

அன்றாட உலக வாழ்வில் பெற்றோர் பெறும் தலைசிறந்த பேறு 'அறிவுடைய நன்மக்கட் பேறாகும்'. அறிவைப் பெறுவதனால் தான் நாம் அதனைப் பெறலாம் .பெற்றோரிடம் இயல்பாகவே அன்பு செய்து பிள்ளைகளைக் காக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கின்றது. ஆனால் பிள்ளைகளிடம் பெற்றோர்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லாமையானது 'பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு'என்ற பழமொழியில் குறித்துக்காட்டப்பட்டுள்ளது.

## இளமையில் கல்வி

கல்வி கற்பதற்கு சிறந்த பருவம் இளமைப்பருவமாகும். இதனால்தான் 'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து'என்பர். இதை குறைவின்றித் தெளிவாக கற்க வேண்டும் என்றார் வள்ளுவர்.

கற்கக் கசடற கற்பவை கற்ற பின்
நிற்க அதற்குத் தக (குறள் 391)

கற்கவேண்டிய நூல்களை ஒருவர் குற்றம் அறக்கற்க வேண்டும் கற்ற பின்பு அந்தக் கல்விக்கு தகுந்து ஒழுக வேண்டும். எனவே தான் ஒரு மனிதனுக்கு தரும் பரிசு தேவலோகத்தில் வாழும் பேற்றைத் தரும் என்றும் அடங்காமை வாழ்வின் ஒளிமயமற்ற சிறப்பற்ற துன்பமான வாழ்க்கையே தரும் என்றும் பொய்யாமொழிப்புலவர் கூறியுள்ளார். எனவே இளம் தலைமுறையினரான மாணவர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய நற்பண்புகளில் அடக்கம்,பணிவு,கீழ்ப்படிவு மிக முக்கியமானவை.

மானிட வாழ்வில் பெற்றோர் பெறும் மிகப் பெரிய செல்வம் அறிவறிந்த மக்கட்பேறே என வள்ளுவர் திருக்குறளில் மக்கட் பேறு அதிகாரத்தில் (குறள் 61) குறிப்பிட்டுள்ளார். பிள்ளை பெற்றுவிட்டால் மட்டும் போதாது. அவர்களைப் பேணி வளர்க்க வேண்டும். சொற்கேளாப் பிள்ளையால் குலத்திற்கே ஈனம்.

## காலை எழுந்தவுடன் படிப்பு

'எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பிலே' என்பது பாடல். 'தொட்டில் பழக்கம் தான் சுடுகாடு மட்டும்', 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது'. எனவே பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு காலை எழுந்தவுடன் படிப்பு பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு மாலை முழுவதும் விளையாட்டு என்ற பழக்கத்தை கொண்டு வரலாம். ஆனால் பெற்றோர்,ஆசிரியர்கள் பிள்ளைகளை தண்டிப்பதை விடுத்து அன்பாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனிவாகவும் அறிவுரைகள் கூறி திருத்த வேண்டும்.கடந்த 30 வருடங்களுக்கு மேலாக எமது நாட்டின் கல்வியின் முன்னேற்றம் 50 வருடங்கள் பின்னோக்கி சென்ற விட்டது எனலாம். பெற்றோர்களாகிய நாம் முந்தைய கால எம் கல்வியின் தரத்தை மீண்டும் கட்டியெழுப்புவேன் என சபதம் கொள்ள வேண்டும்.

பெற்றோர்கள் கல்விக்காகவே முதலீடு செய்து வருகின்றனர். இதனால் பெறும் வருமானங்களைக் கொண்டே தமது வாழ்க்கையை சீராக நடத்துகின்றனர். வீழ்ச்சிகள் எழுச்சியின் முதற்படி. எனவே எமது எதிர்கால சந்ததியினரை எதிர்காலத் தலைவர்களை உரிய முறையில் வழிப்படுத்தி நல்வழிக்கு கொண்டு செல்ல வேண்டியது பெற்றோர்களினதும் பாதுகாவலர்களினதும் காலத்தின் கட்டாயக் கடமையாகும்.இன்று வீடுகளில் உள்ள இணையத்தளங்களும் தொலைக்காட்சிகளும், அலைபேசிகளும், கமராக்களும் மற்றும் வெள்ளித்திரைகளும் அதில் காண்பிக்கப்படும் நிகழ்ச்சிகளும் சில பெற்றோர்களும் பிள்ளைகளும் வெளியில் சென்று கெடும் வாய்ப்பை நிறுத்தி வீட்டிலிருந்தே கெடும் வாய்ப்பை செய்துள்ளன. எனவே சமூகச் சீர்கேடான நிகழ்ச்சிகளை பெற்றோரோ பிள்ளைகளோ பார்க்கக்கூடாது. மாணவர்களுக்கு அலைபேசிப்பாவனையை முக்கியமான தேவைக்கன்றி மற்றைய தேவைகளுக்கு பாவிக்க பெற்றோர்கள் அனுமதிக்கக் கூடாது. தன் பிள்ளை அறிவியல் விற்பன்னராகி பெரியோரிடம் சான்றோன் என்ற பெயர் பெற வேண்டும் என்பதையே எந்தப் பெற்றோரும் விரும்புவர். 'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனை சான்றோன் எனக் கேட்ட தாய்'(குறள் 69) இதனையே வள்ளுவர் மக்கட் பேறு என்ற அதிகாரத்தில் மிக அழகாய் குறிப்பிடுகின்றார். பிள்ளைகளுக்கு தண்டனை வழங்காது பிள்ளைகளைத் தாழ்த்திப் பேசாது நல்ல அறிவாளியாக பெற்றோர் வளர்க்க வேண்டும்.

## பிள்ளைகளின் திறமைகள்

நல்லவற்றையே பெற்றோர்கள் செய்து நல்லவற்றையே பிள்ளைகளிடம் எதிர்பார்த்து நல்ல பழக்கத்தையே கற்றுக்கொடுக்க வேண்டும். பொதுவாக பார்க்குமிடத்து பிள்ளைகளின் திறமைகள் எல்லாம் முழுமையான மலர்ச்சி பெற்று வளர்வதற்கு பெற்றோரினது அன்பும் ஆதரவும் வழிகாட்டலும் மிகமிக அவசியம். அன்பும் ஆதரவும் எல்லை கடக்குமானால் அமிர்தமும் நஞ்சாவது போன்று பின் தொட்டிலில் பழகிய பழக்கம் தான் சுடுகாடு மட்டும்.ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது. எனவே சிறுவயதிலே நற்பழக்கவழக்கங்களை சொல்லிக் கொடுத்து தன்னம்பிக்கையை ஏற்படுத்தி கட்டாயக் கல்வியின் சிறப்பினை சிறந்த முறையில் அடையத் துணை செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகளுக்கு மதிப்பு

பிள்ளைகளுக்கு அவர்களது வயதிற்கேற்ப சிந்தனை செய்யும் ஆற்றல் உண்டு. ஆனால் அதற்கு வேண்டிய வாய்ப்பையும் சுதந்திரத்தையும் பெற்றோர்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். பிள்ளையின் மனப்போக்கு அதன் வளர்ச்சிக்கு ஏற்றபடியே மலர்ச்சியடைய அனுமதித்தாலே பெரியவனாகும் போது எண்ணங்கள் சரியாக வளர்ச்சியடையும். புதிய கல்வித்திட்டத்தால் பழைய பாடக் கல்வித்திட்டத்தில் படித்த பெற்றோரில் பலர் தங்கள் பிள்ளைகளுக்கு வீட்டில் பாடம் சொல்லிக்கொடுக்க முடியாமல் இருக்கிறார்கள். இருந்தும் பிரத்தியேக வகுப்புகளுக்கு இயலுமான வரை அனுப்பி தங்களின் உடம்பை உருக்கியும் செலவு செய்தும் படிக்க வைக்கின்றார்கள். தம் பிள்ளைகள் நாட்டில் உயர்ந்தவர்களாக வரவேண்டும் என்பதே எந்தப் பெற்றோர்களதும் விருப்பம். எனவே நாட்டின் தலைவர்களாக வரவேண்டிய மாணவர்கள் ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பெரியோர்களுக்கும் மதிப்பளித்து கல்வி எனும் பயிரில் முழுமையான (அறுவடையை) இலக்கினை அடைய கல்வித்தாயே வேண்டி நிற்கின்றோம்.

திருமதி.றதிகா அமலராஜன்
முன்னையநாள் ஆசிரியர்
கிளி/வேரவில் இ.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவிழாக்காணும் தங்களை மாணவியாய் வாழ்த்துவதில் மனமகிழ்வு கொள்கின்றேன்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக..." என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க புகழ்பெற்று விளங்குகின்ற தங்களின் மணிவிழாவில் வாழ்த்துச் செய்தியொன்றினை வழங்கக் கிடைத்த சந்தர்ப்பத்திற்காக இறைவனுக்கு நன்றி கூறிக்கொண்டு,

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்பதற்கிணங்க எமக்குத் தமிழை இனிமையாகக் கற்பித்த பேராசானே! இலக்கண இலக்கியங்களைக் கற்று; இலக்கியத் கதாபாத்திரங்களோடு ஒன்றித்து இலக்கியச் சுவைகளை மெய்ப்பித்து தெவிட்டாமல் கற்பிக்கும் திறன் உங்களுக்கு கைவந்த கலையே!

"கேட்டார்ப்பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல்" என்ற பொய்யா மொழிப்புலவரின் சிந்தனைக்கு ஏற்ப இலக்கியத்தை விரும்பிப் படிப்பவர்களது உள்ளத்தைப் பிணிக்கும் தன்மை உடையவராயும் படிப்பில் இரசனை விருப்பமில்லாத மாணவர்களையும் தங்களது சொல் வன்மையால் கவர்ந்திழுக்கும் சக்தி வாய்ந்த தங்களிடம் கல்வி கற்றதை பெரும் பேறாக கருதுகின்றேன்.

"எங்கே விதைக்கப்பட்டாயோ அங்கே பயிராகிப் பயன் தரவேண்டும். என்ற சிந்தனைக்கமைவாக தாங்கள் ஓடியாடி விளையாடிக் கல்வி கற்ற பாடசாலையிலேயே தமிழாசானாக சேவையாற்றி ஏற்றங்கள் பலகண்டு முதல்வராகி முக்கிய பொறுப்புக்களை ஏற்று முதன்மையாளராகச் செயற்பட்டு சமுதாயத்தை நல்வழிப்படுத்தியுள்ளீர்கள் என்பது அனைவரும் அறிந்ததொன்றே. அதிபராக ஆசிரியராகப் பணியை ஏற்கும் ஒருவருக்கே பாடசாலை வாழ்க்கை என்பது மீளக்கிடைக்கின்ற ஒரு வரப்பிரசாதமாகும். இது உங்களுக்குக் கிடைத்த ஒரு அரிய பேறாகும்.

பாடசாலையில் எமக்கு கற்பித்த காலத்தில் ஒரு கையில் புத்தகமும் ஒரு கையில் பிரம்பும் கொண்டு பாடசாலையை வலம் வரும் போது எம்மைக் கண்டவுடன் என்ன வாசுகி? என்ன இளங்கோ? எனக் கேட்பதும் சிலேடை மொழியில் கதை கூறுவதும் இன்றும் பசுமரத்தாணிபோலத் தெரிகின்றது. கணீரென்று காதில் ஒலிக்கின்றது.

இறுதியாக தாங்கள் ஆசிரியராகப் பணியாற்றிய போது தங்களுடன் மிகச் சொற்ப காலம் நானும் ஆசிரியராகப் பணியாற்றக் கிடைத்த காலத்தினை எனது ஆசிரிய சேவைக்காலத்தில் பொற்காலமாக கருதுகின்றேன். ஆயினும் தாங்கள் அதிபராக கடமையாற்றிய போது தங்களின் கீழ் பணியாற்றக் கிடைக்கவில்லையே! என்பது மிகமிக மனவேதனையான விடயம் என்பது உண்மை. என்ன செய்வது இருந்தாலும் தங்களது புன்சிரிப்பும், சுவைபடப் பேசும் பேச்சும்,சிலேடைக் கதையும் என்றென்றும் எம்முன்னே நிலைத்திருக்கும்.

வாழ்க பல்லாண்டு

திருமதி.வாசுகி தெய்வேந்திரம்
(பழைய மாணவி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணி நிறைவுப் பாராட்டு கேசவன் ஆசிரியர்

காற்றுக்கும் கதிரவனுக்கும் கடலலைக்கும்
ஓய்வென்றால் தான் உமக்கும் ஓய்வு

1

விண்மீன்கள் ஒளியனுப்பி விடிந்த தொரு
பொன்னாளென உரைக்க
வீசும் இளம் தென்றல் வந்து கவிபாட
விசும்பின் வீழ்த்துளியென
விடை காணா நாள்கள்
வாழ்த்தின்பம் காண்கவென
வான்மழையும் வாழ்த்துரைக்க
கிண்கிணியெனக் கைபேசியும்
பன்மொழியில் பாடம் ஒப்புவிக்க
பாதங்கள் கடகடவென நடக்க-உம்
நடையும் ஓட்டம் போல்
ஒரு கோணம் அறுபதை அடையும்

2

அருமைக்காலம்! அனுபவம்
அறிவிலுமொரு ஒப்பற்ற தன்மை!
அன்பானவர் எல்லோருக்கும் உதவுவார்.
அறிவுடை மக்கள் மனைவியொடு
நிறைந்த வாழ்விற்கு இறைவனுக்கு நன்றி
படிக்கப் படிக்க நூலும்
பழகப் பழக நட்பும் இனியது
உம்பார்வையில் ஆனாலும்
முகம் மலரும் நட்பின்றி
அகம் மலரும் நட்பெமது
அகவை ஒன்று உமைக்கடக்க
ஆனந்தமாய் பிறந்த நாள் பிறக்க
ஆசி வழங்கிட ஆராரோ நிற்க
ஆயுசும் நலமும் கூடியிருக்க
ஆனந்த பூக்கள் இல்லத்தில் பூக்க
ஆவாரம் பூ வந்தேன்
வாழ்த்துரைக்க!

திருமதி.உ.சவேரியான்
முன்னையநாள் ஆசிரியர்
கிளி|வேரவில் இ.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவகராம் எம் கேசவன் அதிபர் அவர்கட்கு!

மணி விழாக் கோலம் கொண்ட இப் புனித
மலருக்கு என் மனம் முழுதும் நிறைந்துள்ள
மலர்களை எடுத்திங்கே பாவிதனை தொடுத்து
மாலையை சூடச் சந்தர்ப்பம் தந்தானோ இறைவன்.

அழியாச் சொத்தது கல்விச் செல்வம் தனை
அற்புதமாய் புகட்டி தமிழாய் தேனெடுக்க
ஆசான் எனும் பேறு கொண்டு கலையிலே
அறிவுப் பசியடக்கும் அற்புதப் போரிட்டு.

மணிவிழாக் கண்டு மனநிறைவடையும் இவ்வேளை
மாணவச் செல்வங்களை வளர்த்து வழிநடத்தியதனால்
மதிப்பளிக்க வென பெரும் காவியம் படைக்கும் நூலதனிலே
மட்டற்ற மகிழ்வோடு பங்கெடுக்கும் நானுமிங்கே.

ஏடு தொடக்கி வைத்துள்ளீர்கள் என் பிள்ளைகளுக்கு
ஏணியாய் உயருகின்றனர் அவர்தம் கல்வியினில்
எப்படி தான் நானுரைப்பேன் உங்களுக்கு நன்றிதனை
எழுதுகின்றேன் இப் பாவினை அதன்பால் இங்கே

குடும்பத்தோடு எனக்கொரு ஆலோசகனாய்
குறை குற்றங்களை நயமாய் எடுத்துரைத்து
குறைவின்றி நாம் வாழ்ந்து சிறக்க
குலத்தோடு நாமுரைப்போம் நன்றிக் கடன் தனை.

நல்லதொரு சேவகியாய் எனை சமூகத்தோடு இணைத்து
நற்பெயரெடுக்க வைத்திட்ட உங்களுக்கு
நல்வாழ்வது மேன்மேலும் கிடைக்க வேண்டி
நலமாகவும் நன்றாகவும் ஓய்வது கழிந்திட.

மணிவிழா நாயகனாய் வீற்றிருக்கும் இப்பொழுது
மகிழ்வோடு நிலைத்து நிற்கும் என்று கூறி
மனமார்ந்த வாழ்த்துக்கள் கூறி
மகிழ்வோடு விடை பெறுகின்றேன்.

வினுஜா பிரதீபன்,
பழைய மாணவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆளுமைத் தடங்களை ஆழமாய்ப் பதித்தவரே!

அறிவும் ஆற்றலும் ஆளுமைத் திறனும்

நறியவே நாளும் தழைக்கும் பண்பும்

செம்மையாய் சிறப்போடு கற்பிக்கும் பாங்கினால்

முப்பத்து நான்கு ஆண்டுகள்

ஆளுமைத் தடங்களை ஆழமாய்ப் பதித்திட்ட

எங்கள் கேசவன் ஐயாவே!

கற்பித்த பணியில் ஞான ஒளிவிளக்காய்

மாணவர் உள்ளத்தில் நனிசிறந்தவரே

விண்ணிலுள்ளோர் எந்தினம் வாழ்த்த

மண்ணிலுள்ளோர் உமை வணங்கிட

செழிப்பான வாழ்வு தனை செம்மையுடன்

இன்னாளுடன் சிறப்பாகக் களிக்க!

வாழ்த்துகின்றோம் மணிவிழா நாயகனே!

வாழ்க வாழ்க பல்லாண்டு!

செல்வி.க.மதுசிகா

பழைய மாணவி

கலைப்பிரிவு (2019)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துக்கவிதை

அதிபருக்கு வாழ்த்துக் கூறுவதில் பெருமிதம்
கொள்கிறது என் மனது
கனம் அதிபர் அவர்களுக்கு வாழ்த்துக்கள்
முதற்கண்...
பாடசாலைக் காலங்களில் நீங்கள் செய்த
சேவைகளுக்கு அதிபர் பதவி குறைவு தான்
குயவன் எறிந்த களியும் புது சிற்பம் கொள்ளுமாம்
அதுபோலவே உங்களிடம் வந்த எந்த
மாணவனும் பண்படாமல் விட்டதுமில்லை
வேரவில் பள்ளி மாணவர்களின் புள்ளிகளே சாட்சி
இந்த இடத்தில் ஒன்று நினைவு கூற
விரும்புகின்றேன் ஒருமுறை உமது உறுதியான
மனநிலை கண்டு வியந்த கணங்களை இன்னும்
மறக்கவில்லை
ஒவ்வொரு பெறுமதியான நிமிடங்களிலும் எமது
பாடசாலை ஜெயிக்க வேண்டும் என கூறி
மாணவர்களை ஊக்கப்படுத்திய கணம் அது.
இன்னும் மறந்த பாடில்லை
நீங்கள் இப்போது செய்திருக்கும் இந்த அளப்பரிய
செயற்பாடு நிச்சயமாக ஒரு நாள் எமது ஊர்
மான்மியகத்தில் பாடப்படும்
எல்லாம் வல்ல இறைவன் உங்கள் ஆயுளை
அதிகப்படுத்தி உங்கள் செல்வங்களில்
வளர்ச்சியை ஏற்படுத்த பிரார்த்தித்தவனாய்...

திரு.பூ.கிருபாகரன் (அவுஸ்ரேலியா)
பழைய மாணவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா வாழ்த்துச் செய்தியுடன் நன்றி நவிலல்



வேரவில் மண் தந்த பல முத்துக்களுக்குள் கிடைத்த ஒரு மணிவிழா முத்து எங்கள் கேசவன் ஆசிரியர் என்ற முத்து நான் இடம்பெயர்ந்து வேரவிலில் வசிக்கும் போது வேரவில் இந்து தமிழ் கலவன் பாடசாலை பின்னர் இந்து மகா வித்தியாலயம் என உயர்தரம் படிக்கும்காலங்களில் மாற்றம் பெற்றது. அப்போதெல்லாம் எங்களுக்கு ஆசிரியராக இருந்து தற்போது அதே பாடசாலையில் அதிபராக கடமையாற்றி தற்போது மணிவிழா காணும் கேசவன் ஆசிரியருக்கு எனது நன்றிகளும் வாழ்த்துக்களும்!

எமது பாடசாலைக் காலங்களில் மாணவருக்கு மாணவராகவும் ஆசிரியருக்கு ஆசிரியராகவும் தமது கொள்கையிலும் பணியிலும் தமக்கென தனித்துவமான பண்புகளில் சிறப்பாக பணியாற்றியவர்.காலங்கள் பல உருண்டோடியாலும் காலத்தால அழியாத சில நினைவுகள் இன்றும் எம்மால் மறக்க முடியவில்லை.இருப்பினும் தமது ஊக்கத்தாலும் ஆக்கத்தாலும் விடாமுயற்சியாலும் இறை ஆசியுடன் தொடர்ந்து தமது பணி வாழ்க்கைக்கு எனது சிரம் தாழ்த்தி நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்கின்றேன்.

மண்பிசைந்து பாவையாக்கி
கல் செதுக்கி தெய்வமாக்கி
மண்ணாளும் மன்னனையும்
மாமனிதன் என்றாக்கி
கற்பூரம் சந்தனமாய் மாணவர்க்கு
வாழ்நாளை அர்ப்பணித்த
எனது மணிவிழா நாயகனுக்கு
வாழ்த்துக்கள்

திரு.அ.அமலன்
பழைய மாணவன்,
(உயர்தரம் 2002)
கிளி/வேரவில் இ.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா வாழ்த்துக் கவி

மணிவிழா நாயகனே

வேரவில் இந்துவின் கதாநாயகனே...

கிளிநொச்சியின் பழம்பெரும் சிற்றூரான கிராஞ்சி மண்ணில் வந்துதித்த
கல்விப் பெருமகனே கேசவன் ஐயா

உங்களின் ஆரம்பப் பணிதனை வேரவில் இந்துவில் ஆரம்பித்து
ஆறைந்து ஆண்டுகள் உம் கல்விப் பணிதனை இனிதே ஆற்றி - இன்று
மணிவிழா கோலமதில் - நீங்கள் இன்முகத்துடனே மணிவிழா நாயகனாய்
ஐயம்பிள்ளை கேசவன் என்றதுமே எழிலான உம் வதனம் வந்து குவியுதே
என் எண்ணத்திரை தனிலே — முழுநிலவாய்

பன்மொழி புலமைதனை கொண்டு—எனைப் போன்ற மாணவர் மனதில் நின்று
புன்னகை மலராய் வந்து பல அறிவுரை சொன்னீர் பள்ளிமுதல்வராய் அன்று
பொறுமையின் பொக்கிசமும் நல்லறிவின் திலகமும் நீரே
பேரன்பின் உருவம் தாங்கிய செம்பணியின் தாயகம் நீங்கள்
பண்பாட்டு நிறைகுடமாய் இருந்த நல்லவரும் வல்லவரும் நீவீரே...
பள்ளியின் ஆசிரியர்களை மட்டுமன்றி எனைப்போன்ற மாணவர்களையும்
பணிவுடனே அணுகும் பேருள்ளம் கொண்டவரும் நீரே...
எம் பள்ளிதனில் முதல்வரெனும் உயரிய இடத்தில் நீங்கள் இருந்தாலும்
உன்னத குணமதில் சற்றும் சறுக்காமல் வித்தகராய் -
உம் பணிதனில் உத்தமராய் நேர்வழிதனிலே நின்று
பல்கலையும் கற்பிக்கும் - எம் பள்ளி முதல்வராய் கண்டேன்
அனுதினமும் என் பள்ளி வாழ்க்கையிலே...நான்
2019 – 2020 காலப்பகுதிதனிலே பள்ளியின் சிரேஷ்ட மாணவத்தலைவனாக
இருந்தவேளை எம் பள்ளியின் உயர்விற்கு நீர் ஆற்றிட்ட சேவை என்றும்
என் உள்ளமதில் நீங்கா நினைவலைகளாய் இன்றும்
எம் பள்ளியின் வளத்தை பெருக்கிய எம் தெய்வத்தை இன்று
எம் பள்ளி பணிநிறைவுதனை வாழ்த்தி வழியனுப்பி வைக்கிறது.
பணி ஓய்வுதனை மகிழ்வுடன் ஏற்று இறைவனின் ஆசிகளுடன்
என்றென்றும் இன்புறறிருக்க என் இதயம் கனிந்த வாழ்த்துக்கள்

ப.ஜதுர்ஷன் (கனடா)
பழைய மாணவன்,
கிளி/வேரவில் இ.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா நாயகனுக்கு என் உள்ளத்திலிருந்து சில வரிகள்

மணிவிழா நாயகனும் வேரவில் இந்துவின் மைந்தரும் இந்துவின் முதல்வருமான உயர் திரு. ஐயம்பிள்ளை கேசவன் "அவனிதனிலே பிறந்து மழலையெனவே தவழ்ந்து அழகு பெறவே நடந்து இளையோனாய் அருமழையே மிகுந்து குதலை மொழியே புகன்று அதிவிதமதாய் வளர்ந்து"

இவ்வாறாக இப்பாடசாலையில் ஆரம்பக்கல்வியை திறன்படக்கற்று மேலும் உயர்கல்விக்காக சாவகச்சேரி இந்துக்கல்லூரியை நாடி உயர்கல்வி கற்று நல்மாணாக்கருக்கு இலக்கணமாய் திகழ்ந்த இவரை வேரவில் இந்து தமிழ் அன்னை தன் மைந்தனை தன்பால் ஈர்த்துக்கொண்டாள்.

எடை போட்டு எளிமையாக பழகி நயம்படக் கதை வினாவி நளினமாய் கதை பேசி கடமையில் அமைதியாய் கலந்துரையாடலில் கலகலப்பாக சிரிக்காதோரையும் சிரிக்க சிந்திக்க தூண்டி அருமையான சேவையை அமைதியாய் வழங்கும் எம் ஆசான் வேரவில் இந்துவின் மைந்தரும் இந்துவின் முதல்வரும் ஆவார்.

சைவ ஆசாரா சீலரான இவர் சைவ ஆசார சீலரான ஐயம்பிள்ளை தம்பதிகளின் கடைக்குட்டி செல்லமகன் ஆவார். இவருக்கு கேசவன் என திருநாமத்தை பெற்றோர் அன்றே சூட்டி மகிழ்ந்தனர். கிருஸ்ணபகவானுக்கு மிகவும் பிரியமானவர் அர்ச்சுனன் அவர் தனக்கு வேண்டும் போது அன்பு மேலோங்க ஆபத்துக்கள் நெருங்க முதலில் அழைப்பது கேசவா கேசவா என்றாகும்.

கேசவன் எனும் நாமம் பூண்ட இவ் விழாவின் கதாநாயகனும் பேருக்கு தகுந்தால் போல் வல்லவராய் நல்லவராய் சைவத்தையும் தமிழையும் வளர்த்த நாவலர் பெருமான் போல் நாவண்மையில் சிறந்து செய்யும் தொழிலே தெய்வமாகக் கொண்டு இலக்கண இலக்கியங்களை இலகுவாக புகட்டி தமிழோடு சமயம் வளர்த்து அதனூடாக நற்பண்பு, நல்லொழுக்கம், வாய்மை, அன்பு, பணிவு, இரக்கம் முதலான எக் காலத்திற்கும் நிலைத்து நிற்க கூடிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்புகளை அக்காலம் தொட்டு இக்காலம் வரையும் புகட்டி தன் மாணவர்களை நல் மாணவர்களாக திகழ அயராது உழைத்த உத்தமர் என்றால் மிகையாகாது.

நான் ஆரம்பக் கல்வியை பொன்னாவெளி சைவப்பிரகாச வித்தியாசாலையில் கற்று இடைநிலைக்கல்விக்காக இப் பாடசாலைக்கு

வந்தவேளை இன்றைய மணிவிழா நாயகன் அன்று நீறணிந்த நெற்றி தலைநிறைந்த எண்ணெய் புன்முறுவல் பூத்த முகம் கையிலே புத்தகம் இவ்வாறான தோற்றமும் இன்று சொல்லப் போனால் முப்பது வயது கூட நிரம்பாத சுட்டித்தனம் மிகுந்த ஒரு குட்டிப்பையனாக எம் வகுப்பு தமிழ்பாட ஆசிரியராக வகுப்பறையில் அறிமுகமானவர். இவரிடம் அன்று தமிழ் கற்ற நினைவுகள் இன்றும் பசுமையாக உள்ளது. அன்று சுமார் முப்பது வருடங்களுக்கு முன் இதே பாடசாலையில் இவர் போன்ற இன்னும் பல அர்ப்பணிப்பு மிக்க நல்ல ஆசான்களிடம் நாம் கற்ற நினைவுகள் பசுமரத்தாணி போல் இன்றும் நிலைத்து நிற்கிறது. விரிவிற்கு அஞ்சி சுருங்கக் கூறின் "அறிஞரின் நினைவுகள் தொடர்ந்து வரும் அசடரின் நினைவுகள் அழிந்துவிடும்"

இப்பாடசாலை பின்தங்கிய சிறிய கிராமத்தில் அமைந்திருப்பினும் இப்பாடசாலையின் தொன்மையும் மகிமையும் எதிர்பாரா வளர்ச்சியும் மாணவர்களின் கல்வித் திறமையும் நல் ஒழுக்கமும் இவர் போன்ற அர்ப்பணிப்பு நிறைந்த ஆசான்களை நினைவுகூரும் என பெருமையாக கூறி தனது அறுபதாவது அகவையில் கால்பதிக்கும் திருவாளர் ஐயம்பிள்ளை கேசவன் அதிபர் அவர்கள் வாழ்க்கையை வாழ கற்றுக்கொண்டவர். அவர் வகுத்த பாதைகள் அழகானதாக அர்த்தமுள்ளதாக இருக்கும். அவரின் ஓய்வுக் காலம் மகிழ்வான மனநிறைவானதாக அமையும் அதற்கு இறைவன் என்றுமே துணை நிற்பாராக.

சுகநீதன் திருமகள்,
பழைய மாணவி,
கிளி/வேரவில் இ.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழும் போது வாழ்த்துவோம்.......!

எம் பள்ளியின் தமிழாசான்

ஏழை மாணவர்களின் தலையாசான்

இந்துவால் உயர்ந்தோரில் இவரும் ஒருவர்

இந்துவை உயர்த்தியவர்களில் இவரும் ஒருவர்

இந்துவின் இயக்கத்தில் இவரே இதயம்

இந்துவின் இசையை பரப்பிய நாதம்

இன்று வரை குறையாத புன்னகை

இனிமையாய் பேசும் ஆளுமையாளரே

வாழும் போது வாழ்த்துவோம் - என

நாம் அணிதிரண்ட வேளை தனிலே

எம்மை ஊக்கப்படுத்தி சாதனை புரிய வைத்த

சரித்திர நாயகனே - எம் அதிபர்

பள்ளி ஆசான்களுக்கு என்றுமே வழிகாட்டி
பள்ளிப் பிள்ளைகளை கரையேற்றும் படகோட்டி
கல்வியும் முயற்சியும் கலந்தே உயர்ந்தவர்
பள்ளியும் பணியுமாய் இணைந்தே வாழ்ந்தவர்

நாம் செய்த குறும்புகளை -நயமாக

எடுத்துரைத்து நாம் வாழ வழிகாட்டியவர்

நாம் இன்றும் ஒன்றாய் இணைந்தே இருக்க

இனியவரின் இதமான நடத்தையாலன்றோ

அகவை அறுபதில் மணிவிழா
அவர் பணியை நயப்பதில் எம் மனதில் திருவிழா
அவரை வாழ்த்தும் பெருவிழா - இன்று
வாழ்க வாழ்க என வாழ்த்துகின்றோம்.

2006 0/L மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதை

**அ** ன்னை ஓர்

**ஆ** லயம்

**இ** ல்லாதவர்க்கு உதவு

**ஈ** யையும் கொல்லாதே

**உ** ண்மையே பேசு

**ஊ** ரோடு சேர்ந்திரு

**எ** ண்ணத்தில் தூய்மையாய் இரு

**ஏ** ணியாய் வாழ்

**ஐ** யம் தீர கல்

**ஒ** ழுக்கமே உயர்வு

**ஓ** ரணியில் நில்

**ஔ** வையின் ஆயுள் பெறு

அ ∴ றிணையும் மதி

செல்வி.பி.பிருந்தாஜினி
தரம்-01

## அன்புத் தெய்வங்கள் நீங்கள்

சிறகை விரித்து பறக்கும்
சிட்டுக்குருவிகள் நாங்கள்
துள்ளிக் குதிக்கும்
மான் குட்டிகள் நாங்கள்
தாயை விட்டுப் பிரியும்
குழந்தைகள் போல்
அறியாமை எனும் இருள் நீக்கி
அறிவுத்தீபம் ஏற்றியவரே
அறிவின் துளிகளை அள்ளி வந்து
வகுப்பறை எங்கும் புதுமை
செய்கின்ற அன்புத் தெய்வம்
உங்கள் அன்பிற்கும்
ஊக்கத்திற்கும் அரவணைப்புக்கும்
நன்றி!நன்றி!நன்றி!

சு.சஞ்ஜய்
தரம் 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**என்அதிபர்**

உந்துருளியில் உற்சாகமாய் வந்து

உவகையுடன் உற்சாகமூட்டி

உயர்கல்வி நாம் பெற

உறுதுணையாய் நிற்பவரே!

புண்படாது பேசி எம்மை
புன்னகை புரிய வைக்க
நகைச்சுவையாய் கதைகள் பேசி நமையெல்லாம் ஆழ்பவரே!
வேகநடை நடந்து
வகுப்பெல்லாம் சுற்றி வந்து
கல்வி தனை நாம் கற்க
கண்ணுங் கருத்துமாய் உழைப்பவரே!
வாழ்கவென்று வாழ்த்துகின்றேன்
மணிவிழா நாளிலே!
மணிவிழா நீங்கள் கண்டாலும்
இன்னும் பல காலம் வாழ்ந்து
நூற்றாண்டை நீங்கள் காண
உளமார வாழ்த்துகின்றேன்
உள்ளத்தால் துதிபாடி!

செல்வி.ம.ஆன்லிசி
தரம்-04
கிளி/வேரவில் இ.ம.வி

**என் ஏக்கம்**

அன்று அன்னையின் கருவறையில் காத்திருந்தேன்
வெளி உலகுக்காக
இன்று என் பாடசாலை மடி சாய்ந்து ஏங்கும் என்
ஏக்கங்கள் தான் இவை
மாறிவரும் மாற்றங்கள் எல்லாம்
மாணவர் நம் மனதை மாற்றாதோ?
என ஏங்குகின்றேன் நிதமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பற்ற இந்த பாசமற்ற உலகிலே
பாலூட்டிய தாய் கூட பராமரிக்க மறுக்கும்
இந்த பரிதாப நிலை புரிகின்றதா?தெரிகின்றதா?

பட்டதாரியாக்கும் என் பெற்றோர் என்னை
வாழ்வின் பட்டதாரியாக்க மாட்டார்களா?
என ஒலிக்கும் மாணவர் குரல்
வேகத்தோடு வாழ கற்றுக் கொள்ளும் நாம்
விவேகத்துடன் வாழ வழிகேட்டு ஏங்குகின்றோம்

இழப்புக்கள் தான் எம் வாழ்வின் இறுதி நியதி என
எண்ணி இருப்பதை இழக்கின்றோமே ஆனால்
இழந்து விடா நம் கல்வி இறுதி வரை
தலை நிமிர வைக்க வேண்டுமென ஏங்குகின்றோம்
விலையேற்றம் பெற்ற நம் விலைவாசி வாழ்வு
நம் மாணவர் சமூகத்தை விற்று விடுமோ என ஏங்குகின்றோம்
வாழப் பிறந்த நாம் வாழ வழிகேட்கின்றோம்
வரமதனை நல்ல தேவன் வழங்குவார் என நம்புகின்றோம்

புதைக்கப்பட்ட மனிதத் தன்மையை
மாணவர் நாம் மதித்திடுவோம்
விதைத்திடுவோம் மனித மாண்புகளை
எழுந்திடுவோம் புது உலகுதனை படைத்திடவே.

பசித்திருக்கும் பாலக சமூகமாக
விடுதலை தேடும் மாணவ சமூகமாக
இலட்சியத்தை நாடும் இளைஞர் சமூகமாக
கல்வியில் நம் ஏக்கங்களை விதைத்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியாத பயணங்கள் எல்லாம்
அறியாத மனிதர்கள் எல்லாம்
புரியாத மாற்றங்கள் எல்லாம்
நமக்கு தடையல்ல முன்னேறுவோம்- நாம்
முன்னேறுவோம் முழுமூச்சோடு முன்னேறுவோம்.

செல்வன்.பி.பிருந்தாபன்
தரம் - 08
கிளி/வேரவில் இ.ம.வி

(வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் மாவட்ட செயலகத்தால் நடாத்தப்பட்ட போட்டியில் 2ஆம் இடம் பெற்றது)

**மணிவிழா வாழ்த்து**

எங்கள் பள்ளித் தலைவரே
ஐயம்பிள்ளை தந்த கேசவனே
அகவை அறுபதிலே உங்களை
அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்
கிராஞ்சி எனும் அழகிய கிராமத்திலிருந்து
வந்த நீங்கள் எங்கள் பள்ளியில்
முதல் ஆசிரிய நியமனம் பெற்று - மீண்டும் எட்டு ஆண்டுகள் அதிபராக
அயராது உழைத்து
நம் பள்ளியை நல்ல நிலைக்கு கொண்டு சென்றீர்
களங்கமில்லா உளம் கொண்ட முதல்வரே
கல்விக்கான உங்கள் அக்கறை அளப்பரியது
அன்போடு மாணவர்களை நேசித்து ஊக்குவித்து
இணையில்லா கல்வி வழங்கினீர்
ஆலமரக் காற்றோடு ஆசிரியர்களை அன்போடு அரவணைத்து
அவர்களை ஊக்குவித்து
இணையில்லா கல்வி வழங்கினீர்
பள்ளியின் வளர்ச்சிக்கு
முக்கிய பங்காற்றினீர்
இரக்க குணத்தில் இறைவனை வென்ற
இன்முகம் கொண்ட நாயகனே
இன்றுஉங்கள் வழிகாட்டுதலால் நம்பள்ளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியிலும் ஏனைய துறைகளிலும் பல
சாதனைகளோடு பிரகாசித்து நிற்கின்றது
கிளி/வேரவில் இந்துவின் மணிவிழா நாயகனே
பண்பிலே மகுடம் என உயர்ந்து
பழுதிலாத பணி செய்து இன்று
முழுமதியாய் நிறைவுடனே நீங்கள்
நீடுழி வாழ்க!

செல்வி.த.அபிஷா
தரம்-08
கிளி/வேரவில் இ.ம.வி

**கற்றார் பெருமை**

தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை
நன்று' என்ற வள்ளுவர் சொல்லுக்கு வலு சேர்த்த வள்ளல்கள் எம் ஆசான்கள்

மழை இன்றி மரத்தின் இலைகள் உதிர்க்கும்
மழையால் மீண்டும் அது தளிர்க்கும்
கல்வியின்றி வாழ்க்கையே கசக்கும்
கல்வியால் வாழ்க்கையோ அது இனிக்கும்
கல்விக்கோர் சிகரமாய் ஆசான்கள்

மழை கொடுக்கும் கொடை அது மூன்று மாதம்
அகிலத்தில் ஆசான்களின் கல்வியின் கொடையோ அது என்றும் வாழும்
வையகத்தில் அந்த வானத்தைப் போன்றவர்கள் ஆசான்கள்
கல்விக்கு வித்தாய் மண்ணிற்கு முத்தாய் நாட்டின் சொத்தாய்
அகிலத்தில் அறிவளித்தவர்கள் என்றும்
அணையாத தீபமாய் ஆசான்கள்.

செல்வி.ர.ஸானுஜா
தரம்- 06
கிளி/வேரவில் இ.ம.வி

**எம் பள்ளியின் மகிமை**

ஊரின் பெயர் கொண்டு இட்ட பெயர் பாரீர்
கிளி/ வேரவில் இந்து மகாவித்தியாலயம்
ஆயிரத்து தொள்ளாயிரத்து பதின் நான்கில்
அரியதோர் பள்ளி உருவாகியதே..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்புடனே வித்தை பல அள்ளி வழங்கிடும் பள்ளி
அரவணைக்கும் நல்லதிபர்
அகமகிழ்ந்து அறிவூட்டும் நல்லாசான்கள்
அறிவுதனைப் பெற்றிடும் நல் மாணவர்கள்- என
பலரைக் கொண்டமைந்தது நம் பள்ளி..

குருவிகளும் குஞ்சுகளும் தங்கும்
ஆலும் வேரும் நிறைந்த நிழல்தனில்
பள்ளிப்படிப்பை தொடர்ந்து
பல்துறையில் சாதனை படைக்கும் மாணவர் பலரை
உருவாக்கி மிடுக்குடன் மிளிரும் நம் பள்ளி..
மாணவரின் அறிவு, திறன், மனப்பாங்கை பெற
அயராது பணியாற்றும் நம் பள்ளி
பல் போட்டிதனில் பரிசுகள் பல பெற்று
பல்கலைக்கழகம் சென்று பட்டம் பல பெற்று
பதவியில் உயர வழிகாட்டியது நம் பள்ளி

ஏணிப் படிகளிலே எம்மை உயர்த்திவிட்டு
குறையாத கல்வி வழங்கி
இற்றைவரை சிறப்புடனே
இனிதாய் விளங்கும் நம் பள்ளி

நூற்றாண்டு கடந்து கல்வியால் கலையால் ஓங்கி
சாதனைகள் தான் புரிந்து சரித்திரம் பல படைத்து
இயற்கையின் சிரம் கொண்டு அழகுடனே விளங்கும்
பள்ளியாம் நம் பள்ளி.

செல்வி.மௌ.திரிஷா
தரம் - 12
கிளி/வேரவில் இ.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடுகளின் தனிச்சிறப்புக்கள்

1. உலகில் மிகப்பழமையான நாடாளுமன்றம் உள்ள நாடு எது?

   ஐஸ்லாந்து

2. ஆட்சி மாற்றம் இல்லாத நாடு எது?

   மெக்சிக்கோ

3. கண்ணாடித் தொழிலுக்கு பெயர் பெற்ற நாடு எது?

   பெல்ஜியம்

4. பத்திரிகை வெளியிடாத நாடு?

   திபெத்

5. உலகிலேயே அரச தலைவர் ஒரு வருட காலம் பதவி கொண்ட நாடு எது?

   சுவிட்சர்லாந்து

6. கடல் மட்டத்திற்கு கீழேயுள்ள நாடு எது?

   டென்மார்க்

7. உலகிலேயே வெப்பமான இடம் அசீசியா இருக்கும் நாடு எது?

   லிபியா

8. உலகிலேயே குளிர்ந்த இடமான சைபீரியா இருக்கும் நாடு எது?

   ரஸ்யா

9. திரையரங்குகளே இல்லாத நாடு எது?

   பூட்டான்

10. இரு நாட்டின் பரப்பளவுக்குள் அமைந்திருக்கும் இன்னுமொரு நாடு எது?

    லெசதோ (ஆபிரிக்கா)

11. உலக மக்கள் அமைதியாக வாழ்வதற்கு உகந்த நாடு எது?

    நோர்வே

12. உலகின் தட்டையான சமதளமான நாடு எது?

    மாலைதீவு

13. ஆண்டு தோறும் பூமியில் புதைந்து வரும் நாடு எது?

    நெதர்லாந்து

14. கண்டமாக இருக்கும் ஒரே நாடு எது?

    அவுஸ்ரேலியா

15. மைனா பறவையின் தாய்நாடு எது?

    இந்தியா

அக்ஷயன் குரூஸ்
தரம்- 06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா நாயகனுடன் ஆசிரியர்களும் மாணவர்களும்















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றி மழை

கண்டி மாவட்டத்தில் தல்வத்தை என்ற இடத்தில் கமல் என்று ஒரு பையன் வாழ்ந்து வந்தான். அவன் தரம் ஒன்பதில் கல்வி கற்கும் மாணவன் ஆவான். அவன் அவனது பாடசாலையில் திறமையான ஒரு மாணவனாக காணப்பட்டான். எப்பொழுதுமே வகுப்பில் முதலாம் பிள்ளையாக வரும் அவனுக்கு ஆசிரியர்களும் மிகுந்த அன்பு காட்டினார்கள்.

சிறிகாந்தன் என்பவர் கமலின் தகப்பன் அவருக்கு அஸங்கவையை விட நான்கு பிள்ளைகள் இருந்தனர். கமலிற்கு இரு சகோதரர்களும், இரு சகோதரிகளும் உள்ளனர். அவர் இந்த ஐந்து பிள்ளைகளையும் வளர்ப்பதற்கு கருணாவதியின் பூரண ஆதரவு சிறிகாந்தனுக்கு கிடைத்தது.

பாடசாலைக்கு செல்லும் பிள்ளைகள் இருந்ததால் சிறிகாந்தனுக்கு வாழ்க்கையை கொண்டு செல்வது மிகவும் சிரமமாகியது. அவர் கண்டியில் சிறுவர் பூங்காவிற்கு வரும் பிள்ளைகளை தனது சவாரிக் கழுதைகள் மீது ஏற்றி பூங்காவை வலம் வந்து அதன் மூலம் கிடைக்கின்ற பணத்தின் மூலம் தனது குடும்பத்தை கொண்டு சென்றார்.

இவரிடம் இரண்டு சவாரிக் கழுதைகள் இருந்ததால் ஒன்றை தானும் மற்றையதை பாடசாலை விட்டு வந்து மாலை வேளைகளில் கமலினாலும் செலுத்தப்பட்டன. தனது குடும்ப நிலையை அறிந்த அஸங்க அந்த வேலையை மிகுந்த மகிழ்ச்சியுடன் செய்து வந்தான். இவ்வாறு சவாரி கழுதைகளை செலுத்தினாலும் கமல் படிப்பதிலும், பாடசாலை செல்வதிலும் பின் வாங்கவில்லை.

அன்று ஒரு நாள் பாடசாலை விட்டு வந்து சவாரிக் கழுதைகளுடன் பூங்காவிற்குள் சென்ற கமல் அங்கு நிறைய வெளிநாட்டவர்கள் பூங்காவினுள் உல்லாசமாக காணப்பட்டனர். அதில் வெளிநாட்டு பிள்ளைகள் அந்த சவாரிக் கழுதைகள் மேலேறி செல்ல ஆசை கொண்டனர். அதனால் கமல் அந்த பிள்ளைகளை ஏற்றிச் சென்று வந்து விட்டான். அதனால் அவனுக்கு வெள்ளைக்காரர்கள் அதிக பணத்தை வழங்கிச் சென்றனர். இதனால் கமல் மகிழ்ச்சியடைந்தான்.

இவ்வாறு கமலின் குடும்பம் சந்தோசமாக வாழ்ந்து கொண்டிருந்தனர். ஒரு நாள் அவனது அப்பா கடும் மார்பு நோயினால் பாதிக்கப்பட்டார். தொழிலைச் செய்ய முடியாத அளவுக்கு கடுமையாக இருந்தது. இதனால் அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். சிறிது நாட்களில் அந் நோய் கடுமையாகி சிறிஸோம இறந்து போனார். அவர் இறந்த செய்தியைக் கேட்ட கமல் மிகவும் கவலை அடைந்தான். அப்பொழுது அங்குள்ளவர்கள் வாழ்க்கை என்பது நிச்சயமானது இல்லை என்று கூறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை சமாதானப்படுத்தி போய் மற்ற வேலைக்கு தயாராகுங்கள் என்று கூறினார்கள். அவ்வாறு கூறியதைக் கேட்ட கருணாவதி கமலைக் கூட்டிக் கொண்டு சென்று எல்லா வேலைகளையும் செய்தாள். பின் இறப்பு வீட்டிற்கு வந்திருந்த கமலின் மாமா கமலை அவனது குடும்பத்தோடு தான் வசிக்கும் தம்புள்ளை என்ற இடத்திற்கு தன்னோடு வந்து வசிக்குமாறும் அங்கு அவர்களுக்கு விவசாயம் செய்வதற்கு காணி ஒன்று தருவதாகவும் கூறினார். ஆனால் கமல் போவதற்கு சம்மதம் தெரிவிக்கவில்லை. பின்னர் அவன் அவ்வாறு சொல்லியதைக் கேட்ட அவனது மாமா தொந்தரவு செய்யாமல் எழுந்து சென்றுவிட்டார்.

அதன் பின்னர் கமல் தன்னுடைய சவாரிக் கழுதைகளின் மூலம் வருகின்ற பணத்தைக் கொண்டு தனது குடும்பத்தைக் கொண்டு சென்றான். இவ்வாறு தன்னுடைய சவாரிக் கழுதைகளை செலுத்தி தனது குடும்பத்தை வழிநடத்திய கமலிற்கு பிரபு எனும் முதலாளி மூலம் ஓர் பிரச்சினை ஏற்பட்டது. அதாவது பிரபு முதலாளி தான் வைத்திருக்கின்ற கழுதைகளில் இருந்து பணம் குறைவாக வருகின்றது. அதற்கு கமலின் கழுதைகளே காரணம். அதற்காக இரவோடு இரவாகச் சென்று கமலினுடைய இரு சவாரிக் கழுதைகளையும் பிரபு முதலாளி கடத்தி சென்று அநுராதபுரத்திற்கு அனுப்பி விட்டார்.

அடுத்த நாள் விடியும் போது வெளியே வந்த கமல் கழுதைகளைக் காணாது திகைத்தான். உடனே அம்மாவை அழைத்து அங்கு கட்டப்பட்டிருந்த கழுதைகள் எங்கே எனக் கேட்டான். கருணாவதி தெரியவில்லை மகனே என்று பதிலளித்தாள். உடனே கமலிற்கு அப்போது ஞாபகம் வந்தது. இது பிரபு முதலாளியின் வேலையாக தான் இருக்க வேண்டும் என்று. என்ன செய்வது என்று தெரியாமல் நின்றான் அஸங்க. அப்பொழுது கருணாவதி தம்புள்ளைக்கு போவோம் என்று கமலிடம் சொன்னாள். அங்கு சென்று மாமாவுடன் சேர்ந்து விவசாயம் செய்வோம் என்று கூறினாள்.

அடுத்த நாள் மாமா கமலின் வீட்டிற்கு வந்தார். நடத்தவற்றை அறிந்தார். சனிக்கிழமை அன்று தனது வீட்டிற்கு செல்வோம் என்று கூறிச் சென்றார். அவ்வாறே அவர்கள் மாமாவின் வீட்டிற்குச் சென்றனர். அங்கு சென்று மாமாவின் காணி ஒன்றில் விவசாயம் செய்தான். ஆனாலும் அவன் தனது கல்வித் திறமையை கைவிடவில்லை. அவன் செய்த விவசாயம் செழிப்பாக இருந்தமையால் அவனுக்கு விவசாயத் திணைக்களத்தில் இருந்து வந்து ஒன்றரை இலட்சம் ரூபாய் பரிசாக வழங்கினர்.

ஒரு நாள் விவசாயம் செய்து ஓய்வு கிடைத்த நாட்களில் தான் இப்பொழுது கல்வி கற்கும் பாடசாலையில் உள்ள நண்பர்களான கரன், விமல் போன்றவர்களுடன் விளையாடிய பின்னர் மாலையில் மாமாவின் வீட்டின் அருகே உள்ள குளத்தில் குளிக்கச் சென்ற போது அந்த குளத்தில் உள்ள முதலை அவனது சகோதரனைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்து செல்வதைக் கண்ட கமல் அதனோடு போராடி சகோதரனை மீட்டதுடன் அந்த முதலையையும் பிடித்து மிருகக் காட்சி சாலையில் ஒப்படைத்தான். அதனால் அவனுக்கு பரிசு வழங்கப்பட்டது. இதனால் அவன் பத்திரிகையிலும், தனது பாடசாலையிலும் பிரபல்யம் அடைந்தான்.

அத்தோடு தனது வீட்டிற்குள் களவாட வந்த இரண்டு திருடர்களை அவன் தனது வீட்டில் அடைத்து வைத்து அவர்களை பொலிஸ் அதிகாரிகளிடம் ஒப்படைத்தான். இதனால் பொலிஸ் அதிகாரிகள் அவனை கௌரவித்து ஒரு பரிசினையும் வழங்கினார்கள். இவ்வாறான சாதனைகளை படைத்த கமல் தனது கல்வியில் முன்னேறி ஒரு வைத்தியராக பொறுப்பேற்று ஏழை மக்களுக்கு இலவசமாக வைத்தியம் செய்து வந்தான்.

இவ்வாறு சவாரி கழுதைகள் செலுத்தி கல்வி, விவசாயம், வீரம் என்பவற்றில் சிறந்து விளங்கிய கமலிற்கு வெற்றி மழையாக பொழிந்த வண்ணம் காணப்பட்டன. இதனால் அவன் தனது குடும்பத்தையும் சந்தோசமாக வாழ்வை முன்னேற்றிச் சென்றான்.

செல்வன்.அ.பவித்திரன்
தரம்-12 (2024)
கிளி/வேரவில் இ.ம.வி

**என் பாடசாலை**

கிளிகளும் நொச்சிகளும் நிறைந்த மருத நிலம் தனிலே சொந்த மண் வேரவிலின் தொன்மையான ஊர்தனிலே மையல் தானே கொண்ட தாய் விளங்கும் எம் வேரவில் இந்து மகா வித்தியாலயம் 1914ம் ஆண்டு உதித்து நூற்றாண்டு விழாதனைக் கண்ட என் வித்தியாலயமே....

உயர்தர கல்வியினைக் கற்று பல்கலை பயிலும் போதினிலும் தேசிய கல்வியல் கல்லூரியில் கல்வி பயிலும் போதினிலே பழம் பொறுக்கும் - வயது பழம் நினைவு வந்ததனால் வர்ணனையாய் சொல்லுகிறேன் வருத்தமிலா வாழ்வியலை ...

எம் வித்தியாலயத்திலே 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரை ஒரு வெண்கொற்றக் குடையை கொண்ட அரசன் மக்களினுடைய நலன்களை நிறைவேற்றி வைப்பது போன்று ஐ.கேசவன் ஐயா அவர்கள் சின்னஞ்சிறு அரும்புகளை பல சிகரங்களும், சாதனைகளும் புரிய 2023 ம் ஆண்டிலே புலமை பரீட்சையில் வெட்டு புள்ளிகளுக்கு மேல் பெறுவதற்கு வழிகாட்டிய கிராஞ்சி மண்ணிலே மணிவிழா காண இருக்கும் அறிவு சிகரமான கேசவன் ஐயாவே..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையான சிகரம் கொண்டு – ஆராதவரம் கொண்டு அழகுடனே அளிக்கப்பட்ட அழகான எம்பதியில் குருவிகளும் குஞ்சுகளும் வதியும் வேம்பும் - ஆலும் நிறைந்த நிழல் தனிலே பள்ளிப்படிப்பை தொடர்ந்தவர் தாம் பலமான ஆசான்...

பொருள் வளம் தான் இன்றிடினும் சாதிக்க மனபலம் மட்டும் போதுமென்று எமை ஆளாக்கி அனுப்பியது என் வேரவில் பள்ளியல்லவா.... கட்டிளம் வயதினிலே சுட்டி வேலை செய்து தானே பள்ளி படிப்பை எமக்கு வழங்கிய எம் வேரவில் பள்ளியே.. படிக்க தந்த புத்தகம் - தான் இலந்தைப் பழம் பறிக்கப் போய் மாட்டுக்கு இரையானது என் வாழ்வில் தானில்லவா.. வேரவில் பள்ளியில் நான் செய்யும் செயல்கள் என்னை நல்வழியை நோக்கி செல்வதற்கு வழிகாட்டினாலும் என்னைச் சிந்தித்து செயற்படவும் மாணவர் செல்வங்களை ஒழுக்கத்தின் படி சென்றிடவே வழிகாட்டிய ஆசான் பல உள்ள என் கிளி/வேரவில் இந்து மகா வித்தியாலயமே...

" நாட்டை மாற்ற – நகரை மாற்ற
மாற்றத்தின் சக்தியான திட்டமிடலின் நாயகனாய் - மாற
எம் வாழ்வை மாற்றி திட்டமிட்டு அனுப்பியது எம் பள்ளியல்லவா.."

**உயர்வாய் உயர்வாய் உயர்வாய்! என்று வாழ்த்துவோம் இந்துவை!**

செல்வன்.கே.நிரோஜன்
தரம் - 12 (2024)
கிளி/ வேரவில் இ.ம.வி

**என் மனதில் என் பள்ளி அதிபர்**

வேரவில் மண்ணில் தோன்றி
வேம்பின் கீழ் எமை - இருத்தி
வேதங்கள் பல சொல்லி
வேந்தர்கள் ஆக்கினீர்

நூற்றாண்டு கண்டு – பல
நூறு பிள்ளைகட்கு தாயாகி
ஆளாக்கி எம்மை
ஆலாய் நிற்கின்றீர்

விழுதூன்றி இம்மண்ணில்
விண் மீன்கள் போன்ற – எம்மை
பழுதின்றி நல்ல பட்டம் - பெற
நீயும் வைக்கின்றீர்
ஆலாய் உருவெடுத்து
அழியாத கல்விதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகாய் எம் மனதில்
ஆழமாய் பதித்து விட்டீர்

இந்து மகாவித்தியாலயமாய்
விந்தைகள் பல செய்து – எம்மை
கல்வி எனும் வித்திட்டு
அழியா மரமாக்கினீர்

தருவின் நிழலில் விளையாடிய தருணங்களும்
குருவின் அரவணைப்பில் வாழ்ந்த நாட்களும்
நினைவுகளாய் என்றும் எம் நெஞ்சில தொடரும்...

மணிவிழா காணும் எம் அதிபர்
மங்காத கல்வியினை – எமக்கு மாண்புடனே
மலர்ந்த முகத்துடன் வழங்கினீர்

அவர் காலத்தில் பரீட்சை – எழுதி
பல்வேறு துறைகளை தேர்ந்திட
பலவாறு வழிசமைத்தீர்கள்
மணிவிழா நாயகனாம் - எம் அதிபரை இந்நாளில்
வாழ்த்துகிறோம் பல்லாண்டு வாழ்கவென...

செல்வி.அ.செந்தாரணி

தரம் - 11 (2022)

கிளி/வேரவில் இ.ம.வி

**பறந்து போய் விடு! என் பட்டமே!**

கதிரவனின் வருகைக்கு முன்னே
வயல் வெளியில் கால்பதித்து

ஐந்துக்கும் பத்துக்கும்
அருமையாய் களை பறித்து

கண்ணீரையும் கனவையும்
கண்ணுக்குள் ஒழித்து வைத்து

வறுமையின் காரணத்தால்
வாழ் நாளெல்லாம் விரதமிருந்து

ஒட்டிய வயிரோடும்
உருக்குலைந்த உடம்போடும்

எனை அறிமுகம் செய்து வைத்த
அற்புத அன்னையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருண்ட நம் வாழ்வில்
இவன் மூலம் வெளிச்சம் வருமென

காகிதப் பட்டம் விட்ட என்னை
கல்லூரியில் பட்டம் பெற வைத்தாய்!

செல்வன்.க.பவிசன்
தரம் - 06
கிளி/வேரவில் இ.ம.வி

## அம்மாவின் அன்பு உள்ளம்

பத்து மாதம் வயிற்றில் வலியோடு சுமந்து பெற்ற என் தெய்வமே. எனக்கு எந்த துன்பம் வந்து நான் அழுதாலும் என்னை அணைத்துக்கொண்டு அவளின் மடி கொடுத்து என்னை உறங்க வைக்கும் சாமியே. என்னை வெறுக்காமலும் என்னுடன் சண்டை போடாமலும் நான் செய்யும் தவறுகளை மன்னித்து ஏற்றுக் கொள்வாயே. நான் உன்னிடம் உள்ள எல்லா விடயத்தையும் கற்றுக் கொள்வேன். என்னை உன் இரு கைகளாலும் அணைத்துக்கொள்வாள். நீ ஒவ்வொரு நாளும் மலரைப்போல இருப்பாய். நான் வெல்லும் ஒவ்வொரு வெற்றிக்கும் காரணம் நீயே நான் சொல்லிய முதல் வார்த்தை அம்மா...

நான் எத்தனை காலங்கள் எடுத்தாலும் உன்கூட வாழ வேண்டும் . எனக்கு உயிர்கொடுத்த முதல் உயிர் நீயே. நான் உனக்கு பெருமையையும், மகிழ்ச்சியையும் நிச்சயம் தேடித்தருவேன். நீ என் சாமி நீ சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் என்னுடைய இலட்சியம். நீ சொல்லும் அனைத்தையும் நான் நிறைவேற்றுவேன். எனது உறவும் நீதான் உலகமும் நீதான். உனக்கு எவ்வளவு துன்பம் வந்தாலும் எங்களுக்கு எதையும் வெளியில் உணர்த்த மாட்டாயே. அது உன் அன்பு. நான் ஆசைப்பட்ட எதையும் இல்லை என்று சொல்லாமல் எங்களுக்கு எதையும் வழங்குவாயே. ஆனால் நான் உன்னை எப்பவும் விடமாட்டேன். என் இரு கண்களாகவும் நான் உன்னைத் தாங்குவேன். என்னை வசதியான பாடசாலையில் படிக்கவைத்து புதிய ஆடை அணிந்து நான் வரும் வரை உணவு உண்ணாமல் காத்திருந்து சிறு கதைகூறி உணவு ஊட்டி தூங்கவைக்கும் முதல் தெய்வம் நீயே. நீ எப்பவும் ஒரு குறையும் இல்லாமல் தாங்குவாய் எனது ராணி அம்மா.

செல்வி.ஜெ.தரணிகா
தரம் - 07
கிளி/வேரவில் இ.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிக்கணக்கின் மதத்துவம்

உலகத்தின் ஆதியும் அந்தமும் பற்றி எவ்வாறு கூறமுடியாதோ அதனைப்போல தான் நேரமும் தொடக்கமும் முடிவும் எப்போது என்று கூறமுடியாது. உலகத்தில் உள்ள எல்லா பொருளுக்கும் இலகுவாக விளக்கம் சொல்ல முடியும். ஆனால் நேரத்திற்கு விளக்கம் சொல்ல முற்பட்டால் தங்கத்தைப் போல மதிப்பு மிக்கது இப்படிப்பட்ட சுற்றி வளைக்கப்பட்ட பதில்களை தான் நம்மால் தர முடிகிறது.

அந்தவகையில் அறிஞர்களின் நேரம் பற்றிய கருத்துக்களில் அர்னால்ட் பெனைட் என்பவர் "நேரத்தினை பணமாக எண்ணிக் கொள்ளுங்கள்" என்கிறார். அறிஞர் சார்லஸ் டார்வின் என்பவர், " ஒரு மணிநேரத்தை வீணடிக்கத் துணிந்த மனிதன் வாழ்க்கையின் மதிப்பை அறியாதவன்" என்கிறார். மேலும் அறிஞர் பெஞ்சமின் பிராங்கிளின் " தவறவிட்ட நேரத்தை திரும்பப் பெறமுடியாது" என்கிறார்.

இவ்வாறு அறிஞர்களின் கருத்து அமைந்து இருக்கின்றது. உண்மையிலே வாழ்க்கை தான் நேரம் நம்மைவிட்டு கடந்து விடுகிறது. இவ் வாழ்க்கையினை இம்மை, மறுமை, வெற்றி என்பவற்றின் தளம் எனலாம். நேரத்தை நமது வாழ்க்கையோடு தொடர்புபடுத்தி பார்க்க முற்பட்டால் ஒரு நாளைக்கு 24 மணித்தியாலம், 365 நாட்கள், ஒரு வருடம் என்ற கணிப்பிற்கு இணங்க ஒரு மனிதன் அண்ணளவாக 70- 80 வருடங்கள் வாழ்வான் இதில் நேர உணர்வுடன் கடந்து செல்ல வேண்டும்.

நேர உணர்வுடன் பணியாற்ற தொடங்கினால் நீங்கள் இத்தனை ஆண்டுகளை விட பல மடங்காக சாதிக்கலாம். அதாவது உங்களுக்கு 20 வயது ஆகும் போது 25550 நாட்களில் (70 வருடம்) 7300 நாட்கள் செலவிட்டு

18250 நாட்களே கையிருப்பாக அமையும். இதுவே 60 வயது ஆகும் போது 3650 நாட்கள் அந்நாளில் முதுமையுடன் சார்பானவராக மாறுகிறோம். இனி கலண்டரில் தேதியை கிளிக்கம் போது சிந்தியுங்கள் என் கையிருப்பு நாளில் ஒரு நாள் குறைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் உங்களிடம் ஒரு கேள்வியை கேளுங்கள் உங்கள் வாழ்க்கையில் இது எத்தனையாவது நாள்? எத்தனையாவது மணிநேரம்? உங்கள் வாழ்க்கையில் இனி எஞ்சியிருக்கும் கையிருப்பு நாட்கள் எத்தனை? இதில் சாதிக்க விரும்புவது என்ன என்று? என்னடா இது கடைசிக் காலத்தைப் பற்றிய அச்சுறுத்தலாக இருக்கிறதே என்று எதிர்மறையாக எடுத்துக் கொள்ள வேண்டாம். நேர உணர்வை வளர்த்துக் கொள்ள இந்த அதிர்ச்சி வைத்தியம்

முற்றிலும் அவசியமாகும். எதிர் காலத்தை விரைவாகச் சாதிப்பதற்கு இத்தகைய சுயமான நிபந்தனை புத்திசாலித்தனமானது.

நேரத்தின் மகத்துவத்தினை உணர்த்தும் அறிஞர்களில் ஸ்டீங் ஜாப்ஸ் " எங்களிடம் உள்ள மிகவும் விலைமதிப்பற்ற வளம் நேரமாகும்" என்கிறார். தோமஸ் அல்வா எடிசன் அவர்கள் "உண்மையில் எந்தவொரு மனிதனுக்கும் இருக்கும் ஒரே மூலதனம் நேரம் தான் மேலும் அவன் இழந்தால் பெறமுடியாத ஒரேவளம் நேரம்" என்கிறார்.

சார்லி சாப்ளின் அவர்கள் "நேரம் என்பது ஒரு சிறந்த எழுத்தாளர் அது எப்போதும் சரியான முடிவை எழுதுகிறது" என்கிறார். நேர உணர்வை வளர்த்து சாதிக்க போவதும் அல்லது பத்தோடு பதினொன்றாக வாழ்ந்து மறையப் போகிறோமே என்பதை தீர்மானிக்கும் நேரம் வந்துவிட்டது.

**" நீங்கள் தாமதிக்கலாம் ஆனால் நேரம் தாமதிக்காது"**

செல்வன்.ச.சானுஜன்
தரம் - 12 (2024)
கிளி/ வேரவில் இ.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவிழா நாயகனுடன் ஆசிரியர்களும் மாணவர்களும்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓய்வு

நில்லாத வாழ்க்கை ஓட்டத்தினிடை
நிழல் தருவாம் ஓய்வு
மகிழ்ந்து ஏற்கும் பொழுதினிடை
வருந்தி அழைக்கும் வாழ்வு

நிறைவேறாத ஆசைகள்
நிகழ்த்தப்படாத சாதனைகள்
முடிக்கப்படாத கவிதைகள்
வாழ்வின் அன்றாட கடன்கள்
எண்ணிடங்கும் ஆயுள் பக்கங்களில்
நிரப்பத் துடிக்கும் நினைவுகள்

ஓய்வறியாக் காற்றைப் போல
அடுக் கடுக்காய் அமித்தும் பணிகள்
சிறப்பான செயலாற்றலுக்கு
விருதாய் அதிகச் சுமைகள்

தேடிக் கிடைப்பதில்லை
இளமை, அழகு, மூப்பு, இறப்பு
தேடினாலும் கிடைக்கலாம்
பணம், பதவி, பட்டம், புகழ்
ஓய்வு இவையிரண்டும் ஏதுவாய
இளமையில் பிடிப்பதில்லை
முதுமையாய் நிச்சயமில்லை
விருப்பமாய் பெற்றாலும்
வயதால் அடைந்தாலும்
வேலைகள் அற்றதல்ல ஓய்வு.

மௌ. சயநிஷா,
தரம் - 04

## இணையவழி இணைவோம்

தொட்டனைத் தூறும் மணற் கேணி மாந்தர்க்கு
கற்றனைத் தூறும் அறிவு
என்ற வள்ளுவர் வாசகத்திற்கிணங்க
கல்வி என்பது இன்றைய காலகட்டத்தில்
மேன்மையும் பெருமையும் தருமாதலால்
மென்மேலும் கற்க கற்ற அறிவு மிகுதியாக
கிடைத்து விடும் அவ்வாறான அறிவை ஆழமாக
பெற இணைய வழிக் கல்வி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைய வழிக் கல்வி - இனி

இது தான் வழி

எண்ணென்ப எனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு
என கல்வியின் சிறப்பை உணர்த்த
நம் முன்னோர் கண் போன்ற கல்வியை
குருகுலம் மூலமும் பின்னர் திண்ணைப் பள்ளிகள்
மூலமும் போதித்தனர்.
எம் நாட்டின் ஆங்கில ஆதிக்கம் வேரூன்ற
தொடங்கிய பின்னர் பள்ளிக்கூடங்கள்
கல்வி போதிக்கும் இடங்களாக மாறின
கிறிஸ்தவ மிஷனரிகளால் கல்வி அனைவருக்கும்
பொதுவாகி விடவே முறைசார் கல்வி
நடைமுறைப்படுத்தப்பட்டது
இன்று காலத்தின் தேவைக்கும் அறிவியல்
தொழிநுட்ப முன்னேற்றத்திற்கு ஏற்ப
கல்வித்துறை பல மாற்றங்களைப்
பெற்று அசுர வேகத்தில் வளர்ந்து வருகின்றது
பழையன கழிதலும்
புதியன புகுதலும்- வழுவில்

கால வகையினானே
என்பதற்கிணங்க கல்வி முறையில் புதிய புதிய
திருப்பங்களைக் கொண்டு வந்து நவீன
மாற்றங்களை ஏற்படுத்த வேண்டுமாயின்
இணையவழி இணைவதே மிகச்சிறந்த வழி

விஞ்ஞான உலகில்
வீறுநடை போட்டு
ஆர்வமாய் ஆனந்தமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணையவழி நடந்து சாதனை செய்யக்
காத்திருக்கும் மாணவ சமூகத்தை
சீர்படுத்தி நேர்படுத்தி வழிகாட்ட
வேண்டியது எம் ஒவ்வொருவரதும்
தலையான கடமையன்றோ

மாற்றம் எமது வாழ்க்கையின்
சட்ட விதி கடந்த காலத்தையும் நிகழ்
காலத்தையும் மட்டும்எண்ணிக்
கொண்டிருப்பவர்கள் தமது எதிர்காலத்தை
இழந்து விடுவர் என்றார் ஜோன் கெனடி

அறிவுசார் யுகத்தில்
மாறிவரும் கல்வியில் மாணவருக்கு
வழங்கவே வேண்டிய நவீன தொழிநுட்ப
அறிவு என்பது இணையத்துடன்
தொடர்புபட்டதே
கல்வியின் பிரதான இலக்கு எதுவெனில்
ஒருவரை உலகளாவிய பிரஜை
ஆக உருவாக்குவதாகும்.
கற்றல் கற்பித்தல் எனும் நேரடி வகுப்பறை
நிகழ்வில் ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து
செயற்பட்டனர்
இந்நிலை கொரோனா தொற்றின்
பொது முடக்கத்தனால் மாணவரின் கல்வியல்
பெரும் பாதிப்பைக் கொண்டு வர இணைய
வழிக்கல்வியின் சேவை தேவையானது
அறிதின் பேசி,கணினி,மடிக்கணினி
போன்ற தொழிநுட்ப சாதனங்கள் கற்றலுக்குத்
துணை செய்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறியியல்,அறிவியல்,கணினி இயல்
துறை மாணவர்கள் இணைய வழியில்
இணைந்து கற்கின்றனர் இருந்த இடத்தில்
கல்வியைப் பெற்று தமது கற்றல் திறன

அறிவுத்திறனை வளர்த்து வருகின்றனர்.
இணையவழிக் கல்வியில் திறன் மிக்க
ஆசிரியர்களது அர்ப்பணிப்பு மிக முக்கியமானது

நான் இந்த உலகிற்கு வரக்காரணம்
எனது பெற்றோர்கள்
இந்த உலகம் என்னிடம் வரக் காரணம்
எனது ஆசிரியர் அரிஸ்டோட்டிக்
என அர்ப்பணிப்பு மிக்க தமது ஆசிரியர்
பற்றி கூறுகின்றார் மகா அலெக்ஸாண்டர்
அது போல 21ஆம் நூற்றாண்டின் ஆசிரியர்கள்
மாணவர்கிளின் ஆற்றலைக் கட்டி
எழுப்புவதற்கான கருவி
என்றார அப்துல்கலாம்
நாம் நேற்று கற்பித்ததைப் போல்
இன்னும் கற்பிப்போம் எனில் எமது
மாணவர்களின் நாளைய நாளை
நாம் திருடிக் கொள்கின்றோம்
என்றார் ஜோன் டுயி

**நி.நிர்மல அக்ஷயா**
**தரம் 08**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றார் பெருமை

எம் கல்விச்சாலையின் முதுகெலும்பான

முதல்வர் அவர்களே,

ஆணிவேர்களான

ஆசிரியப் பெருமக்களே,

எதிர்கால சிங்கங்களே,

வருங்காலத் தங்கங்களே,

புத்தம் புது மலர்களே,

முத்து ரத்தினங்களே,

உங்கள் அனைவரையும்

என் சிரம் தாழ்த்தி வணங்கி

என் உரையை ஆரம்பிக்கின்றேன்.

கற்றார் பெருமை என்பது என் தலைப்பு.கண்ணுடையவர் என்பவர் கற்றோர்.முகத்திரண்டு புண்ணுடையவர் கல்லாதவர். இது நாயனாரின் பொய்யா மொழி அடிகள். கண்ணுடையவர்கள் எனப் போற்றப்படுபவர்கள் கற்றோர் எனவும் முகத்தில் இரு புண்ணுடையவர்கள் கற்காதவர் எனவும் கூறி கற்றார் பெருமை சாற்றுகின்றது முதுநெறி.

கற்றார் பெருமையை பெருநாவலர் போற்றி நிற்க சிறுபிள்ளை யானும் பொய்க்காமல் கற்றாரது உயர்வு பற்றிக் கூறுவதில் பெருமை அடைகின்றேன்.

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர் தூக்கின்

மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்

மன்னற்குத் தன் தேசமல்லாற் சிறப்பில்லை

கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.

செந்தமிழ் கிழவியின் மூதுரை வரிகள்.

ஒரு நாட்டின் மன்னனையும் கற்றறிந்தவரையும் ஒப்பிட்டுப் பார்த்தால் மன்னனை விட கற்றவரே சிறப்புடையவர் எனக் கூறுவதன் மூலம் கற்றோர் பெருமை கூறப்படுகின்றது.

இவ்வாறு தேர்ந்து தெளித்து கற்பதனால் கற்றவர் அடையும் சிறப்பும் மேன்மையும் அளப்பரியது. ஆதலால் இலகுவில் அடைய முடியாததாக இருப்பினும் அளப்பரிய கல்விச் செல்வத்தை அடைய முயற்சி செய்தல் அவசியமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே' எனக் கூறப்படுவதும் இதனாலன்றோ!

பயிற்சியும் முயற்சியும் அதாவது விடா முயற்சியுடன் இறுதிவரை கற்பதே நிலைத்து நிற்கக் கூடியது.

அரிய சாதனைகள் எல்லாம் வலிமையினால் செய்யப்பட்டவை அல்ல விடாமுயற்சியினால் தான் பெறப்பட்டது என பகவத் கீதை மொழிகின்றது.

தூய்மையான எண்ணம் கொண்டு கல்வி கற்று உயர்ந்த சாதனை மனிதர்கள் பற்றி கேள்விப்பட்டு இருக்கின்றோம். அவர்களே அவர்களே இன்று உலகம் போற்றும் பேரறிஞர்களாகவும் மாமேதைகளாகவும் அரிய பல கண்டுபிடிப்பாளர்களாகவும் விஞ்ஞானிகள் மருத்துவர்கள் ஆசிரியர்கள் என சிறப்புப் பெற்று மற்றோரால் மதிக்கப் பெற்று பெருமையடைகின்றனர்.

'கற்றோர் கனம் அறிவர் கனம் அறிவர் கற்றோரே கற்றறியா மற்றோர்

அறியார் வருத்தமுறப் பெற்றறியார்

வருந்தி பரிவாய் மகவைப் பெறும் துயரம்

நொந்து அறிகு வாளேர் நுவல்'

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கற்றோர் பெருமையைக் கற்றோரே அதிகம் அறிவர். கற்காதவர் அறிய மாட்டார்கள். எவ்வாறெனில் பிள்ளை பெறும் வலி குழந்தை பெற்றவளால் தான் உணர முடியும். மலடி அவ்வலியை உணருவாளோ?

எனவே தான்

'கற்றோரைக் கற்றோரே காமுறுவர்' எனப்படுகின்றது.

இறுதியாக உலகம் போற்றும் அப்துல்கலாமின் வரிகளைக் கூறி முடிப்பது சிறந்தது என நினைக்கின்றேன்.

''படிப்பால் மட்டுமே பாராள முடியும்''

உலகை ஆளும் உயர் நிலையை கற்றதால் மட்டுமே பெற முடியும் என உணர்த்தும் பொன்மொழி.சாதாரண மனிதர்கள் புதைக்கப்படுகின்றார்கள் சாதனை மனிதர்கள் விதைக்கப்படுகின்றார்கள்.

எனவே கல்வியால் சாதனைகள் பல புரிந்து பெருமையடைவோம்.....

நி.நிர்மல அஷ்மிதா

தரம் 06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவீன உலகமா? பழமை வாய்ந்த உலகமா?

நவீன உலகம் எம்மை தனது சூழ்ச்சியினால் பல தீய செயல்களுக்கு அடிமையாக ஆகியுள்ளது.நவீன உலகத்தில் வசிக்கின்ற மாணவர்கள் தொலைபேசி,தொலைக்காட்சி, போதைப்பொருள் பாவனை என்பவற்றிற்கு அடிமைப்பட்டு மிகவும் சிக்கலான வாழ்க்கைக்குள்ளே தள்ளப்பட்டு மீண்டெழ முடியாத இக்கட்டான சூழலினுள்ளே சிக்கியுள்ளனர். இவை அனைத்தும் இப்படியே தொடர்ந்து கொண்டிருந்தால் இந்நவீன உலகமானது இன்னும் சிக்கலான சூழலினுள்ளே தள்ளப்பட்டு விடும். அனைத்து பெற்றோரும் தம் பிள்ளைகள் மீது மிகுந்த அன்பு வைத்திருக்கின்றனர். ஆனால் அதை பிள்ளைகள் உணராது பல தீய செயல்களிற்கு அடிமைப்பட்டு விடுகிறார்கள்.இந்நவீன உலகத்தில் எங்கே பார்த்தாலுமா அதிநவீன கண்டுபிடிப்புகளும் இயந்திரங்களும் நிறைந்து எம் முன்னோர்கள் வாழ்ந்த பழமை வாய்ந்த உலகதை எம்மிடமிருந்து மறைத்து விடுகின்றன.எம் முன்னோர்கள் வாழ்ந்த சூழலானது மிகவும் அழகானது.இயற்கை வளங்களும் மகிழ்ச்சியும் நிறைந்த ஒரு உலகமாகும்.ஆனால் இந்த நவீன உலகம் இயற்கை வளமற்ற மகிழ்ச்சியற்ற ஆடம்பர வாழ்க்கையினுள்ளே தள்ளப்பட்ட ஒரு உலகமாக இருக்கிறது. எங்கு பார்த்தாலும் குப்பையும்,போதைப்பொருள் பாவனையும் இவ்வுலகிலே நிறைந்து வழிகின்றது. மாணவர்கள்,சிறுகுழந்தைகள் ஏன் வயது முதிர்ந்தவர்கள் கைகளிலும் எம்மை அடிமைப் படுத்தியுள்ள தொலைபேசிகள் இருக்கின்றன. தொலைபேசி இல்லையென்றால் சிறு குழந்தை கூட உனவருந்தாது. பாருங்கள் எவ்வளவு மோசமான கருவி இது. எமது முன்னோர்கள் எல்லோரும் தமது குழந்தைகளிற்கு நிலா,காகம், வின்மீன்கள் போன்ற வியப்பூட்டும் விடயங்களைக் காட்டி சோறு ஊட்டுவார்கள். ஆனால் இன்றைய குழந்தைகளிற்கு தொலைபேசியை காட்டியெல்லாம் சோறு ஊட்டத் தொடங்கி விட்டார்கள்.

பழைய உலகத்தில் நோய் நொடியின்றி ஆரோக்கியமாக உடல் சுறுசுறுப்போடு இருந்தார்கள். அவர்கள் பல வயது வரையும் இருக்கிறார்கள். அதற்கு காரணம் யாது? அவர்கள் செய்த வேலைகளும் அவர்கள் உண்ட உணவு வகையும் தான அவர்கள் பல வருடம் நிலைத்திருப்பதற்கான காரணம். ஆனால் நாங்கள் என்ன செய்கிறோம் அவர்களைப் போன்று உணவு உண்டோமா? இல்லை. வேலை செய்தோமா? இல்லை. கலப்படம் செய்த உணவையும் உண்டு எமது வாழ்க்கையை நாமே அழித்துக் கொள்கிறோம். இப்படி கலப்படம் செய்த உணவை உண்டே எமது வாழ்க்கையும் கலப்படமாக மாறி விட்டது. அந்த காலத்தில் வைத்தியசாலைகள் இல்லை இப்போது ஒவ்வொரு இடத்திலும் பல வைத்தியசாலைகள் இருக்கின்றன. இப்போது எமது உடலிலும் இயந்திரத்தை பூட்டிக்கொண்டு வாழக்கூடிய சூழலாகவே இது மாறி விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குக் காரணம் யார்? நாம் தான் இதற்குக் காரணம் சரியான உணவு வகை இல்லை உடற்பயிற்சி இல்லை இது அனைத்தும் இல்லாமற் போனதன் காரணம் நாம் உருவாக்கி விட்டிருக்கின்ற இயந்திரமே. பார்த்தீர்களா நாமே எமது அழிவைத் தேடிக்கொண்டிருக்கின்றோம்.

ஏன் நாம் நவீன உலக கண்ணோட்டத்தினுள்ளே சென்று அடிமைப்பட்டு வாழ வேண்டும்? நவீன உலகத்தை பழமை வாய்ந்த உலகமாக மாற்றுவது எமது கையிலே இருக்கின்றது. மாணவர்கள் அனைவரும் போதைப்பொருள் பாவனையை விட்டுவிட்ட வாழ்வோம்...

செல்வன்.து.அகஸ்ரன்

தரம்-09

**மணிவிழாவின் நாயகனே!**

வேரவில் மண்ணில் தோன்றி

வேரவில் இந்துவில்

விருப்புடன் கல்விதனை

விபரமாகக் கற்றுத்தேறி!

வீரசிங்கம் ம.வியில்

கலைப்பிரிவு தனில் இணைந்து

உயர் கல்வி தனை

உயர்வாகக் கற்று

கடமை உணர்வுடன்

கற்றுத்தேறி

உண்மை அன்புடன்

உறவுகளுடன் இணைந்து

கல்விப்பணிதனை

கனதியாக வேரவில் மண்ணில்

விதைகளாக விதைத்து- அதை

விருட்சமாக்கிய பெருந்தகை எங்கள் அதிபர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழின் பிறப்பிடம்

தாரகத்தின் இருப்பிடம்

காலத்தின் தேவை அறிந்து

கண்ணான தமிழ் பாடத்தை

கருத்து விளங்க கற்றுக் கொடுத்தவர்!

ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கு
அன்புடன் பேசி ஆயிரம்
அறிவுக்கதைகள் கூறி
விருப்புடன் கற்றலை
வீறாக்கியவர் எம் அதிபர்!

இந்து மகா வித்தியாலயத்தில்
இந்துவாக சேவையாற்றி
சமயச் சடங்குகளை
சரியாக நாம் ஆற்றிட
வழிகாட்டிய பெரும்தகையாளர்!
நவராத்திரி விழாவில்
நவரசம் ததும்ப
நா வண்மையுடன் ஆயிரம்
அறிவுக்கதைகள் கூறி
அறிவைப் பெருக்கிய
ஆற்றல் மிக்கோன்!

கிராஞ்சியில் இருந்து
சிரமம் பாராது
சிரத்தையுடன் தம் பணி தனை
சிறப்புடன் ஆற்றிய
சிந்தனையாளர் எம் அதிபர்!

அறிவுக்கதைகளை அன்புடன்
எடுத்துக்கூறி மாணவர் மனதை
மகிழ்ச்சிப்படுத்திய மனோதத்துவன்
மணிவிழாக் காணும் மன்னவனை
மாண்புடன் வாழ்த்துகின்றேன்
இந்நாளில் வாழ்க வளமுடனே!

செல்வி அ.தமிழ்மதி
தரம்-10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அகரம் தொட்டு சிகரம் ஏற்றுபவரே

இந்துவாய் வேரவிலில் ஆரம்பித்து
வீரசிங்கம் தனிலே கல்வியை
விறுடனே கலைப் பிரிவில் பயின்று
விதியையும் மதியால் வென்றவரே!

சைவத்தையும் தமிழையும் வளர்த்திட
ஆசிரிய சேவையை தேர்ந்தெடுத்தீர்
அளப்பெரிய சேவையில் உயர்ந்து
அதிபராய் எம் கண்முன்னே நின்றீர்கள்!

விடுகதைகள் கேட்டே எம்மை
வியப்பூட்டும் தலைவரே
விநாடி கூட வீணாக்காது
விந்தை மனிதராய் உலாவருபவரே!

தாயுமாய் தந்தையுமாய் எமை வழிப்படுத்தி
மாணவர்களோடு மாணவராகத் தானும் மாறி
சிரிப்புக் கதைகள் பல பேசி
சிந்திக்க வைக்கும் எம் அதிபரே!

தடக்கி விழும் போது தட்டிக்கொடுத்து
பட்டம் பல பெற திட்டம் பல தீட்டி
மட்டற்ற மகிழ்ச்சி நாம் பெற – நீர்
பட்ட பாடோ ஆயிரம் ஆயிரம் - யார் அறிவார்?
கொண்ட கொள்கையில் நம்பிக்கை வைத்து
பண்டைய வழக்குடன் நவீனத்தையும் புகுத்தி
முன்னோடியாய் முயற்சியாளராய் எம்மை
முன்னேற்றும் முதல்வரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகரம் தொட்டு எமை சிகரம் ஏற்றி

அகமகிழ்ந்து வாழ்த்துபவரே

அறுபது வயதினிலே நாமும்

ஆண்டவன் ஆசி பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

சி.லோகதசன்
தரம் - 10

## கற்றோர் சிறப்பு

'வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும் கீழ்ப்பால் ஒருவன் கற்பில் மேற்பால் ஒருவனும் அவன் கண்படுமே' என்கிறது புறநானூறு. 'தேவரே கற்றவர்' என்கிறது சிறுபஞ்ச மூலம். 'கண்ணிரண்டே யாவர்க்கும் கற்றோர்க்கு மூன்று விழி' என்று பகர்கிறது நீதி நெறிச்சாரம். 'கல்லாதவன் கல்லாய்க் கழிந்திருந்தான்.கற்றவனோ எல்லாளி வீசி எழில் மிகுந்து நல்மணியாய் உயர்ந்தான்' என்று தரும தீபிகை கூறுகின்றது. இவ்வாறு கற்றோரின் சிறப்பை நீதி நூல்கள் எல்லாம் போற்றுகின்றன.

## கல்லாதோர் நிலை

'கல்லாத மூடரைக் காணவும் ஆகாது' என்கிறார் திருமூலர். 'படிப்பில்லாதவர்கள் உடைகள் அணிந்த கால்நடைகள்'என்கிறது சீனப் பழமொழி ஒன்று.கல்வி இல்லாதவனை நாய்க்கு ஒப்பிடுகிறது நாலடியார். பொருள் இல்லாமை இழிவு அல்ல.கல்வி இல்லாமையே இழிவாகும். மனிதராய் பிறந்தோர் இதனை நன்கு புரிந்து கொண்டு கல்வியில் சிறக்க வேண்டும்.

## கல்வியின் பயன்கள்

ஒருவன் கற்கும் கல்வி அவனுக்கு எல்லா வளங்களையும் கொண்டு வந்து சேர்க்கும். கல்வி வந்தது எனில் கடைத்தேறிற்று உலகே!'என்கிறார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். உலகில் இன்று பல முன்னேற்றங்கள் விளைவதற்கு கல்வியே காரணமாகும்.கல்வியெனும் விளக்கால் வாழ்வில் எதிர்ப்படும் இருளையெல்லாம் விரட்டலாம்.கற்றோர் சிறப்பாகவும் கல்லாதோர் அவர்களுக்குஅவர்களுக்குப் பணியாளர்களாகவும் வாழ்வதையும் நாம் பார்க்கலாம். வறுமையை விரட்டிப் பெருமையாய் வாழ கல்வியே நமக்கு வழித்துணையாகும்.

ஈ.ஓவியா
தரம்-11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த காலத்தில் குழந்தை அழுதலால் தாலாட்டுப் பாடி குழந்தையின் அழுகையை நிறுத்துவார்கள் இப்பொழுதோ றிமோட்டை கையில் எடுத்துக் கொடுத்து விட்டால் குழந்தையின் அழுகை ஸ்விட்ச் போட்டால் போல் நின்று விடுகின்றது.வாசிப்புத் தன்மை சமூகத்தில் அருகி வருவதற்கு இதுதான் ஆரம்ப காரணம். நான்கு மாத குழந்தையை கையில் வைத்துக் கொண்டு நாம் டிவி முன் அமர்ந்தால் அந்த சிசு கண்ணிமைக்காமல் டிவி திரையை பார்க்க ஆரம்பிக்கின்றது.குழந்தையின் வாசிப்புத் திறன்குறைவதற்கு அடிக்கல் நாட்டு விழா இங்கே தான் ஆரம்பம்.வாசிப்புத் திறன் இருக்கும் குழந்தைகளுக்கு பேச்சில் தெளிவும் ஞாபக சக்தியும் கருத்தாழமும் கற்பூரமாக பற்றிக் கொள்ளும் திறமையும் பொது அறிவும் நிரம்பப் பெற்றவர்களாக அமைகின்றனர் என்பது ஆய்வாளர்கள் கூற்று.பிற்காலத்தில் அறிவு செறிந்த மாணாக்கனாக தெளிவான கருத்துடையவனாக அவனது வாழ்க்கை மேம்பட துணை நிற்கும்.வாசிப்புத் திறமை பெற்ற மாணவனுடைய செயல்களும் சிந்தனைகளும் ஞாபக சக்தியும் வாசிப்புத் திறன் இல்லாத மாணவனில் இருந்து வித்தியாசப்படும்.வாசிப்புத்திறன் இல்லாத மாணவன் பாடசாலையில் மட்டுமன்றி சமூகத்திலும் சிறப்பு நிலை அடைவதென்பது மிகவும் கடினமே. வாசிப்பின் மூலமே மனிதன் சிறப அடைகின்றான். இந்த வாசிக்கும் ஆர்வத்தை வளர்ப்பது ஒவ்வொரு பெற்றோரின் கைகளிலுமே தங்கியுள்ளதுநான்கு மாத குழந்தை டிவி திரையை நோக்க ஆரம்பித்தால் அதனை நிறுத்தி விட்டு வர்ணப்படங்கள் பூக்கள் நிறைந்த புத்தகங்களை விரித்துக் காட்டுங்கள்.குழந்தை வளரவளர புத்தகங்களின் பக்கங்களை புரட்ட கற்றுக் கொடுங்கள்.குழந்தை பேச ஆரம்பிக்கும் போது புத்தகத்தைக் காட்டி கற்றுக் கொடுத்தலை ஆரம்பியுங்கள். வாசிப்பின் ஆர்வம் தானாகவே ஆரம்பித்து விடும்.குழந்தையின் பிறந்த நாளா ?வீட்டில் விஷேசமா? பொம்மை,வீடியோ கேம் செற்,விளையாட்டு சாதனங்கள் என்று வாங்கிப் பரிசளிப்பதில் காட்டும் ஆர்வம் புத்தகம் வாங்கி பரிசளிப்பதில் இல்லை என்பது கவலை தரும் விடயமாகும்.ஒரு புத்தகத்தை முழுமையாக படிக்க வேண்டிய நேரத்தில் முழுதான திரைப்படங்களை கணினியில் பதிவிறக்கம் செய்து பார்த்து விடுவது இன்றைய காலத்தின் கோலமாகும். ஒரு மாணவனை பரிபூரணமானவனாக உருவாக்க அம்மாணவனின் வாசிப்புத்திறனை அதிகரிக்க இணையத் தளங்கள் வழிகாட்ட வேண்டும். வீட்டில் விஷேசமென்றதும் ரெஸ்ரோரண்டுக்கு சென்று கற்றை கற்றையாக பணத்தை கொடுத்து உண்டு மகிழ்வதை விட சற்று வித்தியாசமாக ஒரு புத்தக கடைக்கு அழைத்துச் செல்லுங்கள். வயிறு நிரம்புவதை விட மூளை நிரம்புவது நன்றல்லவா!ஸ்விம்மிங் ,டென்னிஸ்,கிரிக்கெட் கிளப்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கத்தவராக சேர்வதிலுள்ள ஆர்வம், நூலக அங்கத்தவராக சேர்வதில் இல்லையே! சிந்தியுங்கள் சிறப்படைவீர்கள்! குழந்தைகள் இன்னாள் விதைகள். பின்னாள் விருட்சங்கள். எதிர்காலத்தில் மரச்சட்டங்களாகவோ, அடுப்பெரிக்க விறகுகளாகவோ ஆகாமல் நிழல் தந்து காற்றை சுத்தப்படுத்தும் சமூகத்திற்கு நன்மை பயக்கும் விருட்சங்களாக ஆற்றல் பெற வேண்டும் என்ற உண்மையை உணர்ந்து வாசிப்புத் திறனை சிறப்புடன் வளர்த்து வாழ்க்கை எனும் இனிய பயணத்தை பயனுள்ள வகையில் கழிப்போம்.

சி.சிவானுஜன்
தரம் 11

**கவிதை**

கல்லை சிலை ஆக்குவது சிற்பி
மண்ணை பானை ஆக்குவது குயவன்
கற்பனையை ஓவியம் ஆக்குவது ஓவியர்
ஒரு மாணவனை வெற்றியாளராக ஆக்கியது ஆசிரியரே!
உன்னால் உருவாகிய மாணவர்கள் எத்தனை எத்தனையோ!
மாணவர்கள் கல்விகற்க நீ உன் கால்கடுக்க நின்றாய்
புத்தக கல்வியோடு சேர்த்து பொது அறிவையும் கற்பித்தாய்
மாணவர்களின் திறமையை ஊக்குவித்தாய்
வழிகாட்டியாகவும் இருந்தாய்
எத்தனை சாதனையாளர்களை உருவாக்கியுள்ளாய்
என்னபதற்கே கணக்கே இல்லை
உன் உழைப்பிற்கு ஈடு இவ்வுலகில் எதுவும் இல்லை
நீங்கள் னயனய ஆக இருப்பினும்
ஒரு நல்ல னயன ஆக இருக்கிறாய்
எழுத்தின் வித்தியாசத்தை பொறுத்து அல்ல
எண்ணத்தின் வித்தியாசத்தை பொறுத்தே
ஆலமரத்தடியில் கற்பித்து
ஆகாயம் முழுக்க வியாபித்து
ஆற்றல் இழக்க உரைத்து
ஆறாம் அறிவை வளர்த்து
ஆசை ஆசையாய் அணைத்து – அந்த
ஆசானை கொஞ்சம் நினைத்து
ஆருயிர் உள்ள வரை மதித்து – ஓர்
ஆசை மனதில் உதித்து சொல்கிறேன்
ஆசானே வாழ்க!
நினைவலைகள்
நீட்சி பெறுகிறது
யான் பெற்ற
கல்வி கொடுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் ஆசிரியப்
பெரு மக்களை
நினைத்துப் பார்த்து
எழுத்தறிவித்து எண்ணறிவித்து
யாம் எண்ணிய திசையறிந்து
கருத்தில் கை பிடித்து
தளர் நில வாய்க்காலில்
வளர் நில அறிவு பாய்ச்சி
வாழ்வை செதுக்கி வைத்த
சிற்பிகள் அவர்கள்
எம் சிந்தகைகளை செம்மையாக்கி
வாழ்வியல் எதார்தங்களை
வாழ்வியல் நெறிகளினூடே
தேட வைத்து
வழமைத் திசைகளை
வாழ்க்கைப் பாதையில்
வழிக்குக் கொண்டுவந்த
திறன் தோய்ந்த
தியாகச் செம்மல்கள் அவர்களே!
ஆரம்பம் தாம் ஞானம்

இல்லாதோர்க்கு
ஈகை தாம்
உள்ளத்தின்
ஊனத்தை போக்குவோர் தாம்
எண்ணத்தின் ஏணிப்படி தாம்
ஐயத்தை ஒடுக்க செய்பவர் தாம்
எல்லாத்துக்கும் மிக்க நன்றி ஐயா!
உங்கள் சேவைக்கு
நீங்கள் தந்த கல்விக்கு

நன்றி சொல்வது மட்டும் போதாது

நான் என் ஆயுள் முழுவதும்

உங்களுக்கு கடமைப்பட்டுள்ளேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் சேவையை என்றும்
மறக்க மாட்டேன்
நன்றியுடன் உங்களை
நினைத்துப் பார்க்கும்
உமது ஆயுளும்
பணியும் நீடிக்கட்டும்
தாய் மொழி தமிழைப்போலவே!

நீக்கிலாஸ் மேரி கிறிஸ்ரினா
வலைப்பாடு

**பணி ஓய்வுபெறும் அதிபருக்கு கவிதை சமர்ப்பணம்**

அன்னைக்கு மேலான
அரவணைப்பு தந்தீர்
அறியாமையை போக்கும்
அருந்தொண்டு செய்தீர்
உயரிய பணியை
உயிர்ப்புடன் செய்தீர்
ஊக்கம் அளித்து
உயரத்தை கண்டீர்....

எண்ணும் எழுத்தும்
எண்ணத்தில் விதைத்தீர்
ஏணிப்படியாய்

ஏற்றம் தந்தீர்
பணி ஓய்வு என்பது
பொருந்தாச்சொல்லே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசானுக்கு என்றும்
ஓய்வே இல்லை

அன்பால் வெல்லும்
அற்புதக் கதை கலையால்
உள்ளம் கவர்ந்த
அன்னையும் நீரே!
ஆயிரம் மாணவர்களின்
அன்னையும் நீரே!
அதிபர் பணியின்
அர்த்தமும் நீரே
பாடசாலையை
கருவறையாக்கி

கலைவாணி நீரே!
அர்ப்பணிப்பு உணர்வோடு
அறப்பணியை செய்தீர்கள்
அப்பணியில் நாங்கள் சிறக்க
அடிக்கடி வாருங்கள்...
உங்கள் பாதம் பதித்து செல்லுங்கள்
எங்கள் ஏற்றம் கண்டு மகிழுங்கள்

உங்களுக்கான நேரம் இது...
பிடித்த வாழ்க்கையை இரசித்து வாழ்ந்திட
புதிய உலகம்
கம்பளம் விரித்து
காத்திருக்கிறது
தொடருங்கள் புது வாழ்க்கையை
நீங்கள் நீங்களாக வாழ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் தரும் ஓய்வு இது

காலத்தை வெல்வீர்

காவியம் படைப்பீர்!

நா.பருஸ்திரா

தரம் 08

**கல்விப் புலத்தில் மாணவர்கள் காணும் சாதனையை பாராட்டுதல் தவறாகுமா?**

சாதனை என்பது செயற்கரிய செயலைச் செய்வதாகும். சமகாலத்தில் சாதனை புரிபவர்களை பாராட்டுதல் என்பது வழமையான நடைமுறையில் அமைந்து விட்டது.சிறியவர்கள் முதற்கொண்டு பெரியவர்கள் ஈறாக பாராட்டு மழையில் நனைவதற்கு ஏங்கித் தவித்தல் என்பது வெளிப்படையான உண்மையாகும்.இந்த நல்ல செயல்களை பிறர் பாராட்டுகையில் மனம் மகிழ்வு கொள்ளும்.மனிதர்களை பாராட்டுதல் இயல்பானது.அவை நிகழ்த்தப்பட்ட சாதனைகள் சமூகத்திற்கும் நாட்டிற்கும் நன்மை தருபவையாக அமைய வேண்டும்.

உலக மயமாக்கல் செயன்முறையில் உலகம் இன்று எங்கோ சென்று கொண்டிருக்கின்றது. தற்கால அறிவியல் யுகத்தில் பல புதிய கண்டுபிடிப்புக்கள் உயர்வு கண்டு நிற்கின்றன. இத்தகைய கண்டுபிடிப்புக்களை மேற்கொள்பவர் சமூக நன்நோக்கம் கருதியே தமது ஊழியத்தை மேற்கொள்கின்றனர். பாராட்டுதல்கள் பெற வேண்டும் என்பதற்காக மட்டும் தமது சாதனைகளை ஒருபோதும் இவர்கள் நிகழ்த்துவதில்லை. தமது முயற்சியினால் மக்கள் நன்மையடைய வேண்டும் என்ற இலட்சிய கனவு இவர்களது சாதனைகளில் இழையயோடியிருப்பதை காணமுடியும். ஆனால் எம்மவர்களே சுயலாபம் கருதி நடை பயில்கின்றனர். பாராட்டு பெறுவதற்கு குறுக்கு வழிகளில் ஆதாயம் தேடி நகர்கின்றனர்.

நாட்டில் நடைமுறையிலுள்ள கல்விமுறையின் சமகாலப் போக்குகளை அவதானிக்கையில் பல்வேறு குறைபாடுகள் இருப்பதை காணமுடிகின்றது.கல்வியாளர்களும் கல்விக் கொள்கையாளர்களும் வேலை உலகிற்கேற்ப கல்விக் கொள்கைகளை வகுக்காமை பெருங்குறைபாடாகும்.மாணவர் கற்றலுக்கான சுதந்திரம் மறுக்கப்பட்டு திணிக்கும் கல்வி ஊட்டலே முதன்மை பெறுகின்றது.பரீட்சையில் உயர் பெறுபேற்றை பெறுதல் என்ற நோக்கின் அடிப்படையில் பெற்றோர்களின் கனவு மெய்ப்பட வேண்டும்.ஆசிரியர்களின் ஆசைகள் நிறைவேற வேண்டும்.எல்லோரும் பாராட்ட வேண்டும் என்ற சிறுமைத்தனமான நோக்கங்கள் முனைப்புப் பெறுகின்றன. ·ூரநோக்கற்ற கல்வி முறையாக அமைந்து சமூகத்தின் சாபக்கேடாக மாற்றம் தர எதத்தணிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக பரீட்சைக்கால நிலைமைகளின் போது மாணவர்களை பாராட்டுவது இயல்பு.ஆனாலும் ஆசிரியர்கள் சிலர் தம்மிடம் கற்ற மாணவர்கள் உயர்ந்த பெறுபேற்றை பெறும்போது அவர்களை சமூக வெளியில் கருத்தூட்டும் பத்திரிகைகள் வாயிலாக பிரசுரித்து பாராட்டி வாழ்த்துகின்றனர்.இந்த நிலைமைகள் ஆசிரியர்கள் தமக்கான புகழை மறைமுகமாக தேடிக்கொள்ளும் செயல்நிலையே.

நிலத்தை நன்கு கொத்தி கிளறி பயன்படுத்தி வளம் நிறைந்ததாக மாற்றும் போதே அது விதைகளின் முளைதிறன் வீதத்தை அதிகரிக்கின்றது. ஒரு விதை செடியாகுவதற்கு தனியே விதையை வைத்து மதிப்பீடு செய்ய முடியாது.ஆரம்பத்தில் மரத்தின் வளர்ச்சியை நிலம்,சூழல் எத்தகைய பங்களிப்பை வழங்குகின்றன என்பதைப் பொறுத்தே எதிர்காலத்தில் மரத்தின் சிறப்பான வளர்ச்சி தங்கியுள்ளது. இதனை மாணவராகக் கொண்டு ஆசிரியர்களையும்,ஆசிரியர்களின் பாராட்டுக்களின் முக்கியத்துவத்தையும் கூறமுடிகின்றது.


அ.அபிஷன் குரூஸ்
தரம் 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகன் நிகழ்வுகளின் போது



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துசி பல்பொருள் வாணிபம்
THUSI MULTI SHOP



மாதிரி கிராமம்
வேரவில்
பூநகரி.

தொ.இல 0779362050

யஸ்வினன் உணவகம்



நியாயமான விலையில் தரமான உணவுகள்

வேரவில்,
பூநகரி.

தொ.இல 0766196622

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் பல்பொருள் வாணிபம்
# YAL MULTI SHOP



மன்னார் வீதி,
முழங்காவில்.

தொ.இல 0777496266



# பனா பல்பொருள் வாணிபம்
# PANA MULTI SHOP



உரிமையாளர்- க.காந்தரூபன்

வேரவில், பூநகரி.

தொ.இல- 0778707200/0777870739


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைச்சல் தொழிலகம்



சகல விதமான கடைச்சல் வேலைகளையும் பெற நாடவேண்டிய இடம்

ஏ9 வீதி, பரந்தன் சந்தி,
பரந்தன்.

தொ இல: 0775250349

# முகுந்தன் கடைச்சல் தொழிலகம்






கனகபுரம் வீதி,
கிளிநொச்சி.

தொ.இல: 0775072258



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனோஜன் மோட்டோர்ஸ்

## THANOJAN MOTORS

**HERO BAJAJ HONDA YAMAHA TVS SUZUKI**




**தனோஜன் மோட்டோர்ஸ்**

**மன்னார் வீதி**

**நாச்சிக்குடா சந்தி**

**முழங்காவில்.**

தொ.இல 0771048124 /0775510282





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லி பல்பொருள் வாணிபம் - அல்லி டெக்ஸ்



நியாயமான விலையில் தரமான பொருட்களை பெற்றுக்கொள்ள

உரிமையாளர்: ப.அல்லி

கிராஞ்சி,சிவபுரம்

தொ இல 0774517830

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேசவ விழுது



## மணிவிழா சிறப்பு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org